ॐ

# வைதிக வித்தகர்
# வியாகரண சிரோமணி
# பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள்
## -சில நினைவலைகள்-


ஆக்கம்:-

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்** B.A (Hons)

ஒப்பந்த விரிவுரையாளர்,

சம்ஸ்கிருதத்துறை,

யாழ். பல்கலைக்கழகம்.



வெளியீடு:

**நியந்த்ரீ**

சிவன் கோவில்

நல்லூர்

யாழ்ப்பாணம்

இலங்கை

2001

ௐ

# வைதிக வித்தகர்
# வியாகரண சிரோமணி
# பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள்
## -சில நினைவலைகள்-


ஆக்கம்:-

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்** B.A (Hons)

ஒப்பந்த விரிவுரையாளர்,

சம்ஸ்கிருதத்துறை,

யாழ். பல்கலைக்கழகம்.



வெளியீடு:

**நியந்த்ரீ**

சிவன் கோவில்

நல்லூர்

யாழ்ப்பாணம்

இலங்கை

2001

பதிப்புரிமையுடையது.


**பதிப்பு:-** மார்ச்-2001

**பிரதிகள்:-** 200

**வெளியீடுகள்:** *நியந்த்ரீ*
சிவன்கோவில்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**கணனி வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்:**

***பிள்ளையார் அச்சகம்***,
676, பருத்தித்துறைவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.



வைதிக வித்தகர்
வியாகரண சிரோமணி
பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள்

உ

சிவமயம்

## திருக்கேதீஸ்வரம் சிவஸ்ரீ ச.சுப்பிரமணியப்பட்டர் அவர்களின்

# ஆசியுரை

கடந்த அறுபத்தைந்து வருட வாழ்க்கையிலே என் நினைவுக்குவந்த காலங்களில் குறப்பிடக்கூடியவர் இறைவனது பாதக் கமலங்களில் பதிந்து விட்ட வைதிககிரியாஞானபானு வியாகரணசிரோமணி சீதாராம சாஸ்திரிகள் அவர்களது நினைவுத் தடங்களைத் தீண்டும் இந்நேரமும் மெய் சிலிர்க்கின்றது.

அள்ளிச் செருகிய குடுமியும், "நெற்றி நிறைந்த விபூதிக் கீற்றுக்களின் நடுவே நெற்றிக் கண்ணாய் சந்தனப் பொட்டும்" வெண்ணிறச் சால்வை போர்த்திய திருநீற்று மேனியரும், "சதா காலம்," "முருகா முருகா" என்று உச்சரித்துக் கொண்டே இருப்பவருமான அவரது தெய்வீகத் தோற்றம் இன்றும் பசுமையாக நினைவில் கொள்ள முடிகின்றது.

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் நான் பணி செய்து கொண்டிருந்த காலம் அது. மாலை நேரம் ஐந்து மணியானால் போதும் - தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தின் முன்னமர்ந்து கம்பீரமான குரலில் அக்ஷரசுத்தம் பிசகாமல் ஸ்ரீருத்ரத்தைப் பாராயணம் செய்வார். அவரது கம்பீர ஒலி கோவில் பிராகாரம் பூராவும் எதிரொலித்துக் கோவிலுக்கு வெளியேயும் கசிந்துவரும். அந்த மோனநிலையில் கட்டுப்படாதவர் எவருமில்லை.

பாராயணத்தின் இறுதியில் "பன்னிரு கரத்தாய் போற்றி" என முருகனை உளங்கசிந்து கண்ணீர் மல்க அவர் போற்றித் துதிக்கும் போது நானும் லயிக்காத நாளில்லை. அந்தப் பாராயணமும் உருக்கமான முருகன் துதியும் வருஷங்களின் முழுநாட்களுமே தவறாது.

வைதிகக் கிரியைகள் பற்றிய விளக்கமானாலும் சரி, ஜோதிஷ விளக்கமானாலும் சரி, சம்ஸ்கிருத இலக்கிய இலக்கண விளக்கமானாலும் சரி ஆசானாய் அவரது வழிகாட்டலுக்கு அவருக்கு நிகர் அவரே.

என் குடும்பத்தின் இனிய நண்பராய் மட்டுமல்லாது நம் குழந்தைகளின் விசேஷங்களுக்கும் உபாத்யாயம் செய்து இருக்கின்றார். முல்லைக் கொடி படர்ந்த தண்ணிழல் செறிந்த அவரது வீட்டுமுற்றம் எந்நேரமும் அறிஞர்சபை என நிரம்பி இருக்கும். அவரது இல்லத்திற்கு நான் அடிக்கடி சென்றதுண்டு. குளிர்ந்த மோரைப் பருகியபடியே அவரிடம் சம்ஸ்கிருத இலக்கிய விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரம் போவது தெரியாது.

அச்சுவேலியில் இருந்து பெரியவர் குமாரசுவாமிக் குருக்கள் தான் எழுதிய நூல்களின் பிரதிகளில் இலக்கண சுத்தத்தை பரிசீலிப்பதற்கும், ஏட்டுப் பிரதிகளை சரி பார்ப்பதற்கும் அடிக்கடி இவரிடம் வருவதுண்டு. இவரும் அவரிடம் ஆகமங்களின் விளக்கத் தெளிவுகளைப் பெற்றுக் கொள்வார். அவ்வேளைகளில் இவருடைய -சாஸ்திரிகளுடைய- வியாகரண வித்வத்தை நேரில் பார்த்து அனுபவித்து வியந்து போயிருக்கின்றேன். அச்சுவேலிப் பெரியவரின் பேரனான கனகசபாபதிக்குருக்களைத் தனது இன் மாணாக்கனாகப் பெற்றதோடல்லாமல் எனது மகளுக்கு அவரையே திருமணம் செய்து வைத்துள்ளார்.

நான் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்குப் பணிசெய்யும் பாக்கியம் பெற்று திருக்கேதீஸ்வரத்தில் இருந்த காலங்களில் அவரது அண்மையை இழந்து தவித்த நாட்கள் பல. அவ்வாறு நினைக்கும் தோறும் தெய்வ சங்கற்பமாக அவர் ரெயிலில் மாதோட்டம் புகையிரத நிலையத்துக்கு வந்து சேர்ந்ததும் எனது சைக்கிளில் அவரை ஏற்றிக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் கூட்டி வருவேன்.

கேதீஸ்வரப் பெருமான்மீது அளவற்ற பக்தி கொண்டிருந்தார் அவர். முதன்முதலில் சிவபெருமானுக்கு சுப்ரபாதம் இயற்றிப் பாடிய பெருமை அவரையே சாரும். அவரியற்றிய கேதீஸநாத சுப்ரபாதம் இன்றும் பல சிவன் கோவில்களில் அந்தண சிரேஷ்டர்களால் பாராயணம் செய்யப் பெறுவதை நான் அறிகின்றேன்.

சாஸ்திரிகள் எழுதிய சம்ஸ்கிருதசிக்ஷாப்ரதமசோபானம் சம்ஸ்கிருதத்தைப் பயில விரும்பும் எவருக்கும் எளிமையான வழிகாட்டி நூல்களாகும்.வைதிக உபாத்யாயம், வியாகரண (சம்ஸ்கிருத)விசாரம், ஆன்மீக வழிகாட்டல் என்பதில் அவர் தனக்கென ஓரிடத்தை அமைத்துக் கொண்டவர்.

அன்னாரது பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேத்தியர் எல்லோரும் பெரும் பாக்கியம் பெற்று சகல சௌபாக்கியங்களும் நிறைந்து சமூகத்தில் மேன்மை பெற எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமானை நினைந்து ஆசி கூறுகின்றேன்.

- சுபம்-

**ச. சுப்பிரமணியப்பட்டர்**
திருக்கேதீஸ்வரம்

ராமகானசபை,
418, காலி வீதி,
கொழும்பு- 06
08-03-2001.

உ

ஓம் தத்ஸத்

## எமது குருநாதர் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள்

குருப்பிரம்மா குருர் விஷ்ணு: குருதேவோ மகேஸ்வர:/
குரு: சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம://

எமது பிராமண குலத்து அனைத்து மக்களுக்கும் சமய கிரியா விளக்கங்களை அன்பு பரிவுடன் கற்பித்த பெருமைக்குரிய உபாத்தியார் அவர்களை என்றும் நாம் மறக்க முடியாது. அன்னாரின் ஆத்மீக உணர்வு, இறைபக்தி சந்தியாவந்தனம், பூஜைகள், நியமம் என்பன தவறாத உத்தம ஆசாரசீலராக அமைந்த ஞானியாக எங்கள் சமூகத்தின் நலம் கருதி எம்மை வழிப்படுத்தி தற்போது மக்கள் முன் ஆலயக்கிரியைகளைத்திறம்பட நடத்தக் கூடிய தத்துவ ஞானி; ஒளியை எமக்கு போதனை செய்த உத்தமர் எனலாம். அன்னாரின் பராபக்குவம் அன்பு, அகிம்சை, உபசரிப்பு, கல்வியை ஆர்வமாக பிள்ளைகளாகிய எமக்கு அன்பாகவும் அறிவுரையாகவும் வெகுவிரையில் விளக்கம் தந்து இந்த நிலைக்கு ஆளாக்கிய பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய அவதாரபுருஷர் எனலாம். அவரது பூஜை, ஜபம், பத்ததி வாசிக்கும் போது அவரின் உன்னதமான தோற்றமும் அக்ஷரசுத்தியும் யாவருக்கும் புரியும்படி அன்பாகவும் இரசிப்பாகவும் வாசிக்கும் தன்மை மாத்திரம் அல்ல இடையில் கிரியா விளக்கங்களையும் மக்கள் புரியும் படியும் மக்களுக்கு பக்தி ஏற்படும் படியும் விளக்கம் கூறும் போது மக்களின் உள்ளங்கள் பூரிப்பு அடைவதுடன் மாத்திரம் அல்ல பக்தியையும் பெறக் கூடியதாக ஒரு திருஅவதாரபுருஷன் என்பதே எமது உணர்வில் காணக்கூடியதாக விளக்கம் கூறப்படும் தன்மை வாய்ந்த ஒரு திரு அவதாரபுருஷன் என்பதே எமது உணர்வில் காணக்கூடியதாக அமைந்தது. அந்தப் பெரியாரின் பரிவான கற்பித்தலால் தான் நாமும் இந்த உலகில் சிறிது புகழுடன் வாழ்க்கை நடாத்த வழிவகுத்த பெரும்புலமை நிறைந்த அருள்ஜோதி என்றே தினமும் வணங்க வேண்டிய பெருமைக்குரிய உத்தமகுண சீலராவார். கல்வி அறிவு அதை மாணவர்கட்கு கற்பித்து விளக்கம் நடாத்த வழிவகுத்த பெரும்புலமை நிறைந்த அருள்ஜோதி என்றே தினமும் வணங்கவேண்டிய பெருமைக்குரிய கொடுக்கும் பரிவு ஆத்மஞானி உணர்வு போன்ற போதனைகளை மாணவர்களுக்கும் சிவத்தமிழ் ஆசிரியர்களுக்கும் மக்களுக்கும் விளங்கவைத்து உபதேச மொழி மூலம் மக்களின் உள்ளங்களில் பதியக்கூடிய விடைதரும் உத்தம குரு எனலாம். அன்னாரின் இழப்பு எமக்கும் பிராமண குருமார்

சிறார்கள் ஆலய கிரியைகளின் உயர்வுக்கும் சமயபோதனைகட்கும் பெரும்பாரியதூக்கம் எனலாம். மாண்பு மிக்க எமது உத்தம குருநாதரும் எமக்கு ஞான உணர்வை தந்து எம்மை வழிப்படுத்திய பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் பாதாவிந்தங்களை வணங்கி பிரார்த்தனை செய்து இக்கட்டுரையை அன்புடன் சமர்ப்பிக்கின்றேன். அப்பெருமானின் உபதேசமும் எமக்கு அளித்த கல்வியும் ஆசியும் எம் முன் ஜோதி ரூபமாக மிளிர்கிறது எனலாம். அன்றும் இன்றும் ஒருகிரியை ஆரம்பிக்கும்போது அவரின் திருவாக்கு மனதில் வைத்துத்தான் நான் ஆரம்பிக்கும் வழமையை கொண்டு இருந்து வருகின்றேன். அன்னாரை நினைத்து துதித்து ஆரம்பிக்கும் கிரியைகள் விச்சின்னமில்லாது எம்மை வழி நடாத்தும் என்ற நம்பிக்கை எமக்கு நிறைவு காண்கிறது. அவரது ஆத்மஞான உணர்வும் ஆசாரமும் பக்தியும் என்றும் சைவ உலகையும் பிராமண உத்தமர்களுக்கு அமைதியும் விருத்தியும் வித்தியாவிவேகமும் நிறைய உண்டு எனலாம். அருள் தெய்வமாக விளங்கும் அவர் தர்மபத்தினி அம்மா அவர்கட்கும் எமது நமஸ்காரங்கள்

சுபம்

'லோகா: சமஸ்தா: சுகினோ பவந்து'

**சுவாமி.விஸ்வநாதக்குருக்கள்.**

42/9, சுவிசுத்தாராமவீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
05-03-2001.

# அணிந்துரை

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்**
**நியந்த்ரீ, சிவன்கோயில், நல்லூர்.**

யாழ்ப்பாணப்பிதேசத்தில் வைதிகப்பண்பாட்டின் வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தகை வைதிக வித்தகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி சீதாராம சாஸ்திரிகள் அவர்களாவர் (1912- 1988). வைதிக்கல்வி, வைதிகக்கிரியைகள். வேதபாராயணம் , வியாகரணம், காவியம், சோதிடம் போன்ற பல்வேறு துறைகளில் புலமைத்துவம் மிக்க பெரியாராகத் திகழ்ந்தவர். இத்துறைகளில் எழும் எத்தகைய ஐயங்களையும் தெளிவுபடுத்தும் ஆற்றல் மிக்கவர். வைதிகப் பண்பாட்டுத்துறையைப் பொறுத்தமட்டில் சிறந்ததொரு வழிகாட்டி. குருகுலக் கல்விமரபை உருவாக்கி ஆற்றல்மிகு மாணவப் பரம்பரையை உருவாக்கியவர். இவரது மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அமரர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள். தமிழகத்திற்கும் எமது நாட்டிற்கும் வைதிகக் கல்வியில் இணைப்புப்பாலமாகத் திகழ்ந்தவர் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள். இத்தகைய பெருமைமிக்க பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளது வாழ்க்கை வரலாறு, கல்வி, குடும்பவாழ்க்கை, சமயப்பணி, கல்விப்பணியில் சிறப்பாக பரமேஸ்வராக்கல்லூரி, சுன்னாகம் பிராசீன பாடசாலை, பிராமண சமாஜம், நாவலர் சபை ஆகியவற்றில் மேற்கொண்ட ஆசிரியப்பணி, சம்ஸ்கிருத நூல்கள் வெளியீடு, ஆகமஞானம் போன்ற பல்வேறு அம்சங்களை விளக்குவதாக ***வைதிக வித்தகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் - சில நினைவலைகள்*** என்ற நூல் பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் அவர்களது ஆக்கமாகவும், நியந்தரீ அமைப்பின் வெளியீடாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்நூலாசிரியரின் இம்முயற்சியை முதற்கண் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலை யாவரும் மனமுவந்து வருவேற்பர் என்பதில் ஐயமில்லை.

இந்நூலாசிரியர் பிரம்மஸ்ரீ பத்மநாபன் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது மாணவர்களுள் ஒருவர். என்னிடமும் கல்வி கற்ற மாணவர். இந்நூலினை எழுத சகல நிலைகளிலும் ஆற்றலும் தகுதியும் வாய்ந்தவர்.பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளின் மகள் ஸ்ரீமதி பார்வதி குமாரசுவாமிசர்மா மற்றும் அவரது கணவர் பிரம்மஸ்ரீ இ.குமாரசுவாமிசர்மா ஆகியோரின் அன்புவேண்டுகோளை ஏற்று ஆசிரியர் இந்நூலை ஆக்கியுள்ளார். இந்நூலிற்குரிய சகல நிதி வளங்களையும் இத்தம்பதியினரே பொறுப்பேற்று வியாகரணசிரோமணியின் வாழ்க்கை வரலாறு எதிர்காலச் சந்ததினர்க்கு பயன்படத்தக்கவகையில் இந்நூல் அமையவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நூல் வெளியீட்டில் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளனர். மேலும் இந்நூல் வெளியீட்டில் சாஸ்திரிகளின் புதல்வன் பிரம்மஸ்ரீ சீ. கோமதிரமணபாலசுப்பிரமணியசர்மா அவர்களும் பெரிதும் ஈடுபாடு காட்டியவர்.

இந்நூல் சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினை எமக்குச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதோடு எமது சமய பாரம்பரிய வளர்ச்சிக்கு அன்னார் ஆற்றிய அளப்பரிய பணிகளை வகுத்துக்கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளின் மாணவர் பேராசான் அமரர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது மாணவனாக விளங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அதனையடுத்த மாணவ பரம்பரையினரில் ஒருவராக பிரம்மஸ்ரீ பத்மநாபன் விளங்குகின்றார். இத்தகைய சிறந்ததொரு குருகுலப்பரம்பரையின் சிறப்பையும் தொடர்ச்சியையும் எதிர்காலத் தலைமுறையினர்க்கு காட்டும் ஒரு சிறந்த படைப்பாக இந்நூல் அமைகின்றது.

இத்தகைய நூல்களை எமது சமூகத்தவரின் நன்மை கருதி வெளியிட்டு வைப்பதை தமது இலட்சியமாகக் கொண்ட நியந்த்ரீ அமைப்பினர் என்றென்றும் பாராட்டுக்குரியவர்கள். இந்நூலாசிரியரும் நியந்த்ரீயின் செயற்குழு உறுப்பினராவர். பிரம்மஸ்ரீ குமாரசுவாமி சர்மா நியந்த்ரீயின் துணைத்தலைவர்களுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலாசிரியருக்கும் இந்நூலை முறையே தந்தையினதும் மாமனாரினதும் நினைவாக வெளியிட முன்வந்த ஸ்ரீமதி. ஸ்ரீ. குமாரசாமிசர்மா தம்பதியர்க்கும் மற்றும் இந்நூல் வெளிவர சகல நிலைகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும் நியந்த்ரீ அன்னையின் திருவருள் பொலிவதாகுக! என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலின் விற்பனையினால் வரும் நிதியினை இத்தம்பதியினர் நியந்த்ரீயின் வளர்ச்சிக்கென அப்பணித்துள்ளமை ஒரு பொருத்தமானதும் போற்றப்பட வேண்டியதுமான விடயமாகும். அதற்காக நியந்தரீயின் சார்பில் அத்தம்பதியினர்க்கும் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளின் குடும்பத்தினர்க்கும் எம் மனமுவந்த நன்றிகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்நூலை வெளியிட உதவும் நியந்த்ரீ செயற்குழுவினர்க்கும் எம் மனமுவந்த நன்றிகள்.

இந்நூல் எமது வைதிகப் பாரம்பரியத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைவதாகுக. நூலாசிரியர் பிரம்மஸ்ரீ பத்மநாபன் இதுபோன்ற பயனுள்ள பல நூல்களை எதிர்காலத்தில் வெளியிட்டு சம்ஸ்கிருத கல்வி வளர்ச்சிக்குத் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்ளவேண்டு மென ஆசிகூறுகின்றேன். எமது பிரதேசத்தில் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் காட்டிய வழியில் வைதிக மரபும் பண்பாடும் தொடர வேண்டுமென நியந்த்ரீ அன்னையின் அருளாசியை வேண்டிநிற்போமாக!

சிவன் கோயில்,
நல்லூர், **பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
யாழ்ப்பாணம்,
07 – 04 – 2001.
பங்குனி உத்தர
பூரணை நன்னாள்..

ௐ

# முகவுரை

யாழ்ப்பாணத்து சைவப்பாரம்பரியத்தில் இந்து சமூகத்திற்குப் பெரும்பணியாற்றி தமது வாழ்நாளை அர்ப்பணித்ததோடு; அந்தணர் சமூகத்தில் வைதிகம் சிறந்துவிளங்க பெரும் காரணராக விளங்கிய சிறப்பினை **வைதிக வித்தகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராமசாஸ்திரிகள்~ சில நினைவலைகள்** என அப்பெரியாரின் சம்ஸ்கிருதமொழி மூலங்களைக் கொண்ட அரும்பணிகளை நினைவுபடுத்தி நூலுருவில் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணச் சமுதாயத்தில் வைதிக சைவம் மேலோங்கச் செய்த அப்பெரியாரின் நினைவுகளை; அதே பாதையில் சமுதாயத்தினை நன்கு வழிநடாத்திச் செல்லும் நியந்த்ரீயின் வெளியீடாக அப்பெரியாரின் பணிகளை வெளிக்கொணருகின்றது. இது போன்று நியந்த்ரீ இனங்கண்டு செய்துவரும் சேவைகள் பல.

யாழ்ப்பாணத்தில் எமது குருபாரம்பரியத்திற்கு பெரியவிருக்ஷமாக விளங்கியவர் எனது குருநாதர் வாழ்நாட்பேராசிரியர் இலக்கியகலாநிதி பிரம்மஸ்ரீ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள். அவ்விருக்ஷத்தின் கிளைகளாக, வித்துக்களாக வந்த எமக்கு ஆணிவேராகத்திகழ்ந்தவர் வைதிகவித்தகர் வியாகரணசிரோமணி பிரம்ஸ்ரீ தி.கி.சீதாராமசாஸ்திரிகள் அவர்கள். அவர்களின் நினைவுகளை குருசிஷ்ய பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் வகையில் நினைவு கூருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அத்தகைய இந்நூலுக்கு எம்மையும், நியந்த்ரீயையும் வழிநடாத்தும் எமது குருநாதர் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ.ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் அணிந்துரை வழங்கி ஆசீர்வதித்துள்ளார்கள். அப்பெருந்தகைக்கும், எனது குருமரபினர்க்கும் எனது பணிவான நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாண சமூகத்தின் நிலையினையறிந்து இந்நூல் வெளிவரவேண்டும் எனப் பேருவகையோடு முன்வந்தவர்கள் சாஸ்திரிகளின் மகள் மருமகன்தம்பதிகளான ஸ்ரீ.ஸ்ரீமதி பார்வதி குமாரசாமிசர்மா தம்பதிகளாவர். அவர்களுக்கும் இந்நூல் உருவாகுவதற்கு ஒத்துழைத்த நியந்த்ரீயின் உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இந்நூலை நூலுருவாக்கி அச்சுப்பதித்து உதவிய பிள்ளையார் அச்சகத்தினருக்கும் மனப்பூர்வமான நன்றிகள். இந்நூல் உருவாக்கத்திற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்

98,செட்டித்தெரு,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
2001-03-08

ச.பத்மநாபன்.

ௐ

## வைதீகவித்தகர்

## வியாகரண சிரோமணி

# பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகள்

## சில நினைவலைகள்

## 1

## யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருதமொழி

தென்னாசியாவில் முக்கிய இடம்வகிக்கும் இந்தியாவின் தென் கிழக்கில் இந்து சமுத்திரத்தின் நடுவே திகழ்வது இலங்கை எனும் தீவு. இத்தீவு இரத்தினத்துவீபம், ஈழம், சலாபதீபம், சிங்களதீபம், சிவபூமி, மாணிக்கத்தீபம், சிலோன், ஸ்ரீலங்கா எனப் பலபெயர்களால் காலந்தோறும் அழைக் கப்பட்டுவந்த சிறப்புடையது. இத்தீவின் சிகரம்போல் விளங்குவது யாழ்ப்பாணம் எனும் பிரதேசமாகும். இப்பிரதேசம் மிக நீண்ட காலமாக சைவமும் தமிழும் மிளிரும் பாரம்பரியம் கொண்டது. யாழ்ப்பாணத்தில் சைவத்தோடு இணைத்து தமிழ்மொழியை வளர்க்கும் கல்விப் பாரம்பரியம் சிறப்பாகத் தென்னிந்தியக் கல்விப்பாரம்பரியத்தின்ஒரு தொடர்ச்சியாகவும் ஒரோவிடத்து ஊற்றாகவும் விளங்கி வந்துள்ளது. இதன் வழியே தமிழ்மொழி, சம்ஸ்கிருதமொழி ஆகிய இரண்டு மொழிகளும் யாழ்ப்பாண மக்களின் இருகண்களாயின.

கல்வியறிவினை வளர்த்தெடுக்கும் நிலையில் மரபு நிலைக்கல்வி இன்றியமையாதது எனும் கொள்கையினடிப்படையில் இல்லங்கள், குரு குலங்கள், பாடசாலைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகம் என்பவற்றின் மூலமாக ஒரு சமூகம் தமது கல்வியறிவினை வளர்த்து வந்தது. இவ்வாறான வளர்ச்சிக்குரிய தொடர்ச்சி இந்தியாவில் இடையறாது நிலவி வந்தது. வருகிறது. இலங்கையிலோவெனில் இந்நிலை அருகிப் போகவும் தலைப்பட்டது. அவ்வேளைகளில் இவ்வாறான மரபு பேணப்பட வேண்டும் எனும் நிலையில் சிறப்பாக தென்னிந்திய அறிஞர்களை யாழ்ப்பாணத்திற்கு வருவித்து கல்வி கற்றனர். இவ்வாறு வந்த தென்னிந்திய அறிஞர்கள் சிலர் தமது வாழ்விடங்களை

யாழ்ப்பாணத்திலேயே நிலையாக அமைத்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்து சமூகத்தில் ஒரு சிலர் ஆசிரியரையும் கல்வி நிலையங்களையும் தேடி இந்தியா சென்று கல்விகற்று வந்தனர். இவ்வாறாக இந்தியா சென்று தங்கியோருமுளர். இவ்வாறான தொடர்பு நிலைகளினூடாக சிறப்பாகத் தமிழ்மொழி மூலமான சம்ஸ்கிருதமொழி விருத்தியில் இலங்கைக்கும் சிறப்பாக தென்னிந்தியா விற்குமிடையே கல்விமரபு, பாரம்பரியம் என்பவற்றினிடையே ஒரு பாலம் உருவாகியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண இராச்சிய காலங்கள் முதலாகக் காணப்படும் சம்ஸ்கிருதமொழியின் வளர்ச்சியினை மனத்துள் இருத்தி அதன் தனித்தன்மையினையும் வளர்ச்சியினையும் நோக்குகையில் அவை:

*அ) யாழ்ப்பாண அறிஞர்களின் சம்ஸ்கிருத மொழிப் பங்களிப்பு.*

*ஆ) யாழ்ப்பாணத்தில் சம்ஸ்கிருத மொழி வளர்ச்சிக்கான மரபுவழி கல்வி நிறுவனங்கள்.*

*இ) யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சம்ஸ்கிருதக் கல்வி.*

*ஈ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதக் கல்வி.*

என நான்காக வகைப்படுத்தி அவற்றினடிப்படையில் விரிவுபடுத்தும் தன்மையன.

இலங்கையின் வரலாற்றில் சம்ஸ்கிருதமொழி ஒரு முக்கிய இடத்தினைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இதற்கு மகுடம் வைத்தாற் போல் விளங்குவது குமாரதாஸரின் *ஜானகீஹரணம்*. இதைவிட சைவ வரலாற்று நூலாகத் திகழ்வது *ஸ்ரீமத்தக்ஷிகைலாசமாஹாத்மியம்* ஆகும். மேலும், சாசனங்களும் பல்வேறு வழிகளில் சம்ஸ்கிருத மொழியின் இலக்கியத் தன்மையில் வளம்படுத்தி வந்துள்ளன. இதனடிப்படையோடு விளங்கும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சம்ஸ்கிருத அறிஞர்கள் யாவரும் தமிழர்களே. இவர்கள் தாம் சுவைத்த அனுபவத்தின் உயர் எச்சங்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர். நாம் சுவைப்பதற்கும் வித்திட்டனர். அவர்களின் வரிசையில் சிறப்புற்று விளங்குபவரே வைதிகவித்தகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி. சீதாராம சாஸ்திரிகள் ஆவார்.

## 2

# வைதிக வித்தகர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராமசாஸ்திரிகள் அவர்களின் வாழ்க்கைவரலாறு

**"பாரதத்தில் வருந்தித் தேடிய அறிவு என்னும் தம் தேட்டமனைத்தையும் திரட்டி எடுத்துக்கொண்டு வாரி வழங்கும் பெருநோக்குடன் தாய்நாடு நீங்கிச் சேய்நாடு புகுந்ததோடமையாது தம் கல்விச்செல்வம் முழுவதையும் தமக்கெனச் சிறிதும் வைக்காது தொடர்ந்து வழங்கிவந்த பரந்த மனபான்மையினராய் இந்நாட்டினையே தம் நாடாகத் தெரிந்து எம்மிடையே வாழ்ந்துவந்தார். இவ்வுயர் பண்புக்கு சிரம் தாழ்த்தி வணங்குவோம்."**

இது வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகளின் முதல் மாணாக்கர் பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள் சாஸ்திரிகளின் வாழ்க்கையின் சாரத்தைக் கூறும் வரைவிலக்கணம். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் காலவரன் முறையில் சம்ஸ்கிருதத்தினை மனதில் கொண்டு சாஸ்திரிகள் பற்றி விளக்குகையில்:

**"சம்ஸ்கிருத விருத்தியை எடுத்துக்கொண்டு, யாழ்ப்பாணச் சரித்திரத்திற் சென்ற நூற்றாண்டின் மத்திய காலத்தை நோக்கினால், அக்காலம் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் அவர்கள் காலமாயிருக்கும். அவ்வாறே இந்த நூற்றாண்டின் மத்திய காலத்தை நோக்கினால் அக்காலம் பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள் அவர்கள் காலம் என்றே கூறத்தகும்."** என்று கூறுகின்றார்.

இந்தியாவில் கல்வி கற்று எமது நாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கென்றே தம்மை அர்ப்பணித்த பண்பாளர் வரிசையில் சம்ஸ் கிருத வியாகரணத்தில் புலமைமிக்கவராக பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரி கள் தனக்கேயுரிய இடத்தை வகித்ததோடு மட்டுமல்லயாது யாழ்ப்பாணத்தி லேயே பரந்த சீடர் மரபையும் நிலை நிறுத்திச் சென்ற உத்தம புருஷராகத் திகழ்ந்தார்.

சாஸ்திரிகள் பிறப்பினால் அந்தணர். சாங்கிருதி தோத்திரத்தைச் சார்ந்தவர். சாத்ய ஸாங்கிருத்ய கௌரிவீத ஆங்கீரஸ ஸாங்கிருத்ய கௌரிவீத எனும் மூன்று ரிஷிகளை ப்ரவரமாகக் கொண்டவர். யஜுஸ் சாகையை அத்யயனம் செய்தவர். ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் பின்பற்றியவர். சோமயாஜி வம்சத்தைச் சார்ந்தவர்.

## சாஸ்திரிகளின் முன்னோர்கள்:

சாஸ்திரிகளின் பீட்டனான பிரம்மஸ்ரீ சுப்ரம்மண்ய தீக்ஷிதர் தென்னிந்தியாவின் பாண்டி நாட்டில் காருக்குறுச்சியில் வாழ்ந்தவர். அவர் நாற்பது சம்ஸ்காரங்களில் சோமயாகம் வரை செய்தவர். பின்னர் சந்யாச ஆச்சிரமம் பூண்டு பிரம்மீபத நிலையை அடைந்தவர். இப்பெருந்தகையாளருக்கு கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஆறு புதல்வர்கள். அவர்களுள் ஸ்ரீ சீதாராம தீக்ஷிதர் மூத்தவர். ஜானகி அம்மாளை மணந்து வாழ்ந்த இவருக்கு புத்திரப்பேறு கிடைக்கவில்லை. இவரது ஐந்தாவது சகோதரனான ஸ்ரீ லக்ஷ்மணோபாத்யா யருக்கு யஞ்ஞநாராயண உபாத்தியாயர். ஸ்ரீசீதாராம உபாத்யாயர். ஸ்ரீ அனந்தசுப்ரம்மண்ய உபாத்தயார். என மூன்று புதல்வர்கள்.

ஸ்ரீ சீதாராம தீக்ஷிதர் ஜானகி அம்மாளுடன் தனது ஸ்வீகர புத்திரனாக தனது ஐந்தாவது சகோதரரின் இரண்டாவது புத்திரனான ஸ்ரீசீதாராம உபாத்யாயரைப் பெற்றுக் கொண்டார். இவ்விதம் அவர்கள் வாழ்ந்துவரும் காலத்தில் ஆற்றினால் நீர்வளம் மிக்க திருப்புடைமருதூர் எனும் கிராமத்தில் கோமதி அம்பாள் சமேதராக இருக்கும் ஸ்ரீ புடார்ஜுன சுவாமி திருக்கோயில் கொண்டிருக்கும் புண்ணிய பூமியில் குடிபுகுந்தனர். அவ்விதம் வாழ்ந்துவரும் காலத்தில் ஸ்ரீ சீதாராம உபாத்யாயருக்கு கிருஷ்ண ஐயரின் மகளான லக்ஷ்மி அம்பாளைத் திருமணம் செய்து வாழ்ந்து வரும் காலத்தில் ஸ்ரீ கோமதி புடார்ஜுனசுவாமி மீது அதிக பற்றுள்ளவர்களாக விளங்கினர். சுவாமி அம்பிகையின் அருணோக்கு அவர்கள் பால் கிட்டியது.

## சாஸ்திரிகளின் பிறப்பு:

ஸ்ரீ கிருஷ்ணோபாத்யாயரின் தர்மபத்தினியான லக்ஷ்மி அம்பாள் கர்ப்பவதி ஆனாள். உரிய காலங்களில் வளைகாப்பு, பும்ஸவனம், சீமந்தம் ஆகிய சம்ஸ்காரங்கள் நிகழ்ந்தன. அவர்களுக்கு சீமந்த புத்திரனாகத் தோன்றிய வரே சீதாராம சாஸ்திரிகள்.

சாஸ்திரிகள் விரோதிகிருது வருடம் தை மாதம் 17ஆம் நாள் (30.01.1912) செவ்வாய்க்கிழமை இரவு 12.50 மணிக்கு மிருகசீரிட நக்ஷத்திரம் 4ம் பாதத்தில் தோன்றினார். குழந்தைக்கு ஜாதகர்மம் செய்தனர். கோமதி அம்மையின் அருளினால் பிறந்த குழந்தைக்கு கோமதீவல்லபசீதாராமன் என தமது முன் சந்ததியினரின் பெயரையும் இணைத்து நாமகரணம் செய்தனர். பெற்றோரால் கண்ணப்பன் என அன்பாக அழைக்கப்படும். இவருக்கு 1921இல் பிறந்த கோமதீகாந்த இராமகிருஷ்ணன் எனும் இளைய சகோதரரும் உண்டு. உரிய காலங்களில் கர்ணவேதனம், அன்னப்ராசனம், சௌனம் ஆகிய சம்ஸ்காரங் கள் செய்யப்பெற்ற சாஸ்திரிகளை பெற்றோர் அன்பாக வளர்த்து வந்தனர்.

### சாஸ்திரிகளின் கல்வி:

சாஸ்திரிகளின் ஐந்தாவது வயதில் தந்தையே குருவாக இருந்து நன்னாளில் அக்ஷராரம்பம் செய்து வைத்தார். ஏழாவது வயதில் தந்தையே குருவாக இருந்து உபநயனம், யஞ்ஞோபவீததாரணம், பிரம்மோபதேசம் செய்து வைத்தார். வேதம் கற்கும் நியமங்களுடன் கூடிய வைதிக கல்வியை தமது பதினோராவது வயதுவரை தந்தையாரிடமே கற்று வந்தார். அதே வேளை திருப்புடைமருதூரிலே காசி சாஸ்திரிகளிடமும் சென்று வேதத்தை அத்யயனம் செய்து வந்தார்.

சாஸ்திரிகளுக்கு சம்ஸ்கிருத இலக்கிய இலக்கணங்களைக் கற்க வேண்டும் எனும் ஆர்வம் ஏற்படவே 1923ஆம் ஆண்டு திருக்குறுங்குடி எனும் வைஷ்ணவ க்ஷேத்திரத்தில் உயர் பாடசாலையில் ஐந்து வருடங்கள் மரபு ரீதியான காவிய பாடம் கேட்டார். இதனால் சம்ஸ்கிருத மொழியினை மேலும் கற்க வேண்டும் எனும் ஆர்வம் தூண்டப்பட்டதாயிற்று.

அவரது திருக்குறுங்குடியில் அணியிலக்கணத்தில் சித்தியெய்தாத சாஸ்திரிகளுக்கு ஆசிரியர் கல்வியில் ஆர்வம் மிகும்படியும் மனம் வேதனைப் படும்படியும் ஆலோசனை கூறினார். மனவேதனையுடன் தமது வீடு சென்ற சாஸ்திரிகள் தந்தையாரின் வசை மொழிகளுக்கு உட்பட்டார். தந்தையின் வழிகாட்டலின் படியும் தமது விருப்பத்தின்படியும் சிதம்பரம் சென்று பாடங்கேட்பதற்கு மனம் கொண்டார்.

## சிதம்பரத்தில் கல்விகற்றல்:

சாஸ்திரிகளும் தந்தையுடன் சிதம்பரம் சென்றார். சம்ஸ்கிருதக் கல்வியை நன்கு வளர்த்து வருகின்ற R.M.S பாடசாலையில் கற்பதற்கு ஏற்பாடுகளைச் செய்தார். சிதம்பரநாதரின் தரிசனத்தைத் தினமும் அனுப வித்து வந்த சாஸ்திரிகள் பதஞ்சலி முனிவரைப்போல் வியாகரணத்தில் புலமை பெற வேண்டும் எனும் எண்ணம் கொண்டார். அங்கு பிரதான பாடமாக வியாகரணம் மட்டுமே கற்பிக் கப்பட்டது. வியாகரண சாஸ்திரத்தில் வல்ல பிரம்மஸ்ரீ எம்.என்.ராகவ சாஸ்திரிகள் அஷ்டாத்யாயீயை முறையாகக் கற்பித்தார். தேர்வுப் பரீட்சைக்குத் துணைப் பாடமாக இலக்கியத்தை வேறு ஒரு ஆசிரியரிடமும் கற்றுத் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

## சாஸ்திரிகளின் திருமணப்பேறு:

தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த சாஸ்திரிகள் புஷ்யமாதத் திருவிழா விற்காக திருபுடைமருதூர் சென்றிருந்தார். அப்பொழுது சாஸ்திரிகளுக்கு வய்து பதின்மூன்று. அவ்வுற்சவத்திற்கு வந்திருந்தவர்களுள் வேள்விகள் செய்து தீக்ஷிதர் எனும் பெயர் தாங்கிய சாட்டுப்பத்து ஹரிஹர தீக்ஷிதர் குடும்பத்தினரும் வந்திருந்தனர். அவருடைய மகள் நள வருடம் வைகாசி மாதம் 16ம் திகதி (29.5.1916) திங்கட்கிழமை பிறந்தவள். சீதாலக்ஷ்மி அம்பாள் எனும் பெயர் பூண்டவள். இவ்விரு குடும்பத்தினரும் சாஸ்திரிகளுக் கும் சீதாலக்ஷ்மி அம்பாளுக்கும் விவாஹம் செய்யவுள்ளதாக நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர். கோமதிபுடார்ஜனசுவாமியிடம் தமது விவாஹம் பற்றி விண்ணப்பம் செய்து பத்திரிகையும் சமர்ப்பித்தனர். வைகாசி மாதத்தில் வெள்ளப் பெருக்குடன் கூடிய மழை நீங்கப் பெற்றது. 1925ம் ஆண்டு வைகாசி மாதம் மாமன் தோள்களில் இருந்து மாலைமாற்றி விவாஹம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்விவாஹத்தினை ஒரு தெய்வீகத் தம்பதியினர் நடாத்தி வைத்தனர். அத்தம்பதியினர் இறைவனும் இறைவியுமே என்பது அவர்கள் உணர்ந்த உண்மை.

## அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றல்:

தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்து சம்ஸ்கிருத வியாகரணத்திலே மேலும் புலமைபெறவேண்டுமெனும் எண்ணங்கொண்ட சாஸ்திரிகள் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டார். சாஸ் திரிகள் பல்கலைக்கழகத்தில் புகுந்தகாலம் சம்ஸ்கிருதமும் தமிழும் இரு கண்களென்றே போற்றப்பட்டன.

சம்ஸ்கிருதபீடம் சிரோமணிகளையுருவாக்கும் சிறப்புக்களோடு வியாகரணம், வேதாந்தம், மீமாம்சை, சாஹித்யம், நியாயம் எனும் துறைகளை யுடையதாக பேரொளி பெற்று விளங்கியது. ஒவ்வொரு துறைக்கும் அவ்வத் துறை சார்ந்த விற்பன்னர்கள் விரிவுரையாளராக விளங்கினர். அவ்வாராய்ச்சிகளின் போதனைகள் மூலம் சம்ஸ்கிருதமொழி வளம் பெற்றதாக மாணவர்கள் பலரைத் தம்பால் கொண்ட ஒரு பீடமாகப் பெருமையுடன் திகழ்ந்தது.

சம்ஸ்கிருதபீடத்திற்கு பெருமதிப்பையும் கௌரவத்தையும் அளித்த பெரியராக மஹாமஹோபாத்தியாய சிவதண்டபாணிசுவாமிதீக்ஷிதர் போற்றப் பட்டவர். சிவதண்டபாணி மஹீந்திரர் என அழைக்கப்படும் இவர் கலியுகபாணினி எனவும், பதஞ்சலி முனிவரின் மறு அவதாரம் எனவும் போற்றப்பட்டவர். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த பெரியவர்கள் பாதங்களில் அருகேயிருந்து பாணினி சூத்திரங்களுக்கு மஹாபாஷ்யபாடமும் மற்றும் வாச்யம், பட்டோஜி தீக்ஷிதரின் பாலமனோரமா உரை என்பவற்றையும் கற்கும் வாய்ப்புப் பெற்றார். இவர்களிடம் பாடம் கேட்க வாய்ப்புப்பெற்ற சாஸ்திரிகள் ஒன்றோ டொன்றிணைந்த தன்மைகளையுடைய வேதாந்தம், தர்க்கம், மீமாம்சை, சாஹித்யம், நியாயம் ஆகிய துறைகளிலும் முதலிரு வருடங்களில் கற்று ஓரளவு பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

வியாகரணத்தின் உட்பிரிவுகளின் நூல்கள் கோட்பாடுகளை நுணுகி ஆராய்ந்த பேராசிரியர்களான பிரம்மஸ்ரீ ராகவ சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ ராம சுப்பா சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஆகியோரிடமும் பாடங்கேட்ட சாஸ்திரிகள் மேல்நாட்டுச் செல்வாக்குப் பெற்றிருந்த இலக்கிய வரலாறு, இலத்தீன், கிரேக்கம் முதலான மேலைத்தேய மொழிகளுடன் மொழியியல் ரீதியில் சம்ஸ்கிருதமொழியைக் கற்கும் வாய்ப்பும் கிட்டிற்று.

சாஸ்திரிகளுடன் சக மாணவனாக இருந்து கற்ற C.S. வெங்கடேஸ்வரன் என்பவர் பிற்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக சம்ஸ்கிருதப் பேராசிரியராக விளங்கினார் என்பது இவருடைய பெருமைக்கு பறைசாற்று கின்றது. மேலும், இந்தியாவின் பிரவசன வித்தகர் எம்பர் விஜயராக வாச்சாரியார் சாஸ்திரிகளின் கல்வியில் ஒரு வருடம் முதன்மையானவர். இவர்கள் அனைவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விளைந்த முத்துக்களன்றோ!

முதலாமாண்டுப் பரீட்சையை எழுதியபின் சிதம்பரப்பெருமானின் திருவருளால் தாம் சித்தியெய்தியமையை உணர்ந்து இரண்டாம் ஆண்டுப் பரீட்சையிலும் சித்தியெய்தினார். புதுக்கோட்டை அதி'டானத்து நவராத்திரிப் பரீட்சையிலும் வெற்றிபெற்ற சாஸ்திரிகள் நான்காம் ஆண்டு வரையும் பொதுப் பரீட்சையிலும் சித்தியடைந்தார். இறுதிப் பரீட்சையில் 282 புள்ளிகளையும் மொத்தமாக 700 புள்ளிகளையும் பெற்று வியாகரண சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்று சிரோமணி எனும் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

## சாஸ்திரிகள் எனும் பெயர்:

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வியாகரண சாஸ்திரத்திற்கான உயர் விருதான 'வியாகரண சிரோமணி' எனும் பட்டத்தினை சாஸ்திரிகள் பெற்றார். சாஸ்திரங்களை தலைசிறந்த சாஸ்திரிகளிடம் வரன்மறையாகக் கற்று வியாகரண சாஸ்திரத்தில் உயர்பாடங்கேட்ட பெருமை வாய்ந்த அவருக்கு வரன்முறையாகக்கற்றுத் தாமும் அப்பரம்பரையில் ஒருவரான காரணத்தாலும், சாஸ்திரசர்ச்சை நிரம்பிய சம்பாஷணைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டமையாலும் இவர்கள் சாஸ்திரி எனும் பெரும் பட்டத்திற் குரியவர் ஆனார். அது முதல் வியாகரண சாஸ்திரமுடையவரான பெரியாரின் பெயர் வியாகரண சிரோமணி திருபுடைமருதூர் கிருஷ்ண உபாத்தியாயர் சீதாராம சாஸ்திரிகள் எனும் கௌரவம் பொருந்திய பெயராக விளங்கி வரலாயிற்று. இதனை சாஸ்திரிகள் ***தி.கி.சீதாராம சாஸ்திரிகள்*** என சுருக்கமாக விளங்கிவரலானார்.

## சாஸ்திரிகளின் புலமை:

ஒருவன் சாஸ்திரீய மொழியாகிய சம்ஸ்கிருதத்தில் ஆளுமையுடையவன் ஆகின்ற தகுதிப்பாட்டை அடைவதற்கு பன்னீராண்டு காலம் முறையாகப் பயிலவேண்டும் என்பது மரபு. வியாகரணம் பன்னீராண்டுகள் கற்கவேண்டும் என்பதும் ஒரு மரபு. ஒரு சாஸ்திரத்தைப் பயிலப் புகுந்த ஒருவருக்கு ஏனைய சாஸ்திரங்களின் நுண்புலமை ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் ஏற்படுவதில்லை. ஆனால், சாஸ்திரிகளோவெனில் சாகித்தியம், தத்துவம், சமயம் முதலியனவற்றிலும், சிரௌத, ஸ்மார்த்த நூல்களிலும் விபரிக்கப் பட்டிருக்கும் கிரியைகள் பற்றியும், சந்தஸ் (யாப்பு), ஜோதிஷம் முதலான வேதாங்கங்கள் பற்றியும் நுண்புலமை வாய்ந்தவராக தமது புலமையை வளர்த்துக் கொண்டார். மேலும், இதிஹாஸ புராணங்களை வாசித்து

அவற்றின் தத்துவார்த்தத்தை உணர்தல், எழுதுதல் முதலிய செயல்களில் ஈடுபடலானார். ப்ரவசனம் செய்வதில் தமக்கேயுரிய பாணியை வகுத்துக் கொண்டார். சம்ஸ்கிருதமொழியிலே மிக நீண்ட நேரம் சுவையாக உரையாடும் ஆற்றலும், அர்த்தவாதங்கள் செய்யும் திறனும் பெற்ற சாஸ்திரிகள்; கடி தங்கள் எழுதுதல், வரவேற்புப்பத்திரங்கள் வழங்குதல், வாழ்த்தி பாராட்டுப் பத்திரங்கள் வழங்குதல் புதிய நூல்களை உருவாக்குதல் முதலானவற்றைச் செய்துவந்தார். சாஸ்திரிகள் தமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படுகின்ற இறையருள் சார்ந்த வாழ்க்கை அனுபவங்கள், வாழ்க்கையின் முக்கிய குறிப்புக்கள், இந்தியத் திருத்தலங்கள் மீது பாடிய ஸ்தோத்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் சம்ஸ்கிருதமொழியிலேயே ஆவணமாக ஆக்கிவைத்துள்ளார். இவையனைத்தும் சாஸ்திரிகள் கற்ற கல்வியின் நுண்புலமையால் கைதேர்ந்த சிறப்புக்களன்றோ!

கற்பிப்பதன் மூலம் புதியபுதிய இலக்கிய அனுபவங்களையும், இலக்கண நுட்பங்களையும் தன்னுட் தெளிவு கொண்டு விளங்கியும் விளக்கியும் வந்த சாஸ்திரிகள் தம்மை ஆசிரியப் பணியிலேயே ஈடுபடுத்தி தமது பாரம்பரியம் ஒன்றினை நிலைபெறச் செய்ய வேண்டும் எனும் எண்ணம் மனத்தில் கொண்டவராக விளங்கினாலும் கற்பிப்பதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்படவில்லை.

### அம்பாசமுத்திரத்தில் சம்ஸ்கிருதம் கற்பித்தல்:

தமது மனைவியின் உறைவிடமாகிய சாத்துப்பட்டியிலிருந்து அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் வியாகரண சிரோமணிப் பட்டம் பெற்ற சாஸ்திரிகள் தமது கல்வியறிவை மாணவர்களுக்கு ஊட்டி வளர்க்க வேண்டும் எனும் ஆர்வத்துடன் திருப்புடைமருதூருக்கு வந்தார். வேலை வாய்ப்பின்மையால் மனம் கலங்கினார். புதிதாக அம்பாசமுத்திரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பாடசாலையில் சம்ஸ்கிருதக் கல்வியைக் கற்பித்ததோடு சமூக முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதான சமூகசேவை சாஸ்திரிகளின் வாழ்வில் ஏற்படலாயிற்று.

### குருநாதரின் விருப்பம்:

கல்வி கற்கும் காலத்தில் சாத்துப்படிக் கிராமத்தில் வசித்து வந்த சாஸ்திரிகள் அண்ணாமலை சர்வகலாசாலையில் நான்கு வருடக் கல்வியை நிறைவுசெய்து வியாகரண சிரோமணியாக வெளியேறினார். அவ்வேளை சாஸ்திரிகளின் குருநாதர் அவரை

நற்குணமுடையவர், ப்ரவசனம் செய்வதில் வல்லவர் என்றெல்லாம் போற்றியதோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திலேயே விரிவுரையாளர் பதவியை வகிக்க வேண்டும் எனும் விருப்பத்துடன் இருந்தமையை சாஸ்திரிகளின் குருநாதரான சிதம்பரம் மஹாமஹோபாத் யாயர் சிவதண்டபாணி சுவாமி தீக்ஷிதர் அவர்கள் எழுதிய கடிதம் மூலம் தெரியவருகின்றது. இந்தக் குருநாதரின் விருப்பம் நிறைவேறாமை துரதிஷ்ட வசமேயாகும்.

## மக்கட்பேறு:

சாஸ்திரிகள் சாட்டுப்பத்து கிராமத்தில் இல்லறம் நடாத்தி வந்த காலத்தில் கோமதி அம்பிகையின் திருவருளால் மனைவி கர்ப்பம் தரித்தார். உரிய காலத்தில் வளைகாப்பு, பும்ஸவனம், சீமந்தம் ஆகியன நடந்தேறி 2.1.1935 இல் தேவியின் திருவருளால் சீமந்தபுத்திரி பிறந்தாள். அக்குழந்தைக்கு சுப்புலஷ்மி என நாமகரணம் சூட்டினார்.

## வைதிக புரோகிதராகத் திகழ்தல்:

அம்பா சமுத்திரத்தில் கல்வி கற்பித்து வந்த சாஸ்திரிகள் அசௌகரியம் காரணமாக அங்கிருந்து தமது மாமாவின் இருப்பிடம் சென்று அங்கே வருவாய்கள் ஏதுமின்றி மனம் வருந்தி தமது மாமனார் செய்து வந்த வைதிக ப்ரவர்த்தியில் தாமும் ஈடுபட்டுக்கொண்டு மிகுந்த ஏழ்மையான சூழலில் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டுவந்தார்.

## வாழ்க்கையில் ஒரு திருப்பம்:

சாஸ்திரிகளின் ஏழ்மையான வாழ்விலும் கூட சம்ஸ்கிருத மொழியைக் கற்பிப்பதற்கு தகுந்த ஒரு இடம் வேண்டும். அன்றேல் வைதிக ப்ரவர்த்தியில் தமது வாழ்நாளைக் கழிக்க வேண்டும் எனச் சிந்திக்கலானார். ஆசிரியத் தொழிலையே விரும்பியவராகவும் காணப்பட்டார். இந்த நிலையில் சாஸ் திரிகளின் மாமாவிடம் தொடர்பு கொண்டவரும், இலங்கையிலிருந்து சென்று திருச்செந்தூர் வேதாகம பாடசாலையில் கல்வி கற்று வந்தவரும், இலங்கை யில் தமிழ்மூலம் சம்ஸ்கிருதத்தைக் கற்பிக்கக்கூடிய வைதிக சாஸ்திரிகள் ஒருவர் வேண்டுமென்ற எண்ணம் கொண்டவருமான சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணியசுவாமி கோவிலைச் சார்ந்த பிரம்மஸ்ரீ சண்முகரட்ணசர்மாவின் முயற்சி சாஸ்திரிகளின் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

**இலங்கைக்கு வரல்:**

சாஸ்திரிகள் இலங்கைக்கு வருவதற்கு முதற் காரணமாக விளங்கியவர் சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சண்முகரட்ணசர்மா அவர்களேயாவர். சர்மா அவர்கள் தமது தெய்வீக அனுபவத்தின் பயனாகவே சாஸ்திரிகள் இலங்கைக்கு வந்தார் என்பதனை தமது **'குருபரம்பராப்ரபாவம்'** எனும் நூலில்

**'நான் சிதம்பரம் சென்றேன். ஸ்ரேஷனிலிருந்து அண்ணாமலை சர்வகலா சாலை போய் குறித்த விடுதியறையை அடைந்தேன். எனது நண்பர் மஹா தேவன் என்பவர் என்னை அன்போடு வரவேற்றார். அவரும் வேறு மூவரும் சுவாமி தரிசனத்திற்கு புறப்படும் நேரமாயிருந்தபடியால் என்னையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். கோவிலுக்குச் சென்று நடராஜப்பெருமானை தரிசித்து வணங்கினோம். விபூதிப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்ட ஒருவர் விசேஷமாக என்னிடம் அதைக் கையளித்தார். அவரது தோற்றம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. திரும்பவும் வழியில் மஹாதேவன் இவர்தான் உம்மோடு வர இருப் பவர். நீர் விரும்பும் குணச்சிறப்புகள் எல்லாம் நிரம்பியவர். சீதாராமன் என்னும் பெயருடையவர் என்று அறிமுகப்படுத்தி வைத்தார். அன்றிரவு நடந்த பேச்சில் கல்லல் என்ற இடத்தில் அவருடைய தாய் மாமனார் வீட்டில் ஒரு வாரத்தில் மறுபடி சந்தித்து யாழ்ப்பாணம் புறப்படுவதாகத் தீர்மானித்துக் கொண்டோம். மறுநாள் திருவாரூர் வந்து வேண்டிய விஷயங்களை முடித்துக் கொண்டு தம்பியாருடன் புறப்பட்டார். கல்லல் போய் கைலாசகனபாடிகள் வீட்டில் அவரது மருமகனான மேற்படி சீதாராம சாஸ்திரிகளுடன் புறப்பட்டு மண்டபம் காம்பில் பரிசோதனைகள் முடித்துக் கொண்டு தலைமன்னார் வழியாக யாழ்ப்பாணம் வந்தோம்'** என விபரமாகக் குறிப்பிடுகின்றார்.

இச்சம்பவம் 1935 சித்திரை முற்பகுதியில் நடைபெற்றது. அன்று வந்த சாஸ்திரிகள் தனித்தவராக பறாளாய் சிவசுப்பிரமணிய கோவில் அர்ச்சகரான சுப்பையாக்குருக்கள் வீட்டில் தங்கிவருகையில் புதிதான இலங்கைச் சூழலில் வாழ்வு பல துன்பங்களை ஏற்படுத்தியது. அதனூடே ஒருவருட வாழ்க்கையின் பின் மீண்டும் தமது தாய்நாடு சென்றார்.

தமது தந்தையுடன் மூன்று மாதங்கள் தங்கி தமது தேகாரோக்கி யத்தை வளர்த்துக் கொண்ட சாஸ்திரிகள் மீண்டும்

தந்திமூலம் இலங்கைக்கு வரவேண்டும் என்ற ஆவலையும் அதற்குண்டான பணத்தினையும் சண்முக ரட்ணசர்மா அனுப்பிவைக்க மீண்டும் மகிழ்ச்சியுடன் குடும்பமாக இலங் கைக்கு வந்தார்.

பறாளையில் குருக்கள் வீட்டிற்கு முன்பாக கோவில் சந்நிதியின் வடக்குப் புறமாக உள்ள ஒரு விசாலமான மடம் சாஸ்திரிகளின் வீடாக விளங்கியது. சுழிபுரத்திலும் அயலிலும் உள்ளவர்கள் மாலை நேரங்களில் சம்ஸ்கிருத பாடமும் வேதாத்யயனமும் செய்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றனர். முதலில் வந்து இணைந்த மாணவர்கள் பத்துப்பேரும் இலவசமாகவே சாஸ்திரிகளிடம் கற்று வந்தனர். முருகபக்தியில் அதிக ஈடுபாடு கொண்ட சாஸ்திரிகள் பறாளாய் முருகன் ஆலயத்தில் விசேஷ காலங்களில் சுப்பையாக் குருக்களுக்கு பத்ததிகள் வாசித்து உதவி வந்தார். ஓய்வு நேரங்களில் பத்ததிகளிலுள்ள கிரியைகள் பற்றி சாஸ்திரிகள் மூலமாகக் குருக்கள் தெளிவு பெற்றுக்கொள்ளவும் தயங்குவதில்லை. இவ்வாறான கோவிற்கிரியை களிற் சற்றேனும் பரிச்சயம் இல்லாத சாஸ்திரிகள் ஆகமங்கள், பத்ததிகள் போன்றவற்றிலும் தமது புலமையை வளர்த்து வரலானார். வைதிக கர்மாக்களான பூர்வ அபரக்கிரியைகளை பரம்பரையாகவே செய்து வைக்கும் பயிற்சியுடைய இவரது வாழ்க்கை நன்கு பிரகாசிக்கும் அதே சந்தர்ப்பத்தில் புலமையும் எங்கும் பரவிற்று.

### தந்தையாரின் மறைவு:

சாஸ்திரிகள் சிறப்புப் பொருந்திய ஆசிரியராக விளங்கிவரவேண்டும் என்றும்; அவருடைய புலமைகளை நாங்கள் பெற்றுப் பயனடையவேண்டும் என்றும் விருப்பம் கொண்டவர்களாக யாழ்ப்பாண மக்கள் எண்ணம் கொள்ள விதியின் வசமாக 1937ம் ஆண்டு சாஸ்திரிகளின் தந்தையாரான ஸ்ரீகிருஷ்ண உபாத்யாயர் விஷ்ணுலோகம் அடைந்தார். கர்ப்பவதியாக இருக்கும் தமது மனைவி மகளுடன் இந்தியா சென்ற சாஸ்திரிகள் அங்கு தந்தைக்குரிய அபரக்கிரியைகள் யாவற்றையும் குறைவேதுமின்றிச் செய்து முடித்தார்.

தந்தையின் சொத்துக்களில் பாதியினை சாஸ்திரிகளுக்கும் அவருடைய சகோதரர் பகிர்ந்தளித்தார். இது சாஸ்திரிகளுக்கு அளிக்கப்படும் கௌரவமாக விளங்கியது.

தமது கடமைகளை முடித்துக் கொண்டு சாஸ்திரிகள் மீண்டும் இலங்கைக்குக் குடும்பமாகவே வந்து வாழ்ந்து வந்தார்.

### மக்கட்பேறுகள்:

சாஸ்திரிகளின் தந்தையாரான ஸ்ரீ கிருஷ்ண உபாத்தியாயர் மறையும் வேளையில் கர்ப்பவதியாக விளங்கிய சீதாலஷ்மி அம்பாள் 1937.12.29 இல் சிவகாமசுந்தரி எனும் பெண் மகவைப் பெற்றெடுத்தார்கள்.

சாஸ்திரிகள் சந்ததியினைப் போற்றபுவனும் வைதிக மரபு பேணுபவனுமான ஒரு புத்திரன் வேண்டுமென ஆவல் கொண்டிருக்கும் வேளையிலே சுப்பையாக் குருக்கள் அவர்கள் புதிதாக அமைத்துக் கொடுத்து தமது மகன் சண்முகரட்ண சர்மா ஆண்மகவைப் பெற்றாற்போல் தாங்களும் பெறுவீர்கள் என முருகனை வேண்டி ஆசீர்வதித்தார்.

குருக்களின் ஆசீர்வாதத்தின்படி 20.02.1940 இல் சாஸ்திரிகளுக்கு ஆண்மகவு கிடைத்தது. தமது குலவழக்கப்படி சம்ஸ்காரங்களைச் செய்து தமது குலதெய்வமான கோமதி அம்பிகையின் பெயரையும் தமது இ'ட தெய்வமான முருகனின் திருநாமத்தையும் இணைத்து கோமதிரமண பாலசுப்ரமணியன் எனப் பெயர் சூட்டினார். சாஸ்திரிகளுக்கு குழந்தைச் செல்வங்களாக ஜானகி 28.06.1942 இலும்; பார்வதி 21.10.1945 இலும்; சாவித்திரி 23.01.1948 இலும்; யசோதரா 06.11.1950 இலும்; லலிதாபாரதி 15.05.1955 இலும் பிறந்தார்கள்.

**வாழ்க்கை:**

சாஸ்திரிகள் திருநெல்வேலியில் கற்பிக்கும்போது பறாளாயிலிருந்து சைக்கிளில் வந்து போவதே வழக்கமாக இருந்து வந்தது. பிள்ளைகளும் அதிகரிக்க குடும்பத்திற்காக தொழிலை விருத்தி செய்ய வேண்டிய தேவைகள் இருந்ததன் பயனாக ஆலயங்களில் கும்பாபிஷேகம் முதலான விசேஷங்கள், உபந்யாசம் செய்தல், ஜாதகம் பார்த்தல், வைதிக கர்மாக் களான பூர்வ அபரக் கிரியைகள் செய்து வைத்தல் முதலான பல்வேறு துறைகளிலும் தம்மை விருத்தி செய்தார்.

சாஸ்திரிகள் பறாளாய் சிவசுப்ரமணியசுவாமி கோவில் மடத்தில் வாழ்ந்து வரும் காலத்தில் மாரிகாலம் வெள்ளத்தால் ஏற்பட்டுவரும் சிரமங்களைத் தணிப்பதற்காக தமது வாழ்விடத்தை சுழிபுரம் புதுக்குடியிருப்புக்கு மாற்றிக் கொண்டார்.

**நாவலர் வீதியில் வாழ்தல்:**

சுழிபுரம் புதுக்கடியிருப்பிலிருந்து தமது பணியின் பொருட்டு சாஸ்திரிகள் தினமும் சைக்கிளில் பயணம் செய்துவந்தார். மரபுவழிக் கல்வியில் தமது அஸ்திவாரத்தினைப் பதித்துக்கொண்ட சாஸ்திரிகளின் புலமையில் ஈர்ப்புக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா

சபையினர் நாவலர் வித்தியா சாலையில் நடாத்திவந்த தமிழ், சம்ஸ்கிருத பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டித வகுப்புக்களுக்கான ஆசிரியராக இவரை நியமித்து 146, நாவலர் வீதியில் ஓர் அமைவிடத்தையும் வழங்கினார்.

சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் கல்வி கற்பிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டனர். அது முதலாக சாஸ்திரிகளின் வாழ்விடம் நாவலர்வீதியில் விளங்கியது.

சம்ஸ்கிருதம், சைவசமயம் என்பனவற்றை நன்கு கற்கவேண்டும் எனும் ஆர்வம்மிக்கவர்களான சிறுவர்கள் முதல் பட்டதாரிகள், பண்டித பரீட்சைக்கு தோற்றுபவர்கள், வேதம் அத்யயனம் செய்து கொள்ள வருபவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் சாஸ்திரிகளின் வீட்டினை நாடினார்.

சாஸ்திரிகளின் பரந்த அறிவினைக் கண்டுணர்ந்த சமயப் பெரியார்கள், ஆலய பரிபாலகர்கள், ஆசிரியர்கள், பண்டிதர்கள் தமது ஐயங்களைத் தீர்த்துத் தெளிவு பெற்றனர்.

யாழ்ப்பாண சமூகத்தில் சாஸ்திரிகளின் தேவையின் பாற்பட்ட சேவை கல்வி கற்பித்தல், சமயப் போதனை, வேத அத்யாபனம், கிரியைகள் செய்வித்தல், ஜோதிடம் பார்த்தல், ஐயந்தீர்த்தல், நூல்கள் இயற்றல், கட்டுரைகள் எழுதுதல், கடிதம் எழுதுதல், கவிதைகள் இயற்றுதல், வசன நடையில் எழுதுதல், சமூகப்பணி எனப் பல்வேறு பரிணாமங்களில் விரிவு பட்டுக் காணப்பட்டன.

## நாளாந்த வாழ்க்கை:

சந்தியானுஷ்டானம் தவறாத சாஸ்திரிகள் தமது இஷ்ட தெய்வமான முருகனுக்குரிய வேலுடன் கூட பஞ்சாயதன பூஜை செய்து வந்தார். நிதித்யாசனம், ராமநாம, முருகநாம, சிவநாம ஜபங்களைத் தவறாது செய்து வந்தார்.

பாரம்பரியமாகவே ஸ்ரீமத்ராமாயணத்தினை பாராயணம் செய்துவந்த சாஸ்திரிகள் தினமும் ஒருசர்க்கம் வீதம் தவறாது பாராயணம் செய்துவந்தார்.

## கல்வி கற்பித்தல்:

சாஸ்திரிகள் தனிப்பட்ட ரீதியிலும் நிர்வாக ரீதியிலுமாக இரு நிலைகளில் சம்ஸ்கிருத மொழியைக் கற்பித்து வந்தார்.

**ஷஷ்டியப்தபூர்த்தி:**

சாஸ்திரிகள் தம்பதிகளின் ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி வைபவம் 27.01.1972 இல் குடும்பத்தார், மாணவர்கள், அறிஞர்கள் புடைசூழ நல்லூர் சிவன் கோவிலில் சாஸ்திரோக்தமாக நடைபெற்றது.

ருத்ரைகாதசினீ அபிஷேகம், மிருத்யுஞ்ஜய ஹோமம், அபிஷேகம், தானாதிகள் யாவும் பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ. நாராயண சாஸ்திரிகள், நியாயசிரோமணி கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஆகியோரின் வழிகாட்டலில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

**பாராட்டுவிழா:**

சாஸ்திரிகளின் மணிவிழாவையொட்டிய பாராட்டு விழாக்குழு ஒன்று பிரம்மஸ்ரீ தி.இரத்தினசபாபதிக்குருக்கள், பிரம்மஸ்ரீ சு.ஷண்முகரட்ணசர்மா, பிரம்மஸ்ரீ சு.இராஜேந்திரக்குருக்கள், பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சரசர்மா ஆகியோர் உள்ளிட்டதாக தெரிவு செய்யப்பட்டது.

தனிப்பட்ட முறையில் சாஸ்திரிகளின் மணிவிழாவையொட்டி பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலும், கொழும்பு இராமகானசபாவிலும் பாராட்டு விழாக்கள் நடைபெற்றன.

மணிவிழாச் சபையினர் மலர் தயாரித்து 1973இல் நல்லூர் சிவன் கோவிலில் சாஸ்திரிகளின் மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. அதற்குச் சிறப்புச் சொற்பொழிவாளராக சென்னை கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகன் நாதன் வருகை தந்திருந்தார். மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

பாராட்டு விழாவில் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள் குரு ஸ்தோத் திரம் ஒன்றினையும்; மாணவர்கள் சார்பில் ஆசீர்வாதம் வேண்டி நிற்கும் பத்திரம் ஒன்றினையும் வழங்கினார். கி.வா.ஜமணிவிழாச் சார்பில் ஒரு வாழ்த்துப் பாமாலையையும், குருமணியே வாழ்க! என விநாசித்தம்பியும் மற்றும் உறவினர்களும் வாழ்த்துப்பாமாலை வழங்கினர்.

சாஸ்திரிகளின் பாராட்டுவிழாவோடு சேவைகளின் சிறப்புப்பற்றி ஈழநாடு, இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளில் செய்தி பிரசுரமாகியிருந்தன.

1979இல் கொழும்பு சென்றது முதல் அமைதியாகவே வாழ்ந்துவந்த சாஸ்திரிகள்; 1984 முதல் பி.ஏ. தம்பி ஒழுங்கையில் தமது மகளான திருமதி பார்வதி குமாரசாமிசர்மாவுடன் வாழ்ந்து வந்தார்.

நாட்டின் சூழ்நிலை காரணமாக 1987இல் வட்டுக்கோட்டை ஆர்.பாலசுப்ர மணியஐயர் வீட்டில் சில காலமும் 1988 இல் நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் சிலகாலமும் வாழ்ந்த உத்தம புருஷராக சாஸ்திரிகள் விளங்கினார்.

**இறுதிக்காலம் :**

முருக பக்தியில் தம்மை இணைத்துக் கொண்ட சாஸ்திரிகள் கந்தசஷ்டி விரதத்தின் மூன்றாம் நாள் 13.11.1988 அன்று தமது இஷ்ட தெய்வமான முருகனின் பாதத்தினைச் சென்றடைந்தார்.

சாஸ்திரிகள் முதல் மாணாக்கன் கிரியைகளைச் செய்விக்க மருமகன் இறுதிக் கிரியைகளைச் செய்தார். சாஸ்திரிகளின் புகழுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சாஸ்திரிகளின் மாணவர்களும் அபிமானிகளும் இணைந்து ***வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள் ஞாபகார்த்த சபை*** ஒன்றினை நீர்வேலி கந்தசுவாமி கோவிலை மையமாகக் கொண்டு ஆரம்பித்தனர். 27.11.1988 இல் ***நினைவுச் சிந்தனைகள்*** எனும் அஞ்சலி நூலும் வெளியிடப்பட்டது.

## சாஸ்திரிகளின் ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்:

சாஸ்திரிகளின் முதல் மாணாக்கரான பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களும், சாஸ்திரிகளின் மாணவர்களும், அபிமானிகளும் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருதத்துறையில் சிறப்புக்கலையில் திறமைச்சித்தி பெறுபவர்களுக்கான ஞாபகார்த்த பரிசுத்திட்டத்தினை உரு வாக்கி ரூபா 14,000 தொகையினை வைப்பிலிட்டனர்.

சாஸ்திரிகளின் 10ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் 31.10.1998 அன்று பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நல்லூர் சிவன்கோவிலில் சாஸ்திரிகளின் ஞாபகார்த்த சபையினரால் நடாத்தப்பட்டது.

இவ்வாறாக சம்ஸ்கிருதவாத்யார் என்றே அழைக்கப்படும் சிறப்புடைய சாஸ்திரிகள் தமது வாழ்க்கையை சம்ஸ்கிருதத்திற்கே அர்ப்பணித்து சாஸ்திர சம்பிரதாயங்களின்படி வாழ்ந்து காட்டியதோடு ஒரு சமூகத்தையும் வாழ வைத்துள்ளார். மாணவர் பரம்பரையையும் உருவாக்கியுள்ளார். சம்ஸ்கிருத மொழிப் புலமைக்கு வித்திட்டுள்ளார். இவ்விதம் சம்ஸ்கிருத

மூலத்தினையே வாழ்க்கைக்கு அத்திவாரமாகவும் மூச்சாகவும் கொண்ட சாஸ்திரிகளின் வாழ்க்கை பல்வேறுபட்ட பரிணாமங்கள் விரிந்து நிற்பதனையும் சாஸ்திரிகளின் சம்ஸ்கிருதப் பங்களிப்புக்களை மதிப்பிடுவதற்குரிய சிறந்த தன்மையுடையதாகவும் விளங்குவதனைக் காணமுடிகிறது.

# 3

# சாஸ்திரிகளின் சம்ஸ்கிருத மொழிப் பணிகள்

## சாஸ்திரிகளின் வைதிகக் கல்விப்பணி

வைதிக சமய வாழ்வியல் முறையில் குருகுல வாழ்க்கை முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. இக்குருகுல முறையை :"**நல்ல சீலங்களுடன் இருக்கின்ற குருவிடம் சிஷ்யனுக்கு ஏற்படுகின்ற பக்திதான் குருகுல வாசத்தின் உயர்நிலை சிஷ்யனுடைய விநயம், இந்திரியநிக்ரஹம், பிற்பாடு இவன் படிப்படியாகப் பெறப்போகின்ற ஈஸ்வர பக்தி, ஆத்மா விருத்தி எல்லாவற்றிற்கும் மூலதனம் இந்த குருபக்தி தான்**" என காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறுகின்றார்.

வேதரக்ஷணத்தையே கருவாகக் கொண்ட காஞ்சிப் பெரியவர் மீது சாஸ்திரிகள் மிகுந்த பக்தி கொண்டவர். காஞ்சிப் பெரியவர் குருகுலக்கல்வி மரபுக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டும் எனும் எண்ணமும் கொண்டவர். "**அந்தப் பழைய குருகுலக்கல்வி முறையை எங்கேனும் ஒரு சிறிய இடத்திலாவது வைத்துப் பாதுகாக்க வேண்டும். நூதன சாலைப் பொருளைப் போல இப்படியும் ஒரு முறை நம் நாட்டில் இருந்தது என்பதனை நம்முடைய சந்ததிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும்**"எனக் கூறினார். இவை சாஸ்திரிகள் மனதில் ஆளப்பதிந்தது எனலாம்.

வேதம், ஸ்ருதி இதனைக் கேட்டு ஓதும் மரபே வைதிகக் குருகுலக்கல்வி மரபில் இன்றும் வேரூன்றி நிற்கின்றது. இதன்படி ஸ்வரம் தப்பிப் போகாதவாறு மாணவர்களுக்குப் பதம் பிரித்தும், சந்திசேர்த்தும், க்ரம்மாகவும், சம்ஹிதை யாகவும் சொல்லிக் கொடுத்து தீர்வை சொல்லி ஒரு மாத்திரையேனும் பிரளாதவாறு வேதம் கற்பிக்கும் சாஸ்திரிகளின் திறன் போற்றுதற்குரியது.

கணீர் என்ற ஆளுமை வாய்ந்த குரல்; நிமிர்ந்த பத்மாசனமிட்ட இருக்கை; காண்போரை வசீகரிக்கும் முகத்தின் தேஜஸ்; கற்பிக்கும் மாணவர்கள் தவறின்றி சொல்கின்றார்களா? என்ற கோபத்துடன் இணைந்த பார்வை என்பன சாஸ்திரிகளின் சிவசின்னமாகிய விபூதி ருத்ராக்ஷம் நிறைந்த மேனியில் காணப்படும். இதுவே சாஸ்திரிகளின் தோற்றம்.

சுழிபுரம் வந்தது முதலாகவே தாம் உபநயனம் செய்து வைக்கும் மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் தமது வீட்டிலேயே காலை நேரங்களில் வேத அத்யாபன வகுப்புக்களை நடாத்தி வந்த சாஸ்திரிகள் யஜுர் வேதத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர். யாழ்ப்பாண சமூகத்தில் ஆகமக்கிரியைகளுக்கு தேவையானவையும் வைதிகக் கிரியைகளுக்கு இன்றிய மையாதனவாகவும் இருந்த வைதிக மந்திரங்களைத் தாமே கடைப்பிடித்து வரும் நியமங்களுடன் அக்ஷரம் பிரளாமலும் ஸ்வர சுத்தத்துடன் கற்பித்து வந்தார். அத்துடன் யஜுர் வேத உபாகர்மத்தினையும் தமது இடத்திலேயே செய்து வைத்து வேதாரம்பம் செய்து வைதிகக்கல்வி மரபைத் தொடர்ச்சி யாகப் பேணி வந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் ஆகமம் சம்பந்தமான கிரியைகளுக்குத் தேவையான வேதமந்திரங்களை சாஸ்திரிகள் **ஆகமக்ரியா மந்த்ர முக்தாமணய:** எனும் முதற் புத்தகத்தில் தொகுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேதநெறி தழைத்தோங்க என சாஸ்திரிகள் வைதிகக்கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரிடமிருந்தும் வேதனம் எதுவும் அறவிடாமல் பரோபகார சிந்தனையுடன் வசித்த வீடுகளிலேயே கற்பித்து வந்தார்.

## சம்ஸ்கிருத மொழிக் கல்விப்பணி:

சாஸ்திரிகள் சம்ஸ்கிருத மொழிக் கல்விப் போதனை பரந்து விரிந்தது. பல மாணவர் பரம்பரையை உருவாக்கியது. இந்நிலையில் சாஸ்திரிகள் சம்ஸ்கிருத மொழிக் கல்விப்பணிகளை இருவிதமாக நோக்கலாம்.

அ. இல்லத்தில் கற்பித்தல்

ஆ. நிறுவன ரீதியாகக் கற்பித்தல்

சாஸ்திரிகள் கல்வி கற்பிக்கும் அழகு ஒரு தனித்துவமானது.

தனியான தொரு முத்திரையே பதித்தது எனில் மிகையாகாது. சாஸ்திரிகள் கல்வி கற்பிக்கும் பாங்கு பற்றி சாஸ்திரிகளின் முதல் மாணாக்கரான பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள் கூறுகையில்:-

**"குருநாதர் பாடஞ் சொல்லுமழகே தனியழகு. சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச் செவி வாயாக நெஞ்சங்களனாகப் பாடங் கேட்டல் பற்றி நூல்கள் கூறுகின்றன. மாணவர்களை வலிந்து வருத்தி இந்நிலையை வருவிக்க விடாமல், குருநாதர் அவர்கள் தம் பாடஞ் சொல்லும் முறையாலேயே இதை மாணவர்களிடம் தாமே வருவித்து விடுவார். இவர் பாடங் கூறும் வேளை கருத்துக்களைப் பல கோணங்களிலிருந்து படம்பிடித்துக் காட்டுவதாலும், கருத்துக்கள் தெளிவாக மாணவர்கள் மனதில் படிந்து விடும். அவர் கூறும் கதைகள் வெறுங் கதைகளல்ல. அவை உண்மைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை; திருட்டாந்தமாக அமைபவை; தெளிவு பிறப்பவை; இடித்து இடித்துப் படிப்பித்து சிறிதளவேனும் கருத்துக்கள் நுழைய இடந்தராத மூளையை நெகிழ வைத்துக் கிரகிக்குமாற்றலை வளர்க்க வல்லவை. இவ்வாற்றற் பெருக்கால் போதனைகள் ஆழமாகப் பதியும். மேலும் குருநாதர் அவர்கள் குரலில் இயல்பாகவே அமைந்து விளங்கும் கம்பீரம் மாணவர்களை அங்குமிங்கும் அசையாதவாறு கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. தமக்குரிய கணீரெனுமொலியுடன் இனிமை நிறைந்த சீரிய உச்சரிப்புடன் சம்ஸ்கிருத வாக்கியங்களையோ பாடல்களையோ சொல்லும் போது சம்ஸ்கிருதம் பயிலாதாரும் அவ்வின்னோசையால் வசீகரிக்கப்பட்டு மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகமென மயங்கி நிற்பர். இது ஒவ்வொருவருக்கும் நேரும் நேரடியனுபவம். இது மட்டுமா? சுவைகளுள் எளிதில் எவரையும் பற்றிக் கொள்ளும் இயல்பினது நகைச்சுவை. இந்நகைச்சுவை புகுத்தி எம் ஆசிரிய பிரான் உரையாடும் பொழுதும் உயர் கருத்துக்களைப் பாடங்களாக வழங்கும் பொழுதும் நகைச்சுவைப் பின்னணியில் நிகழும் பேச்சுக்களும் பாடங்களும் கேட்போருக்கு உற்சாகமூட்டி அவர்க்கு அவதானிக்கும் ஆற்றலைப் பெருக்கி நிற்கும். மாணவர் மட்டுமன்றி அவர் நிகழ்த்தும் பேச்சுக் களைக் கேட்பவருமே சித்திரப் பாவையின் அத்தகவடங்கிவிடுவர்.**

எனக் கூறுகின்றார். இவையே சாஸ்திரிகளிடம் கல்வி கேட்ட உணர்ச் சியின் வெளிப்பாடு.

## இல்லத்தில் கற்பித்தல்:

சாஸ்திரிகள் தாம் பாரதநாட்டில் வருந்திப் பெற்ற கல்விச் செல்வம் அனைத்தையும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்காகவே

முழுமையாக அர்ப்பணித்தவர். இந்நிலையில் தாம் சுழிபுரம் வந்தது முதலாக மாலை நேரங்களில் வீட்டிலேயே சம்ஸ்கிருதமொழிப் போதனைகளை நடாத்தி வந்தார். அக்காலம் முதலாகவே யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் வசித்து வந்த மாணவர்கள் பலர் சாஸ்திரிகளிடம் சென்று சம்ஸ்கிருதக் கல்வியைக் கற்றுவந்தனர். இதன் பயனாக சாஸ்திரிகளை மாணவர்கள் **"சம்ஸ்கிருத வாத்யார்"** என அழைத்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருத மொழியை சாதாரணமாகக் கற்றுவரும் மாணவர்கள் தினமும் கற்றுவந்தனர். உயர்தரக் கல்வியில் சம்ஸ்கிருத மொழியைக் கற்றுவரும் மாணவர்கள் நேர அட்டவணைப்படி கற்று வந்தனர்.

சாஸ்திரிகளிடம் உயர்தரப் பாடம் கேட்ட இலக்கண இலக்கியங்களை நன்கு கற்ற சாஸ்திரிகளின் முதல் மாணவன் பேராசிரியர் கலாநிதி.கா. கைலாசநாதக் குருக்கள் தமது அனுபவத்தைக் கூறுகையில்:

*"குருநாதர் அவர்கள் உயர்தர இலக்கணக் கல்வி புகட்டும்வேளை சாஸ்திர உண்மைகளையும் நுணுக்கங்களையும் கிரகிக்க வைக்கும்* **திறமை ஈடிணையற்றது. சாஸ்திரங்கள் யாவற்றுக்கும் கணாதமெனும் தருக்கமும் பாணிணீயம் எனும் இலக்கணமும் யாவற்றிற்கும் துணை நிற்கும் சாஸ்திரங்கள் என எல்லோரும் விதந்து கூறுவர். நுண்மாண் நுழை புலத்துள் நுண்ணிய வாதங்களையும் பிரதிவாதங்களையும் படிப்படியாக வரிசைப்படுத்திக் காரணங்கூறி உண்மையை வலியுறுத்தி உணரவைப்பது ஏது சாத்திர மெனப்படும் நியாயம். வியாகரணமோ வெனின் மொழியில் நிகழும் இலக்கண நிகழ்ச்சிகளை வரையறுத்துக் கூறும் விதிகளை வாதப் பிரதிவாதங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து விளங்குவது. விதிகள் யாவும் எப்பொழுதும் பிரயோகம் பெறும் இயல்பு வாய்ந்தவை எனினும், வைப்புமுறை போன்ற சாஸ்திர நுணுக்கங் களுக்கு அமையவே அவை தொழிற்படுவன. இது நிழற்பாலது. இது தவிர்க்கப்பாலது என அறைந்து கூறிப் பொதுவிதிகளாயும் சிறப்பு விதிகளாயும் அமைந்து சுருங்கக்கூறிக் குறுகி அமைந்து விரிக்க விரிந்து விளங்கவைக்கும் இயல்பினவான சூத்திரங்களால் அமைந்த பாணிணீய சாஸ்திரத்தை முறைப்படி கற்றவன், முறையாகத் தருக் கம் பயிலாதவரெனினும் செயன்முறையிற் பிரயோகம் பெறுந் தருக்கம் தானே கற்றுவிடுவான். சுருங்கக் கூறின் பாணிணீயம் முறையாகக் கற்பவனிடத்தில் நியாயம் கற்பவன் பெறும் முழு அனுபவமும் இயல்பாகவே பொருந்திவிடும். வியாகரண சாஸ்திரங் கற்போருக்கு வாதப் பிரதிவாதங்கள் அடங்கிய நுண்ணிய சர்ச்சைகள் புத்தியைக் கூரியதாக்கிக் கிரகிக்கும்**

ஆற்றலைப் பெருக்கும். எல்லாந் தன்னுள்ளடங்கி விளங்கும் வியாகரண நுணுக்கங்களை அவ்வவற்றிற்கேற்ற உதாரணங்களையும் திருட்டாந்தங்களையும் கதை கூறுவதுபோற் கூறிவிளக்கக் குருநாதர் அவர்கள் கையாளும் முறையை விளக்க இதோ ஒரே ஓர் எடுத்துக்காட்டு. இலக்கண ரீதியாக ஒரு நிகழ்ச்சி நிகழ்கின்றது.வேறு சூத்திர விதியால் இந்நிகழ்ச்சி கெடுகின்றது. அதாவது மொழியில் தோன்றிய புது அம்சம் ஒன்று மறைவுறுகின்றது. புதிதாகப் புகுத்தப்பட்ட அவ்வம்சம் தன்தேவையை நிறைவேற்றிய தும் உடனே நீக்கப்படுகின்றது. "உலக நெறிப்படி பார்க்கும் எமக்கு புதிதாகப் புகுத்தப்படும் அமிசமும் அது களையப்படுவதும் மட்டுமே புறக் கண்ணுக்குத் தெரிவதாலும் சாஸ்திரக் கண்கொண்டு பார்க்கும் பொழுது மட்டுமே அதன் சேர்க்கையால் நுண்ணியதாகக் குறிப்பிட்ட தேவை பூர்த்திசெய்யப்படுவது உணரப்படுவதாலும், இந்நுண்ணிய நிகழ்ச்சி உணராதார் இவ்விலக்கண நிகழ்ச்சி பயனற்றதே என்றும் வாதாட இடமுண்டு" என இலக்கண மரபை விளக்கிக் கொண்டிருக் கும் ஆசிரியர் இந்நிகழ்ச்சி முறையைத் தெளிய வைக்கத் திருட்டாந்த மொன்றும் கூறுவர். நமது வேட்டி அழுக்கேறி இருக்கின்றது. அழுக்கைக் களைய வேண்டிய அதில் சவர்க்காரத்தைத் தேய்த்துச் சுவற வைக்கின்றோம். சிறிது நேரத்தில் சவர்க்காரத்தின் சேர்க்கை துணியிலிருந்து .அழுக்கை நெகிழ்த்திப் பிரியவைக்கின்றது. துணியைக் கழுவுகிறோம். அழுக்கைக் கழற்றிவிடுகின்றோம். இங்கு அழுக்கு மட்டுமா கழலுகின்றது, விலைகொடுத்து வாங்கிப் புதிதாக நாமே பயன்படுத்திய சவர்க்காரத்தையுமல்லவா கழுவிக் கழற்றி விடுகின் றோம். அழுக்கு நீக்கம் என்னும் நோக்கம் நிறைவேறியதும் சவர்க் காரமும் கழரவேண்டியதே. இப்படி இலக்கண நிகழ்ச்சிகளை விளக்க அடிக்கடி எடுத்தாளப்படும் திருட்டாந்தங்களும் கதைகளும் பலப்பல இவற்றில் அண்ணாமலைப் பேராசிரியர்களின் போதனை முத்திரை அங்கங்கே பதிந்து கிடக்கும்" எனத் தெளிவுபடுத்துகின்றார்.

சாஸ்திரிகள் புலமை தோய்ந்த வியாகரணத்தை ஆதாரமாக வைத்து பல மாணவர்களை உருவாக்கியதோடு தமது மாணவ பரம்பரை உரு வாவதற்கு வித்திட்டுள்ளார்.

நிறுவன மயப்படுத்தப்பட்டதான மும்மொழிக் காவிய பாடசாலை, பரமேஸ்வராக்கல்லூரி, பிராசீன பாடசாலை, பிராம்மண சமாஜம், நாவலர்சபை ஆகிய நிறுவனங்களில் சம்ஸ்கிருத மொழியைப் போதிக்கும் ஆசிரியராக சாஸ்திரிகள் விளங்கினர்.

## மும்மொழிக் காவியபாடலையில் கற்பித்தல்:

திருநெல்வேலியில் பண்டிதமணி சி.கணபதிபிள்ளை அவர்கள் தலைமையில் 1938 புரட்டாதி மாதம் விஜயதசமி நன்னாளில் மும்மொழிக் காவிய பாடசாலை ஆரம்பமானது. அங்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சாஸ்திரிகள் பண்டிதமணியின் அழைப்பின் பேரில் சம்ஸ்கிருதமொழியைக் கற்பித்து வந்தார். 1944 வரையாக நடைபெற்று வந்த இப்பாடசாலையில் தொடர்ச்சி யாகவே சம்ஸ்கிருத மொழியைக் கற்பித்து வந்த சாஸ்திரிகள், பண்டிதர் உலகில் நன்கு அறிமுகமானார்.

## பரமேஸ்வராக் கல்லூரியில் கற்பித்தல்:

சாஸ்திரிகளின் திறமை பலர்பாலும் ஈர்க்கப்பட்டது. இவ்வேளை 1921இல் சேர்.பொன்.இராமநாதன் அவர்களால் சைவப்பிள்ளைகளின் பாரம்பரியத்தோடு ஆரம்பித்துவைக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியில் திருவாளர். சு.நடேச பிள்ளை அவர்கள் அதிபராக விளங்கினார். சாஸ்திரிகளை பற்றி அறிந்து அதிபர் தமது பாடசாலையில் சாஸ்திரிகளை சம்ஸ்கிருதப் பேராசிரியராகவும், சைவசமயபாட ஆசிரியராகவும் கடமையாற்றும்படி பணித்தார்.

இப்பாடசாலையில் இந்தியப் புலமையாளர்கள் பலர் ஆசிரியர்களாக விளங்கினார்.

1944 முதல் 1965 ம் ஆண்டு வரை காலமாக சம்ஸ்கிருத ஆசிரியராக விளங்கிய சாஸ்திரிகள் அனைத்து வகுப்புக்களிலும் கற்கும் பலவகை மாணவர்களுக்கும் சம்ஸ்கிருதத்தைக் கற்பித்து வந்தார். வெள்ளிக்கிழமை தோறும் பரமேஸ்வரன் ஆலயத்தில் நிகழ்ந்து வந்த சிறப்புப் பிரார்த்தனை களுக்கும் பொறுப்பாக இருந்து மாணவர்கள் மூலம் ஒழுங்கு செய்து நடாத்தி வந்த பெரும் சிறப்போடு சாஸ்திரிகள் விளங்கினார்.

சாஸ்திரிகளின் 21 வருடங்களாக ஆசிரியப் பணிபுரிந்தவேளை பெரும் பாலானவர்கள் சாஸ்திரிகள் மூலமாக சம்ஸ்கிருத மொழியின் அடிப்படை அறிவினைப் பெற்று விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகம் பிராசீன பாடசாலையில் கற்பித்தல்:

சுன்னாகத்தில் 1921இல் முகாந்திரம் தி.சதாசிவ ஐயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதே பிராசீன பாடசாலையாகும். 1934 ஆம் ஆண்டளவில் தொழிற்பாடின்றி இருந்த இப்பாடசாலையில் சில

ஆண்டுகளின் பின்பு சாஸ்திரிகள் சம்ஸ்கிருத மொழியின் தலைமையாசிரியராக இருந்து சனி ஞாயிற்றுக்கிழமைகளில் சில ஆண்டு காலம் வகுப்புக்களை நடாத்திவந்தார்.

## பிராம்மண சமாஜத்தில் கற்பித்தல்:

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் முகாந்திரம் தி.சதாசிவ ஐயர் தலைமையில் 16.07.1944இல் **பிராம்மண சமாஜம்** தோற்றம் பெற்றது. இச் சமாஜம் மேற்படி பாடசாலையில் ஆரம்பித்த சம்ஸ்கிருத பாடசாலையில் சாஸ்திரிகளே தலைமை ஆசிரியராக இருந்து மாணவர்களிடம் வேதனம் எதுவும் பெறாமல் சம்ஸ்கிருத மொழியைக் கற்பித்து வந்தார்.

இச் சமாஜம் 27.11.1950 இல் சமாஜத் தலைவர் சதாசிவ ஐயர் அவர்கள் மறையும் வரை மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது.

## நாவலர் சபையில் கற்பித்தல்

வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை (நாவலர் வித்தியாசாலை) நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் தாபிக்கப்பட்டதாகும். 1949 ம் ஆண்டு முதல் நாவலர் பெருமானின் தருமசாசனத்தின்படி சமாஜம் தொழிற்படாமல் போன பிறகு சாஸ்திரிகளை வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அருகேயிருந்த நாவலர் சொத்துக்குரிய வீட்டில் சாஸ்திரிகள் குடியமர்த்தப்பட்டார். பாடசாலையில் சம்ஸ்கிருதப் பாடசாலை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது.

1960 டிசம்பர் 1ம் திகதி இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்றதும் பண்டிதர் இ.திருநாவுக்கரசு தலைமையில் நாவலர் பரபாலன சபை உருவாக்கப்பட்டு 1963 முதல் இது மீண்டும் புத்துயிர் பெற்றது.

சாஸ்திரிகளின் தலைமையில் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் கோவிற்பூசைகளை மேற்கொள்ளும் பிராமண, சைவக் குருமார்களுக்குரிய கிரியை செய்வதற்கான பாடங்களையும் கிரியாம்சங்களையும், வேத, ஆகமங்களையும் சாஸ்திரிகளே கற்பித்து வந்தார்.

மாணவர்களிடமிருந்துவேதனம் எதுவும் பெறப்படாது நிகழ்த்தப்பட்ட இவ்வகுப்புக்களில் ஆரம்ப, மத்திய, மேற்பிரிவு மாணவர்களுக்கு அகில இலங்கை சிவப்பிராம்மண சங்கத்தின் சிவாச்சார்ய பரீட்சை, சென்னை அமரபாரதி . பரீக்ஷாசமித்தியின் பிராதமிக பரீட்சை, பம்பாய். பாரதீய வித்யாபவனத்தின் சம்ஸ்கிருத பாலபோத பரீட்சை ஆகியவற்றில் தோற்றுவதற்கு மாணவர்கள் சாஸ்திரிகளால் பயிற்றுவிக்கப்பட்டனர். 1970 வரையாக இப்பாடசாலை கிரமமாகவே நடைபெற்று வந்தது.

இப்பாடசாலையிலேயே ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தின் பண்டித வகுப்புக்களுக்கும், சைவ பரிபாலன சபையின் சைவப்புலவர் வகுப்புக்களுக்கும் சாஸ்திரிகளே சம்ஸ்கிருத ஆசிரியராகத் திகழ்ந்தார். இதனால் பல சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் உருவாக்கப் பெற்றனர்.

இவ்வாறாக சாஸ்திரிகள் தமது நிறுவனங்களின் மூலம் தமது பணியினை கவர்ச்சிகரமாகவும், திறம்படவும் செய்து வந்தார்.

## தமிழில் உரையெழுதும் பணி:

சாஸ்திரிகள் தமது சிந்தனைகளை வருங்காலச் சந்ததிக்குக் கையளிக்க வேண்டும் எனும் உயரிய எண்ணம் கொண்டவர். இவர் சம்ஸ்கிருத மொழிமூலமான அறிவினைத் தமிழ்மொழி மூலமாக பரப்பி ஒரு மாணவபரம்பரை மூலமாகப் பரோபகாரமான நோக்கிலே செயற்படலானார். இதன்பயனாக சம்ஸ்கிருத நூல்கள் சிலவற்றிற்கு முழுமையாகத் தமிழில் உரைசெய்த சாஸ்திரிகள் தாம் எடுத்துக் கொள்ளும் பாடலின் பதத்தின் சரியான பொருளை எடுத்துரைப்பதற்காகவே இவ்வாறு உரை செய்தார் என்பது புலனாகின்றது.

சாஸ்திரிகள் ஸ்தோத்திர இலக்கியங்கள், சம்ஸ்கிருத நாமலிங்கானு சாசனம் (அகராதி), பலவிதமான நிகண்டுகளின் ஸ்லோகங்கள் என்பவற்றிற்கும் விருத்தரத்னாகரம் போன்ற சில நூல்களுக்கும் தமிழில் உரையெழுதியுள்ளார்.

## சாஸ்திரிகளின் உரை நூல்கள்:

1. நாமலிங்கானு சாசனஸ்தா அகாராத்யனுக்ரமாணிகா
2. கணேசத்வாதச மஞ்சரி
3. ஸுப்ரம்மண்ய ஷட்கம்
4. கேதீஸநாத சுப்ரபாதம்.

## நாமலிங்கானு சாசனஸ்தா அகராத்யனுக்ரமாணிகா

சாஸ்திரிகள் பறாளாய் கிராமத்திலிருந்து 6.12.37 - 6.12.39 வரையான கால அவகாசத்திற்குள் சம்ஸ்கிருதச் சொற்களின் அகராதிக்குத் தமிழில் கருத்துரை செய்துள்ளார். கையெழுத்துப் பிரதியாக 8 என இலக்கமிடப்பட்ட கொப்பியாக விளங்கும் இவ்வகராதி பாகம்1, பாகம்11 எனும் பகுதிகளையுடையது. பாகம் 1 இல் 1-150 வரையான பக்கங்களில் அ - க்ஷ வரையாக 6.12.37 - 12.5.37 வரையான காலப்பகுதியில் தொகுத்து எழுதியதாகவும், பாகம் 2, 151-232 பக்கங்கள் வரை அ - க்ஷ வரையான 7.3.1939 - 6.12.1939 வரையான காலப்பகுதியில் தொகுத்து எழுதியதாகவும் அறியமுடிகின்றது.

இரு தனத்தனி அகராதித் தொகுதிகளாகக் காணப்படும் இருபகுதிகளும் ஒரு வினையடி, பெயர்ச்சொல் பெயரெச்சமாகவோ அன்றில் வினையெச்சமாகவோ நின்று கொண்டு உணர்த்தும் கருத்தினையே வெளிப்படுத்துவதாகக் காணப்படுவது புலனாகின்றது.

ஒரு வினையுருவமாயின் வினையடியின் கணம், பதம், வேர்ச்சொல் என்பவை பற்றிய விபரங்களோ, பெயரடியாயின் பால், ஈற்றுவிகுதி முதலான விபரங்களோ இடம்பெறாமை இங்கு கவனிக்கற்பாலதாக உள்ளது. வினைக்குரிய இடங்களில் உபசர்க்கங்களோடு இணையும் வினையடியின் பொருள் வேறுபாடுகள் இடம்பெற்று தெளிவாகச் சுட்டப்படுவது கவனிக்க த்தக்கதாகும்.

இந்நூலின் மூலம் பற்றிய விபரங்களை அறியமுடியவில்லை. இதன் மூலத்தன்மையை நோக்கின் அதனது இயல்பான நிலை நன்கு உணரப்படும். சாஸ்திரிகள் தாம் கல்வி கற்பிப்பதற்கு ஆரம்பித்த காலத்தில் மாணவர்களுக்கு அகராதியின் தேவை ஏற்பட்டதா? என்பது பற்றியும், அதன் பொருட்டாகவே சாஸ்திரிகள் இருபகுதிகளாக இவ்வகராதியைத் தொகுத்துள்ளாரா? என்பது போன்ற வினாக்களுக்கு விளக்கம் தரும் வகையில் நூலில் எதுவித குறிப்புக்களும் இடம்பெறாமை மனம் வருந்தத்தக்கது.

## விவித நிகண்டு ஸ்லோகா:

சாஸ்திரிகள் சம்ஸ்கிருத நிகண்டு மூலத்தினையும் தொகுத்து அதற்கு தமிழில் விளக்கவுரை செய்யப்பட்ட தன்மையில் இந்நூல் காணப்படுகின்றது.

அகராதி இடம்பெறும் 8 இலக்கக் கொப்பியில் பக்கங்கள் 234-305 வரையான ஐந்து பாகங்களைக் கொண்டு இந்நூல் விளங்குகின்றது. ஒவ்வொரு பாகத்திலும் 100 வாக்கியங்கள் வீதம் அமைந்து காணப்படுகின்றது. ஐந்தாம் பாகத்தின் இறுதியில் 20-12-1939 எனத் திகதியிடப் பெற்றுள்ளது. அத்தோடு ஏனைய பகுதி 6ம் இலக்கக் கொப்பியில் 16ம் பக்கத்தில் பார்க்க என அடிக்குறிப்பு காணப்படுகின்றது. அந்த 6 இலக்கக் கொப்பி எமக்குக் கிடைக்கப் பெறவில்லை.307 பக்கங்களில் கொண்டு விளங்கும் 8ம் இலக்கக் கொப்பியில் 307-373 வரையான பக்கங்களிலும் கருத்துப் புலனாகாத பலவித நிகண்டு ஸ்லோகங்களின் கருத்தே தெளிவாக எழுதப்பட்டதாக சாஸ்திரிகள் அக் கொப்பியின் 307ம் பக்கத்தில் 20-12-1944 இல் எனக்குறிப்பிட்டுள்ளார்.

> "**இரண்டாம் முறை நன்றாக சோதித்துக் கவனித்து எழுதப்பட்டது. இதுவே சரி. அறியாத சுலோகங்கள் துண்டு கடிதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.**"

இந்நூலின் 374, 307ம் பக்கங்களில் இருக்கும் குறிப்புக்களின்படி சாஸ்திரிகள் **விருத்த ரத்னாகரம்** எனும் சம்ஸ்கிருத யாப்பியல் நூலுக்கும் தமிழில் உணரச் செய்திருப்பதாக அறிய முடிகின்றது.

சாஸ்திரிகள் இவற்றை விட காளிதாசனின் மேகதூதம், சாகுந்தல நாடகம் ஆகியனவற்றில் இடம்பெறும் இலக்கிய நயம் பொருந்திய சொற்களுக்கு கருத்துரை வழங்கும் தன்மையில் ஒருவகையெழுத்து வடிவமான ஒரு கொப்பி இருந்ததாக அறியமுடிகின்றது. இதுவும் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

திருவாளர் சு.நடேசபிள்ளை அவர்களின் பேராதரவுடன் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களை இணைத்துக்கொண்டு சிறந்த தமிழில் **ஶ்ரீமத்மகுடாகமம்** எனும் மூல ஆகம நூலை ஏட்டுச் சுவடியிலிருந்து பெற்று மொழி பெயர்த்ததாக அறிய முடிகின்றது. 1960 களில் தினமும் மாலை வேளையில் திருவாளர் சு.நடேசபிள்ளை அவர்களின் காரில் இருவரும் சென்று இப்பணியைச் செய்து வந்ததாக அறியமுடிகின்றது. இவ்வாறான அரியநூலும் இதுவரை எமக்குக் கிடைக்கப்பெறவில்லை என்பது மனம் வருந்தத்தக்கது.

சாஸ்திரிகள் இவற்றோடு A.MACDONELL ஆசிரியர் தொகுத்து ஆங்கிலத்தில் கருத்துரை வழங்கி வெளியிட்ட A VEDIC READER FOR STUDENTS எனும் நூலையும் தமிழில் மொழி

பெயர்த்துள்ளதாக அறிய முடிகின்றது. இந்த மொழி பெயர்ப்பும் எமக்குக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக சம்ஸ்கிருத மூலங்கள் பலவற்றைப் பாரம்பரிய சாஸ்திரிய அறிவோடு சாஸ்திரிகள் தமது விழுமியக் கருத்துக்களையும் தாம் எழுதிய தமிழ் உரைகள் மூலமாக வருங்கால சமூகத்திற்காக விட்டுச் சென்றுள்ளார். இந்த உரைசெய்யப் பெற்ற நூல்கள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டு அவை பேணப்பட வேண்டியவை என்பது நன்கு புலனாகின்றது. இதனால் வருங்கால சமூகம் மிகுந்த பயனை அடையும் என்பது நிச்சயம்.

## 4.சாஸ்திரிகளின் சம்ஸ்கிருத இலக்கிய ஆக்கங்கள்:

சம்ஸ்கிருத மொழியின் சிறப்புக்களை சிறிதேனும் அறியாதவர்களிடத்தில் சம்ஸ்கிருதமொழி பழைய மொழி எனும் சிறப்பை ஒத்துக் கொள்ளும் அதேவேளை சம்ஸ்கிருதமொழி வழக்கற்றுப்போன மொழி எனக் கூறும் தவறான கருத்துநிலை காணப்படுகின்றது. இந்தத் தவறான கருத்தினைக்களையும் வகையில் தொடர்ச்சியாக யாழ்ப்பாண சமூகத்திலேயேயும் காலந்தோறும் பல அறிஞர்கள் தோன்றியுள்ளனர்.

சாஸ்திரிகளோவெனில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவராக இருந்தாலும் யாழ்ப்பாண சமூகத்தில் சமகாலத்தில் சம்ஸ்கிருத மொழி உயிரூட்டமுள்ளது என்பதனை நிலைநாட்டும் தன்மையில் சம்ஸ்கிருத இலக்கிய ஆக்கங்களை சமூகத்திற்கு அளித்துள்ளார்.

சாஸ்திரிகள் சம்ஸ்கிருதக் கவிதைகள் மூலமாக பல ஆக்கங்களையும், வசனமாகப் பல ஆக்கங்களை ஆக்கியுள்ளார். இவ்வாறாக அமைந்த சாஸ்திரிகளின் ஆக்கங்கள் இலக்கியங்கள் எனப் போற்றுதற்குரிய உயரிய தரம் வாய்ந்தவையாக சம்ஸ்கிருத மொழி மூலமாக அமைந்துள்ளன. இவ்வாறான சாஸ்திரிகளின் ஆக்கங்களை ஐந்து பகுதிகளாக வகுத்து நோக்கலாம்.

1. இலக்கியம்
2. ஸ்தோத்திரம்
3. தொகுப்பு நூல்கள்
4. உரையாடலும் கடிதமும்
5. சரம கவிகள்

என இவ்வாறாக சாஸ்திரிகளின் ஆக்கங்களைப் பகுத்து

நோக்கும்போது சாஸ்திரிகளின் சம்ஸ்கிருத இலக்கியப்பணி எத்தன்மையது என்பது நன்கு புலனாகும்.

## சாத்திரிகளின் இலக்கியம்

இலக்கியம் என்பதுஉயர்ந்த சிந்தனைகளின் பதிவு எனக் கொள்வது மரபு. காவ்யப்பிரஜோயனம் (காவியத்தின் பயன்) காவ்யஹேது (கவிஞனின் தகைமை) என்பவற்றோடு ஒரு இலக்கியத்தின் உள்ளே விளங்குகின்ற ரஸம், அலங்காரம், ரீதி, வக்ரோக்கி, த்வனி, ஔச்சித்யம், அநுமிதி என்பவைகளை நுணுக்கமாக நோக்குவது காவியவியலாளர்களுடைய மரபு. இத்தகைய தன்மைகளே ஒரு காவ்யத்தின் தரத்தினை தெளிவாகச் சுட்டி நிற்கும்.

சாஸ்திரிகளின் காவ்யப்ரயோஜனம் பற்றி சாஸ்திரிகளின் கவிதைகளைக் கொண்டு நோக்கும்போது சமயம் சார்ந்ததாக தத்துவத்தைப் பற்றிப் போதிப்பதோடு மனச்சாந்தியை அளிப்பவையாக விளங்குகின்றன.

சாஸ்திரிகளின் காவ்யஹேது ஆனது பொதுவான கவிஞனுக்குரிய தான ப்ரதிபா, வ்யுத்பத்தி, அப்யாஸம் எனும் மூன்றினுள் 'ரதிபா எனும் கற்பனை 'கவிதையியற்றும் ஆற்றல், கவிதாசக்தி என்பனவும், வ்யுத்பத்தி எனும் நூலறிவு, உலகியல் அறிவு புலமை பண்பாடு என்பனவும் அமைந்து விளங்கும் தன்மையினைத் தெளிவாக நோக்கக் கூடியதாக இருக்கின்றது. சாஸ்திரிகளின் இலக்கியங்கள் எனும் வகையினுள்

அ. கேதீஸநாத சுப்ரபாதம்

ஆ. மானஸீக ஷேத்ராடனம்

எனும் இரண்டையும் நோக்கலாம்.

## அ.கேதீஸநாத சுப்ரபாதம்:

கேதீஸநாத சுப்ரபாதம் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் திருக்கேதீச்சரத்து இறைவன்மீது பாடப்பட்ட இலக்கிய மாகும். இலங்கையின் மேற்குப் பகுதியில் மன்னார்ப் பகுதியில் மாதோட்டம் எனும் பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

புராணச் செல்வாக்கில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்கள் மிக்க இவ்வாலயத்தின் சிறப்புக்கள் பற்றி தக்ஷிணகைலாச மாஹாத்மியம் இரண்டாம் அத்தியாயம் கூறுகின்றது. த்வஷ்டா, கேது, இராமன்,

அகஸ்தியர் ஆகியோரில் த்வஷ்டா, கேது ஆகியோர் அஷ்டகம், தசகம் மூலம் கேதீஸ்வரப் பெருமானைத் தோத்தரித்துள்ளனர்.

சைவ நாயன்மார்களுள் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோரால் தேவாரப் பாசுரங்களால் புகழப்பட்ட சிறப்புடைய தலம் என்பதும் திருக்கேதீச்சரத்துக்குரிய தனியான சிறப்பம்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கேதீச்சரம் தொடர்பான வரலாற்று நூல்கள், மான்மியங்கள், ஸ்தலபுராணங்கள் எனத் தோன்றுவதற்கு சைவ சமூகம் புதிய முயற்சிகள் எடுத்தன. அத்தகைய தன்மையின் ஒரு உந்துநிலை ஊக்குவிப்பே சாஸ்திரிகளின் கேதீஸநாத சுப்ரபாதம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

கேதீஸநாத சுப்ரபாதம் சாஸ்திரிகளின் கவிதை வடிவமாக வெளிவந்த குட்டிக் காவியமாகும். இந்நூல் 29 சுலோகங்களைக் கொண்டு விளங்குகின்றது. சுப்ரபாதம், ப்ரதிபத்தி, மங்களம் என்பன இந்நூலின் மூன்று உட்பிரிவுகளாகும்.

த்வஸ்டாவிஸ் அஷ்டகத்தை ஒத்த சாயலுடைய சாஸ்திரிகளின் சுப்ரபாதத்தை சாஸ்திரிகளின் மொழி நடைபற்றி நோக்கும் 5ம் பகுதியில் நோக்குவோம்.

கேதீஸநாத சுப்ரபாதத்தை பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் தமது மூன்றாவது வெளியீடாக அக்டோபர் 1967ல் முதற் பதிப்பாக யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் அச்சகத்தில் சம்ஸ்கிருத தேவநாகரி வரிவடிவம் மூலம் தமிழில் பொழிப்புரையுடன் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இந்நூலுக்கு பதிப்புரையை 12.10.1967ல் இந்துமாணவ சங்கப் போஷகர் பேராசிரியர் பேரம்பலம் கனகசபாபதி அவர்கள் வழங்கியுள்ளார். உபக்கிரமணியை சாஸ்திரிகளே எழுதியுள்ளார். இந்துசாதனத்தில் மறுபதிப்பாக இச்சுப்ரபாதம் பகுதிபகுதியாக வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நூலுக்குரிய பொழிப்புரையை தமிழில் சாஸ்திரிகளே எழுதியுள்ளார். பக்திச் சுவைமிகுந்த இந்நூல் கேதீஸநாத சுப்ரபாதம் 10 சுலோகங்களிலும், ப்ரதிபத்தி 11 சுலோகங்களிலும், மங்களம் 5 சுலோகங்களிலுமாக அமைந்து மூன்று பகுதிகளைத் தன்னகத்தே

கொண்டதாக அமைந்து காணப்படுகின்றது.

இந்தக் குட்டிக் காவியமான ஸுப்ரபாதம் இலங்கையிற் தோன்றிய இலக்கியம் என்பது இங்கு நோக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

## ஆ. மானஸீக க்ஷேத்ராடனம்

சாஸ்திரிகளின் கவித்திறனையும் கற்பனை வளத்தினையும் இறைபக்தியையும் அறியக்கூடிய சிறந்த இலக்கியப் படைப்பாக மானஸீக ஷேத்ராடனம் எனும் ஸ்தோத்திரத் தொகுப்பு விளங்குகின்றது.

ஸ்தோத்திர இலக்கியங்களுள் மானஸபூஜா ஸ்தோத்திரம் பிரசித்தி பெற்று விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. பாரத நாட்டைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட சாஸ்திரிகள் இலங்கையில் வசித்து வந்த போதும் இந்தியர்களுக்குரிய சிறப்புமிக்க பண்பாடான ஸ்தல யாத்திரையை இது நினைவு கூறுவதாக அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட சுலோகங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் முழுமையான நூல் எமக்கு இதுவரை கிடைக்காது போனமை துரதி'ஷ்டவசமேயாகும்.

திருக்கேதீஸ்வரப் பெருமான்மீது பாடிய சுப்ரபாதத்தின் இறுதியில் சிதம்பரக்ஷேத்திரம் பற்றிய மானஸீக ஸ்தோத்திரம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகள் சிதம்பரத்தில் R.M.S. பாடசாலையில் படிக்கும் காலத்தில் சிதம்பர நடராஜமூர்த்திக்கு சேவை செய்யும் பாக்கியம் பெற்றவர். இது பிறவியிற் செய்த பூர்வஜன்ம பலனால் கிடைக்கும் உயர்பேறு எனத் தில்லைவாழந்தணர் குழாமே பெருமை கொள்ளும் சிறப்பினை நாம் இன்றும் நன்கு உணரமுடிகின்றது.

இந்நிலையில் நடராஜமூர்த்தியைச் சித்தத்தில் நினைக்கும் சாஸ்திரிகள் சொல்லியும் அடங்காத அந்த க்ஷேத்திரத்தின் சிறப்புக்களைத் 8 சுலோகங்களில் கூறமுற்படுகின்றார்.

இவ்வாறாகப் பல்வேறு ஷேத்திரங்களுக்கும் தாம் சென்றதும்

அறிந்ததுமான மூர்த்தி, தீர்த்த, ஸ்தல விசேடங்களை இதே போன்றே தமது பக்தியுணர்வோடு மானஸீக க்ஷேத்ராடன மாக சாஸ்திரிகள் பாடியிருப்பொர் என்பது புலனாகின்றது.

## 2.ஸ்தோத்திரம்:

சாஸ்திரிகள் தமது கவிதாவின் பிரதிபா மூலமாக தெய்வீகம் சம்பந்தமான பல ஸ்தோத்திரங்களையும், கவிதையாற்றலால் லௌகிகம் சம்பந்தமான சில வாழ்த்துப் பத்திரங்கள் போன்றவற்றையும் ஆக்கியுள்ளமை பற்றி அறியமுடிகின்றது.

சாஸ்திரிகளின் தெய்வீகம் சார்ந்த ஸ்தோத்திரங்களாக கணேச பஞ்சரத்னம், வல்லீச ப்ரபோத தசகம் முதலான சில ஸ்தோத்திரங்களையும் அக்ஷரமாலிகா தேவீ சூர்ணிகா எனும் ஸ்தோத்திரத்தையும் இயற்றியுள்ளதாக அறியமுடிகின்றது. தமது கையெழுத்திலேயே பல ஸ்தோத்திரங்களை எழுதி வைத்துள்ள சாஸ்திரிகளின் பிரதியைப் பழைய ஸ்தோத்திரங்களோடு ஒப்புநோக்கி ஆராய்ந்தால் சாஸ்திரிகளின் ஸ்தோத்திரப் படைப்புக்களைத் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும். சாஸ்திரிகள் லௌகிகம் சார்ந்ததாக கவிதாரூபத்தில் பல ஸ்தோத்திரங்களை இயற்றியுள்ளார்.

அச்சுவேலி சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக்குருக்கள் தொகுத்து எழுதியுள்ள வைதிக சந்தியாவந்தன விதி எனும் நூலுக்கு (1960) சாஸ்திரிகள் 20 அனுஷ்டுப் சுலோகங்களாலான சிறப்புப்பாயிரத்தினை வழங்கியதோடு அதற்கு தமிழ்மொழி பெயர்ப்பையும் எழுதியுள்ளார்.

சாஸ்திரிகளால் ஆக்கப்பட்டு அகில இலங்கை பிராம்மண குரு சேவா சங்கத்தின் மூலமாக செந்தமிழ்ப் பேரறிஞர் கி.வா.ஜகன்நாதன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நன்மொழி வாழ்த்துப் பத்திரம் கிரந்தலிபியில் தமிழ் அர்த்தத்துடன் 8 சுலோகங்கள் கொண்டதாகக் காணப்படுகின்றது.

கொழும்பு இராமகானசபாவில் 1974ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராக பதவியேற்ற கலாநிதி. கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களுக்கு அளித்த வாழ்த்துப் பத்திரம் சாஸ்திரிகளால் இயற்றப்பட்டதாகும்.

மாவிட்டபுரம் வேதாகம நூல் நிலையத் திறப்பு விழாவிற்கும்

சாஸ்திரிகள் மூன்று சுலோகங்களில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இவ்வாறான தன்மைகளைக் கொண்டு சாஸ்திரிகளின் கவித்துவம் பற்றி அறிய முடிகின்றது.

## தொகுப்பு நூல்கள்:

சாஸ்திரிகள் பல நூல்களை நன்கு ஆராய்ந்து தமது போதனையின் பயனாக சமூகத்திற்குத் தேவையான பலநூல்களைத் தொகுத்துள்ளார்கள். அவைகளுள் சம்ஸ்கிருத பயிற்சிநூல், வேதம், ஆகமம் சம்பந்தமானது. அகராதி, ஸ்தோத்திரங்கள் எனப் பல்வேறு தன்மையில் நோக்கலாம்.

சம்ஸ்கிருத மொழியின் பயிற்சிநூல் எனும் வகையில் சாஸ்திரிகள் தொகுத்துள்ள **சம்ஸ்கிருத சிக்ஷ ரப்ரதம சோபானம்** எனும் நூல் விளங்குகின்றது. இந்நூல் சம்ஸ்கிருத ஆரம்பநூல் எனும் வகையில் ஒரு பயிற்சி நூலாகவும் தொகுப்பு நூலாகவும் விளங்குகின்றது. **ககார கணபதி ஸஹஸ்ர நாமாவளீ:** எனும் கிரந்தபிலியில் அமைந்த நூல் சாஸ்திரிகளின் ஆராய்ச்சியின் பயனாக 1955ல் பதிப்பிக்கப்பட்டதாகும்.

**ஆகம க்ரியா முக்தாமணய:** எனும் தொகுப்பு நூல் நான்கு பாகங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. பதிக்கப்படாததும் அச்சிடுவதற்கு தயார் செய்யப்பட்டதுமான இந்நூலின் முதலாம் புத்தகம் 50 பக்கங்களில் தேவதாவாஹனமந்திரங்கள் முதல் ஸ்ரீருத்ரம் வரையாக விளங்குகின்றது. இரண்டாம் புத்தகம் விக்னேஸ்வரர், சுப்பிரமணியர், சிவன், தேவீ, பைரவர், எனும் ஐந்து மூர்த்திகளுக்குமுரிய ஸ்நபன பூஜாஷதிகளைத் தொகுத்து ஒரே நூலாக ஆக்கியுள்ளார். இதன் பின்னிணைப்பாக நியாசங்கள், தியானங்கள், அபிஷேகத் திரவியங்கள் என்பன இணைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் புத்தகம் சிறியதாக கணபதி முதல் நவக்கிரகம் ஈறாக 19 தேவர்களில் சிவன் தேவீ இருவருக்கும் இருபது (விம்சதி) நாமாவளிகள் வீதமும் ஏனைய தேவர்களுக்கு 16 ( சோடச) நாமாவளிகள் வீதமும் அர்ச்சனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. நான்காம் புத்தகம் லலிதா, வேதசா சிவன், சுப்ரம்மணியர் 'ஆகியோரின் ஸஹஸ்ரநாமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டுக் காணப்படுகின்றது. சாஸ்திரிகளால் தொகுக்கப்பெற்ற இந்நூல் ஆலயக் கிரியைகளில் (ஆகமக்கிரியைகளில்) ஈடுபடுபவர்களுக்கு மிகவும் பயனுள்ள நூலாக அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**நாமலிங்கானுசாசனஸ்தானுக்ரமாணிகா** எனும் சாஸ்திரிகளால்

இருபாகங்களாகத் தொகுக்கப்பட்ட அகராதி நூலானது தமிழ் அர்த்தத்துடன் விளங்குகிறது. இந்நூலின்மூலம் நோக்கம் என்பவை பற்றிய விபரங்கள் அறியமுடியாது காணப்படினும் சாஸ்திரிகளின் முயற்சிகள் வரவேற்கத்தக்கதாகவும் காலத்தின் தேவைகருதி தொகுக்கப்பட்டதாகவும் உண்மையை உணரமுடிகின்றது.

**விவித நிகண்டு ஸ்லோகா** : எனும் ஐந்து பாகங்களைக் கொண்டதும் ஒவ்வொரு பாகத்திலும் 100 சுலோகங்கள்/வசனங்கள் வீதம் அமைந்து காணப்படும் சாஸ்திரிகளின் தொகுப்பு நூலான இது தமிழ் அர்த்தத்துடன் காணப்படுகின்றது. இந்நூலின் எஞ்சிய பகுதிகள் காணப்படாதவிடத்து ஏனைய விபரங்களைப்பற்றி அறிய முடியாதுள்ளது.

காளிதாஸனின் இலக்கியங்கள் சம்பந்தமான சில முக்கிய சொற்களுக்குரிய பொருளை கவிநயத்துடன் தொகுத்துக் கூறும் சாஸ்திரிகளின் கையெழுத்துப் பிரதிநூல் எழுதப்பட்டதாக அறிய முடிந்தாலும் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்பது மனம் வருந்தத் தக்கதாகும்.

ஸ்தோத்திராணி என சாஸ்திரிகள் கணேச, சுப்ரம்மண்ய, சிவ, தேவீ, விஷ்ணு ஸ்தோத்திரங்களை 3 கொப்பிகளில் தமது கைப்பட எழுதி வைத்துள்ளார்.

இதே போன்று சில பத்ததிகளையும், சாந்தி பூஜைகள் தொடர்பான பூஜை முறைகளையும், வைதிகக் கிரியை தொடர்பான ஒழுங்குகளையும் தமது கைப்படத் தொகுத்து எழுதி வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## உரையாடலும் கடிதமும்:

சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்தில் சரளமாக உரையாடும் ஆற்றல் மிக்கவர். சாஸ்திரிகளின் உரையாடலில் நகைச்சுவை விரவிக் காணப்படுவதோடு கல்வி கற்பிக்கும் வேளையில் உணர்வு வசப்பட்ட உரையாடலின்தன்மைகளை சாஸ்திரிகளின் மா்ணவரான பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் தமது குருஸ்தோத்திரம் 5ம், 6ம், 7ம், 8ம் சுலோகங்களில் புகழ்ந்துரைக்கின்றார்.

சாஸ்திரிகள் சம்ஸ்கிருதத்திலே கடிதம் எழுதும் வழக்கமுடையவர்.இவர் தமது முதல் மாணாக்கரான பேராசிரியர் கா.கைலாச நாதக்குருக்கள் அவர்களுக்கு எழுதிய 10 கடிதங்கள்

வரையிலானவையே ஆசிரியருக்குக் கிடைத்துள்ளது. அந்தக் கடிதங்களுள் தமது மாணவரான பேராசிரியர் குருக்கள் அவர்கள் முன்னேஸ்வரம் வடிவாம்பிகைக்குச் சமர்ப்பித்த வடிவாம்பிகா கஞ்சரத்தினத்திற்கு விமர்சனமாக எழுதிய கடிதம் குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகளின் நகைச்சுவையின் தன்மையினை நவீன கன்யகாதான ப்ரகாரம் எனும் கற்பனைத்திறன் மூலம் அறிய முடிகின்றது.

**சரமகவி:**

சாஸ்திரிகள் தமது காலத்தில் பிரசித்திபெற்று விளங்கிய சிலர் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் இறைநிலை அடைந்த போது அவர்களைக் குறித்து சரம ஸ்லோகங்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.

காரைதீவு கணபதீஸ்வரக் குருக்களின் தர்மபத்தினிக்கு சிகரிணி யாப்பில் 12 சுலோகங்களிலும், நீர்வேலி சுவாமிநாதக் குருக்களுக்கு எட்டு சுலோகங்களிலும், உடுவில் பிரம்மஸ்ரீ தியாகராஜக்குருக்களுக்கு 09 சுலோகங்களிலும், சுன்னாகம் சதாசிவ ஐயருக்கு 09 சுலோகங்களிலும், மயிலணி சிதம்பரநாதக்குருக்களுக்கு பல்வேறு யாப்புகளைக் கொண்டதாக 21 சுலோகங்களிலும், மட்டுவில் பொன்னுஸ்வாமிக் குருக்களுக்கு 12 சுலோகங்களிலுமாக தேஹவி யோகமடைந்த வேளையில் சரம ஸ்லோகங்களினை சாஸ்திரிகள் பாடியுள்ளார். இவை கையெழுத்துப் பிரதிகளாகவேஉள்ளன.

மயிலணி பிரம்மஸ்ரீ சி.கார்த்திகேசு ஐயர் (1973) அவர்களுக்கு துவாதசமஞ்ஜரீ என 12 சுலோகங்களில் சாஸ்திரிகள் சரம கவி பாடியுள்ளார்கள். இது நினைவு மலருடன் கூடியதாக கிரந்தலிபியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

# 5

# சாஸ்திரிகளின் உரைநடையும் மொழி நடையும்

## சாஸ்திரிகளின் உரைநடை

சம்ஸ்கிருத இலக்கியப் பரப்பிலே உரைநடை இலக்கியங்கள் பத்யங்கள் என அழைக்கப்படும். இவ்வகை இலக்கியங்களினை ஆக்கிவர்களாக தண்டி, பாணர், சுபந்து ஆகியோர் புகழ்ந்து பேசப்படுகின்றனர். இவ்வாறாக புகழப்படும் கவிகளின் நடைகளைப் பின்பற்றியதாகவே சாஸ்திரிகளின் உரைநடையின் சாயல் காணப்படுகின்றது.

சாஸ்திரிகளின் உரைநடையின் மூலம் கற்போர் மனதில் ஓசைநயம் மிக்க தன்மையும் தொடர்ந்து வாசிக்கவேண்டிய ஆவலைத் தூண்டும் தன்மையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மரியாதைப்பன்மை வசனத்தை முன்னிட்டுக் கடினமற்றதும், பெரும்பாலும் தற்புருஷமாசங்களின் தொடர்கள் நிறைந்ததுமான வசனநடை சாஸ்திரிகளுக்கேயுரிய தனி அழகு எனில் மிகையாகாது. ஓசைநயம் மிக்கது. கவர்ச்சிகரமானது. பெரும்பாலும் ஒரு வினைமுற்றையே கொண்டு விளங்குவது. வல்லெழுத்துக்கள் அதிகம் காணப்படாதிருப்பது எனப் பல்வேறுபட்ட சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குவதனைக் காணமுடிகின்றது.

ஓசைநயம் மிக்க சாஸ்திரிகளின் உரைநடையினை அச்சுவேலி சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் தொகுத்து வெளியிட்ட சுப்பிரம்மண்ய பிரதிஷ்டாவிதி நூல் வெளியீட்டு விழாவில் நீர்வேலி சிவஸ்ரீ.இராஜேந்திரக்குருக்கள் சமர்ப்பிப்பதற்காக சாஸ்திரிகள் எழுதிய பாராட்டுப் பத்திரத்தில் உணரக் கூடியதாக உள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் திறப்பு விழாவிற்கு சாஸ்திரிகள் அளித்த பிரார்த்தனை உரையின் மூலமாக விபரித்து இருக்கும் வசனநடையின் அழகும் தனித்துவமானது. இவ்வானொலியின் பயன்பற்றி அடுக்குத் தொடரில் வர்ணிக்கும் மொழியின் அழகு தனித்துவமானது. மிகப்பெரிய வசனமாகத் திகழும்

இந்தப்பிரார்த்தனையில் மூன்று வினைமுற்றுக்களே விளங்குகின்றன. இவை அனைத்தும் ஒரு தொடர் வசனமாகவே அமைந்து காணப்படுகின்றது.

இதேபோல் சாஸ்திரிகள் நல்வரவு கூறி வரவேற்கும் திறன் தனித்துவமானது. சம்ஸ்கிருத மொழியில் தாமே எழுதி வாசித்து வரவேற்பளிக்கும் போது வரவேற்கப்படுபவர்களைமுன்னிலைப்படுத்தி அவர்களின் பெருமைகளையும் நாட்டின் பெருமைகளையும் கூறி வரவேற்பது குறிப்பிடதக்கது.

புத்தகுருமார் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது சாஸ்திரிகள் சம்ஸ்கிருத மொழியில் எழுதி வாசித்த **ஸ்வாகதம்,** தனித்துவமான இங்கு சாஸ்திரிகள் வாசித்தளிக்கும் வரவேற்புப் பத்திரத்தின் ஷநல்வரவு' என்பது மூன்றுமுறை இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்க தனித்துவமான உரைநடைத்தெளிவுத் தன்மையைக் காட்டி நிற்கின்றது. மக்களின் சார்பில் அவர்களிடத்தில் சமர்ப்பித்ததும் சாஸ்திரிகளின் நினைவுகளில் யாழ்ப்பாணத்தில் கலாசாலை உருவாக வேண்டும் எனும் எண்ணம் நிலையாக வேரூன்றி இருந்தது என்பதனையும் உணரமுடிகின்றது. இவற்றைவிட சாஸ்திரிகளின் வசனநடை ஆக்கங்களாக வடஇலங்கை சம்ஸ்கிருதசங்கம் வண்ணை பிரம்மஸ்ரீ வை.ஆத்மநாதசர்மாவுக்கு வழங்கிய **சேவைநலன் பாராட்டு நன்மொழிப் பத்திரம்** 19-04-1966 இல் பௌத்த பிக்குமாருக்கு பலாலி விமான நிலையத்தில் அழைத்த **வரவேற்புப் பத்திரம்** என்பன காணப்படுகின்றன.

சம்ஸ்கிருத மொழியில் அமைந்த சிறப்புப் பாயிரமாக சாஸ்திரிகளின் முதல் மாணாக்கன் பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களின் சம்ஸ்கிருத இலகுபோதம் முதலாம் பாகத்தில் சாஸ்திரிகளின் அழகிய வசன அமைப்புக் காணப்படுகின்றது.

**இராமவதார ரஹஸ்யம்** என சம்ஸ்கிருதத்தில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றும்; வாழ்க்கைக் குறிப்புக்கள் பற்றி சம்ஸ்கிருதத்தில் வசனநடையாக எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களும் சாஸ்திரிகளின் வசனநடை ஆக்கங்களாகக் காணப்படுகின்றன.

இவ்வாறாக மிகக் குறைந்த அளவில் சாஸ்திரிகளின் சம்ஸ்கிருத உரைநடை வடிவங்கள் காணப்படினும் தண்டி ஆசிரியரைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் போக்கினையுடைய தன்மையினை அவற்றினூடே காணமுடிகின்றது.

## சாஸ்திரிகளின் மொழிநடை

சாஸ்திரிகளின் மொழி நடையானது முன்னோர் மரபுகளைப் பொன்னேபோற் போற்றும் தன்மையையுடைய மொழிநடையின் போக்கினைக் கொண்டு உணரக் கூடியதாகவுள்ளது.

சாஸ்திரிகளின் மொழிநடை பற்றி சாஸ்திரிகளின் முதல் மாணாக்கர் பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் அவர்கள் கூறுகையில்: **சம்ஸ்கிருதத்தில் உரையாடும் பொழுதும் கடிதங்கள் எழுதும்பொழுதும் எம் குருநாதர் கையாளும் நடை களிப்பூட்டுவது; ஓசை நயந் தருவது; ரஞ்சகமானது; எளிமை வாய்ந்தது; கம்பீரம் மிக்கது; பாணனையும் தண்டியையும் மாறிமாறி நினைவூட்டுவது; அவர்கள் யாத்த சம்ஸ்கிருதக் கவிதைகள் சாஸ்திரீயத்துறையில் உள்ள புலமையை மட்டுமன்றி நாமகளின் அருணோக்கின் சிறப்பினையும் பாரதிதேவியின் அருட்பெருக்கு பிரவகித்துக் கவிதைகளாகப் பெருக்கெடுப்பதையும் சுட்டும். பாரத நாட்டுத் திருத்தலங்கள் மீது பாடிய தனிப்பாடல்கள் காதையும் கருத்தையும் கவரும் வனப்பின. ஓசை நயமும் பொருணயமும் மிக்குப் பெருஞ்சுவை பயப்பன. பக்தியுணர்வைப் பெருக்குவன. கேதீஸ்வரப் பெருமானின் மீது பாடிய சுப்பிரபாதம் பக்திச் சுவை பெருக்கும் குட்டிக் காவியமாகத் திகழ்கின்றது.**

என இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றார்கள். இவ்வாறாகப் பேராசிரியரின் கருத்தை முன்வைத்து சாஸ்திரிகளின் மொழி நடையை நோக்கலாம்.

சாஸ்திரிகள் ஆத்மநாதசர்மாவை வணிக்கும் பகுதி மஹாஸ்வேதையை பாணபட்டர் வர்ணிக்கும் போக்கினை உடைய தன்மையினை உடைய சாயல்கள் காணப்படுகின்றன.

தண்டியாசிரியர் கூறும் வைதர்ப்ப நடையை ஒத்த தன்மையில் ஸ்லேசம் முதலான பத்துக் குணங்களின் தன்மைகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கு மேலாக வாசகரின் வாய்க்கு இதமளிக்கும் தன்மையில் அமைந்த மெல்லெழுத்துக்களின் அடுக்குகளால் ஒன்று சேர்க்கப்படும் வசனங்களின் போக்கும் சாஸ்திரிகளுக்கேயுரிய தனித்துவத்தினை எடுத்துக் காட்டுவதாக விளங்குகின்றது.

இவ்வாறாக சாஸ்திரிகளின் வசன நடையின் தன்மையினை உணரமுடித்தது. சாஸ்திரிகளின் செய்யுள் நடையினைப் பற்றி நோக்குகையில் சாஸ்திரிகளிடத்து பெரும்பான்மையாக பக்திச் சுவையின் பெருக்குக் காணப்படுவதனையே காணமுடிகின்றது. மேலும், புராதனமானதும் புராணங்களில் இடம்பெறுவது போன்ற சுலோகங்களின் சாயல்களையே காணமுடிகின்றது. இவ்வாறான தன்மையில் சாஸ்திரிகளின் பக்திச்சுவை மிகுந்த சுப்ரபாதத்தில் மங்களத்தில் இடம்பெறும் பகுதிகளை தக்ஷிணகைலாச மாஹாத்மியத்து இரண்டாம் அத்தியாயத்தில் த்வஷ்டாவினால் கேதீஸநாதப்பெருமான் துதிக்கப்படுகின்ற ஸ்தோத்திரத்தில் (II-52-58) முதல் இரண்டு சுலோகங்களிலும் காணப்படும் சாயல்கள் அவ்விதமே காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அதே தன்மையிலேயே மங்களம் எனும் பகுதியும் அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகள் இயற்றிய கவிதைகள் வசந்ததிலகா எனும் ஒவ்வொரு பாதத்திலும் 14 அசைகள் கொண்டதாக 56 அசைகள் கொண்டதாக அமைக்கப்பட்ட யாப்பில் சுப்ரபாதம், ப்ரதிபத்தி என்பனவும்; அனுஷ்டுப் எனும் ஒவ்வொரு பாதத்திலும் 8 அசைகள் கொண்டதாக 32 அசைகள் கொண்டதாக அமைக்கப்பட்ட யாப்பில் மங்களம், மானஸீகக்ஷேத்ராடனம் அமைந்திருப்பதனையும்; சார்த்தூலவிக்ரீடிதா யாப்பில் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் அவர்களுக்கு வழங்கிய வாழ்த்துப் பத்திரத்தில் விளங்கும் தன்மையினையும்; கி.வா.ஜ. அவர்களுக்கு அளித்த நன்மொழி வாழ்த்தில் ஆறு யாப்புக்களான உபஜாதி, பிரஹர்ஷிணீ, மௌக்திகமாலா, இந்ரவம்சா, ஸ்ரக்தரா, உஜ்வலா எனும் யாப்புக்களில் அமைந்திருப்பதனையும் காணமுடிகின்றது. சரமஸ்லோகங்களின் யாப்புக்களும் பலதரப்பட்டவையே. இவைகளுள் சார்தூலவிக்ரீடிதா எனும் யாப்பமைதியானது காளிதாஸ மஹாகவியின் சாகுந்தல நாடகத்தின் சாயலை ஒத்த தன்மைகள் பிரதிநிதித்துவமா கின்றமையை சாஸ்திரிகளின் நடையாகக் காண முடிகின்றது. இவை பெரும்பாலும் சாஸ்திரிகளின் மனதில் குடிகொண்ட மஹாகவிகளின் இலக்கியங்களின் தாக்கங்கள் எனலாம்.

சாஸ்திரிகள் தமது கற்பித்தற் பயிற்சி நூலில் கூட வினைமுற்றுக்களுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தினை விட வினையெச்சங்கள், பெயரெச்சங்கள், பிரதிப்பெயர்ச்சொற்கள் என்பவற்றினையே அடுக்கடுக்காகப் பிரயோகிக்கும் சிறப்பு அவர்களுடைய

வசனங்களிலும், கவிதைகளிலும் அதிகமாகக் காணப்படுவது நோக்குதற்குரியது.

விளித்து ஒருவரை மரியாதைப் பன்மையில் அழைக்கும் தன்மைகளையும் தன்மைப் பன்மையுருவில் விபரிக்கும் தன்மையினையும் ஸ்வாகதம், வாழ்த்துப் பத்திரங்கள் மூலம் அறிய முடிகின்றது. நிகழ்காலம், ஏவல்வினை, ஆசீர்வாதவினை, இரட்டித்த இறந்தகாலம், இறந்தகாலம் ஆகிய வினைமுற்றுக்களையே பெரிதும் தமது நடையில் பயன்படுத்தும் சாஸ்திரிகள் பெயரெச்சங்களையும் இவற்றிற்கு நிகராக தமது உரைகளில் பிரயோகிப்பதுண்டு. இவை சாஸ்திரிகளின் நடையின் தனித்துவமான அம்சங்கள் எனலாம்.

சாஸ்திரிகளின் மொழி நடையின் போக்குகள் படிக்கும்போது ஒவ்வொரு தடவையும் புதிய அனுபவங்களைத் தோற்றுவிக்கின்றன. சாஸ்திரிகளின் பின்புலங்களினின்று நோக்குகையில் புதிய புதிய சுவைகளை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. இது தண்டியாசிரியர் கூறும் (**காவ்யதர்சம் I.102**) தன்மையினை ஒத்துக் காணப்படுகின்றது. இங்கு காவ்யதர்சம் மூலமாகத் தண்டியாசிரியர் கூறும் இனிப்புச் சுவைகளிலும் பிரித்தறிய முடியாததும் சுவைப்பதனால் மாத்திரம் கிடைக்கக்கூடிய தன்மையில் அமைந்ததுமாக சாஸ்திரிகளின் நடைகளின் தன்மைகளை சுவைகளை வார்த்தைகளால் முழுதும் வெளிப்படுத்திவிட முடியாது.

இவ்வாறாகத் தெய்வீக மணம்வீசும் கவித்துவம்மிக்க சாஸ்திரிகளின் ஆக்கங்கள், அவற்றின் நடைகள், போக்குகள் என்பவற்றைக் கொண்டு சாஸ்திரிகளின் பரந்த சம்ஸ்கிருத இலக்கிய இலக்கணப் புலமைகளினை உய்த்துணர முடிகின்றது.

# 6

## சாஸ்திரிகளின் சமயப்பணி

**நமது சமயம் வைதிக சமயம்.வைதிகம் வேத சம்பந்தம், சைவம் சிவசம்பந்தம், வைதிகம் அறவுநெறி வேதநெறி எனப்படும். சைவம் சிவநெறி, அருள்நெறி எனவும் படும். அறிவுநெறியாகிய வைதிகம் சைவத்திற்சென்று முற்ற வேண்டும்.அங்ஙனம் சென்று முற்றாத வழி அவைதிகமாம். சைவம் வேதநெறியாகிய வைதிகத்தின் வழிவருவது. அங்ஙனம் வாராதேல் அசைவமாம். .........வைதிகம் உடல்; சைவம் உயிர்; உயிரைப்பிரிந்த உடல்; என்னாம்! உடம்பாலய பயனைப் பெறாது உயிர்பிரிந்த அவ்வுயிர் என்னாம்.**

என்பது இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் வாக்கு. இவ்வாக்கின் வரைவிலக்கணத்திற்கு ஏற்பவே வைதிக சைவ வாழ்வைத் தமது வாழ்க்கை முழுவதுமாக வாழ்ந்து காட்டிய சிறப்புக்குரியவர் சாஸ்திரிகள்.

சாஸ்திரிகள் தமது சமய வர்ழ்வில் வைதிக கர்மாநுஷ்டானங்களைக் கடைப்பிடித்தல், சம்ஸ்காரங்களைச் செய்தல், வைதிக கர்மாநுஷ்டானங்கள், சம்ஸ்காரங்கள் என்பவற்றைச் செய்வித்தல் போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்திவந்தார். அவர் பாராயண நியமங்களைத் தொடர்ந்து பேணிவந்த திறன் போற்றுதற்குரியது.

இலங்கை வந்த பின்னரே சிவாகமங்களிலே தேர்ச்சி பெற்ற சாஸ்திரிகள் ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்திய காமியக் கிரியைகளை நடாத்தி வைக்கும் பாங்கும் முக்கியமானது. ஆலயம் தொடர்பான ஐயங்களுக்கும் விளக்கமளிப்பவராக சாஸ்திரிகள் விளங்கினார்.

சாஸ்திரிகள் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் மக்களை அழைத்து ஒன்றுதிரட்டி கூட்டுப் பிரார்த்தனைகளை விசாலமான முறையில் நடாத்தி வைப்பதோடு நாமஜபம், பஜனை போன்றவற்றையும் தாமே முன்னின்று நடாத்தி வந்தார். சமய முன்னேற்றம் சமயம்பற்றிய புரிந்துணர்வு பரந்தநிலையில் ஏற்பட வேண்டும் என்பதில் அதிக விருப்பம் கொண்டார். உபந்யாசங்கள், சமயச் சொற்பொழிவுகள் ஆகியவற்றைச் செய்துவந்த சாஸ்திரிகள்

தமக்கேயுரிய பாணியில் பரந்த மனப்பாங்குடன் நுண்பொருளையும் விசாலமாக விளங்க வைக்கும் சிறப்புப் போற்றுதற்குரியது.

தமது வாழ்நாட்களில் இவ்வாறாக வாழ்ந்துவந்த சாஸ்திரிகள் பற்றி அவரது முதல் மாணாக்கர் கூறுகையில்

"சைவ சாஸ்திர விசாரணைகளே இவர்கள் பெரும் பொழுதுபோக்கு. இதனால் இத்துறையில் அனுபவமும் தேர்ச்சியும் பெருகலாயின. சாதாரண சம்பாஷைணைகளிலேயே இப்பெருக்கு நிகழக்கேட்டானந்தித்தவர்கள் ஏனையோர்க்கும் இவ்வானந்தத்தை வழங்க விரும்பி இவர்கள் மறுத்துவிடாது வலிந்து அழைத்துச் சென்று மேடையேற்றி சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துவிப்பார். அங்கு இவர்கள் வாரி வழங்கும் கருத்துக்கள் புதுவடிவினா லும் புதுப்புது விளக்கங்களாலேறிய மெருகினாலும் சிந்தையைக் கவர்ந்து கேட்போர். மனதில் உறுதியாகப் படிந்து வரலாயின.

மேலும், இவர்கள் வைதீகக் கிரியைகளையும் திருக்கோயில்களில் நித்திய கிரியைகளையும் வழிகாட்டிச் சிறப்புற நடாத்தி வைக்கும் அழகும், திறமையும் இவர்க்கே உரியதான இயல்பாகவே கைவந்தன."எனக் கூறுவதன் மூலம் புலனாகின்றது.

இவ்வாறாக சமய வாழ்வு வாழ்ந்த சாஸ்திரிகளின் சமயப் பணிகளை மூன்றாக வகுத்து நோக்கலாம்.

1. கிரியைகளைச் செய்வித்தல்.
2. பாராயண மரபு பேணுதல்
3. சமய வாழ்வில் மக்களை வழிநடத்திச் செல்லல்

## 1.கிரியைகளைச் செய்வித்தல்

சம்ஸ்கிருதம் இந்துசமயக் கிரியைகளுக்குரிய நூல்களைக் கொண்டு விளங்குவதுடன் கிரியை மொழியாகவும் விளங்கி வருகின்றது. வைதிகக் கிரியைகள் செய்து வந்த குருமரபில் வந்த சாஸ்திரிகள் தாம் கிரியைகளைச் செய்து வந்ததோடு ஏனையோர் செய்யும் கிரியைகளை எதுவித குறைவுமின்றி முன்னின்று நடாத்தி வைக்கும் திறமையும் ஆளுமையும் தனித்துவமானவை. இவ்வாறான சாஸ்திரிகளின் கிரியைகளைச் செய்விக்கும் பணியினை இரண்டாக வகுக்கலாம்.

அ. வைதிக கிரியைகளைச் செய்வித்தல்.
ஆ. ஆகமக் கிரியைகளைச் செய்வித்தல்.

## அ. வைதிகக் கிரியைகளைச் செய்வித்தல்

யாழ்ப்பாண அந்தண சமூகத்தில் மரபு நிலையில் வைதிகக் கிரியைகளைச் செய்வதில் அதிக நாட்டம் இருந்து வருகிறது. ஆனால் வைதிகக் கிரியைகளை வழிடத்தி நெறிப்படுத்துவிக்கும் பாங்குடைய சாஸ்திரிகள் இல்லாத குறை மிக நீண்டகாலமாகவே இருந்து வந்தது. இந் நிலையில் சாஸ்திரிகளின் வரவு யாழ்ப்பாண சமூகத்தின் வைதிகக் கிரியைகளை செய்து வைக்க வேண்டியது என்பதே முக்கிய குறிக்கோளாக அமைந்தது. வைதிகக் கிரியை தவிர்ந்த சாஸ்திரோக்தமான அறிவையும் பெற்று பல்வேறு கோணங்களிலும் யாழ்ப்பாண சமூகத்திற்காக சேவை செய்த சாஸ்திரிகளின் பங்களிப்புக்கள் பல்வேறு பரிமாணங்களிலும் சிறந்து விளங்கிய தன்மைகள் தனித்துவம் மிக்கன.

சாஸ்திரிகள் யாழ்ப்பாண அந்தண சமூகத்தில் நிலவிவரும் ஆபஸ் தம்ப, ஆஸ்வலாயன, போதாயன கிருஹ்ய சூத்திரங்களைப் பின்பற்றுகிறவர் களுக்கு தம்மால் இயன்றவரை பூர்வ அபரக் கிரியைகளைச் செய்துவைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகள் பூர்வக் கிரியைகளில் ஒரு குழந்தை பிறந்தது. முதலாக ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம், கர்ணவேதனம், சூடாகர்மம், ஆயுஷ்யஹோமம், சௌளம், உபநயனம், யஞ்ஞோபவீததாரணம், வேதவ்ரதம், சமாவர்த்தனம், விவாஹம், சீமந்தம் முதலான சமஸ்காரங்களையும் கிரகதோஷங்களை நீக்கும் சாந்திகர்மாக்கள், ஷஷ்ஷயப்தபூர்த்தி முதலானவைகளையும் தமது இளம் வயது முதலே திறம்பட நடாத்தி வைக்கும் சிறப்புடையவர். சாஸ்திரிகள் கிரியைகளை வழிநடத்திச் செல்லும் ஆளுமையோவெனில் அது தனித்துவமானது. இத்தகைய கிரியைகளைச் செய்விக்கும் சாஸ்திரிகளின் வழிகாட்டலால் கிரியைகளை ஒருவர் கிரமமாகச் செய்ய வேண்டும் என்னும் மனோபாவங்கள் செய்விக்கப்படுபவர்களிடத்தில் தானாகவே தோன்றிவிடும். இத்தகைய உண்மையை உணர்ந்தவர்கள் பலர்.

சாஸ்திரிகள் அபரக் கிரியைகளை செய்து வைக்கப் பின்நிற்பது கிடையாது. அதனை ஈஸ்வரார்ப்பணமாக பரோபகார சிந்தனையுடன் இந்த சம்ஸ்காரத்தை மிகவும் அவதானத்துடனும் கவனத்துடனும் நடத்தி வந்தார்.

அபரக் கிரியைகளின் முடிவில் இந்திய சம்பிரதாயங்களைப் பின்பற்றி அதனைப் பிரதிபலிக்கும் தன்மையில் கிருஹயஞ்ஞ தினத்தன்று

மாலை மங்களகரமாக முடிப்பது என்னும் தன்மையில் சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம், பார்வதி பரிணயம் முதலியவைகளைப் படிப்பது, நடிப்பது என்பவற்றோடு மங்களவாத்தியம் இசைப்பது என்பன போன்ற யாழ்ப்பாண வழக்கத்தில் அற்றுப் போகத்தலைப்பட்டனவற்றினை சாஸ்திரிகள் ஒருபோதும் தவறவிடுவது கிடையாது.

இவ்வாறாக வைதிக சூத்திரங்களின் ஆசிரியர்கள் விதித்த முறைப்படி இந்து சமுதாயத்தில் நிலவி வரும் சம்பிரதாயங்களையும் ஒன்றிணைத்து, அனுசரித்து பூர்வ அபரக் கிரியைகளை சாஸ்திரிகள் நடாத்தி வைக்கும் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆ. ஆகமக் கிரியைகளைச் செய்வித்தல்.

ஆகமக் கிரியைகளில் வைதிக மந்திரங்கள் விரவிக் கிடக்கின்றன. கிரியைகளைச் செய்விப்பவர்களுக்கு ஆகமக் கிரியைகள் வைதிக மந்திரங்கள் ஆகிய இரண்டிலும் பயிற்சியும் அனுபவமும் பெற்றிருத்தல் அவசியமாகும். வைதிக மந்திரங்களை இந்தியாவிலேயே பெற்று இலங்கையில் ஆகமங்களின் அறிவைப் பெற்ற சாஸ்திரிகள் வேதாகம சம்மேளனமாக விளங்கும் ஆகமக் கிரியைகளைச் செய்விக்கும் சிறப்பு தனித்துவமானதாகும்.

சாஸ்திரிகள் ஆலயங்களில் இடம்பெறும் நைமித்தியக் கிரியைகளில் சங்காபிஷேங்கள் முதலானவற்றில் பங்குகொள்வார். இவற்றைவிட நைமித்திய உற்சவங்களில் த்வஜாரோஹண வைபவத்தினை உரத்த குரலில் கம்பீரமாக உரிய அட்சரத்துடன் நடாத்தி வைக்கும் திறன் பலராலும் கவரப்பட்ட தன்மை வாய்ந்தது. கட்டிடம் கூறி சுவாமியை எழுந்தருளச் செய்வதும் தனித்துவமானது.

மகா கும்பாபிஷேக வைபவங்கள் பலவற்றில் சர்வ போதகாச்சாரியா ராகவும், சர்வசாதகாச்சாரியாராகவும் வேத பாராணயணம் செய்பவராகவும் இருந்து கலந்துகொண்டு கும்பாபிஷேகக் கிரியைகளை புதிய மெருகுடன் எதுவித லோபமுமின்றி நடாத்தி வைக்கும் சாஸ்திரிகளின் திறன் குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வரத்தில் 1976 இல் முதல்முறையாக ஆரம்பிக்கப்பட்ட வசந்த நவராத்திரி சதசண்டீ ஹோமத்தில் சாஸ்திரிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி தினங்களில் ஐந்தாம் நாள் இடம்பெறும் விஸ்வரூபதர்சனம், திருக்கார்த்திகை விளக்கீடு, மஹோற்சவ காலங்களில் 15ஆம் நாள் இடம்பெறும் மாம்பளத் திருவிழாவில் திருக்கயிலாச வர்ணனையை என்பனவற்றின் மூலக்கதைகளை கந்தபுராண உற்பத்திக் காண்டத்தில் இருந்தும் மற்றும் ஸ்காந்தத்திலிருந்தும் எடுத்து சாஸ்திரிகளே ஒருங்கு சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

கிரகபீடைகள், நாகதோஷங்கள், விவாகதாமசதோஷங்கள் முதலானவற்றினை நிவர்த்தி செய்யும் சாந்தி வழிபாடுகளை சாஸ்திரிகளே ஒழுங்குபடுத்திச் செய்து பலன்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாஸ்திரிகள் ஆகமக் கிரியைகளை வழிநடத்திச் செல்வதோடு மட்டுமல்லாமல் ஆகமக் கிரியைகளில் ஏற்படுகின்ற சந்தேகங்களை நிவர்த்தி செய்தல், ஆலய நிர்மாணம், சிற்பங்களை உரிய பிரமாணம் கூறி நிர்ணயம் செய்தல், புதிய ஆலயம் அமைவதற்குரிய நிலத்தைத் தேர்ந்தெடுத்தல், பரிவாரமூர்த்திகள் அமையும் இடங்களைப்பற்றி ஆலோசனைகள் வழங்குதல், புதிதாக ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்வதற்கான நிலையமெடுத்தல், கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயம் செய்தல் முதலான பல விடயங்களுக்கும் சிவாகமங்கள் கூறும் பிரமாணங்களினை எடுத்து விளக்கி அதன்படி ஒழுகவைக்கும் திறன் சிறப்பானதாகும்.

இவ்வாறு பல்வேறுபட்ட தன்மைகளில் ஆகமக் கிரியைகளை வழிநடத்திச் செல்லும் தன்மையில் சாஸ்திரிகளின் பங்கு குறிப்பிடத்தக்க சமயப் பணியாக விளங்குகின்றது.

## பாராயண மரபு பேணுதல்

இறைவனை வழிபடும் வழிபாட்டு மரபில் பாராயண்ம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. பாராயணம் பற்றி சாஸ்திரிகள் விளக்குகையில்; அவன் பெருமையைப் போற்றி வழிபடுவது எவ்வாறு?

**அவன் பெருமையை விளக்கும் புராணங்களை பாராயணம் செய்தல் இறை வழிபாடாகும். பாராயணம் என்ற சொல்லிற்கு ஈடுபடுதல் என்பது கருத்தாகும். பர - மேலான பரம்பொருளை அயணம் - அண்டியிருத்தல்**

**பாராயணமாகும். பரம்பொருளை, அண்டியிருக்கும் தன்மையோடு கூடுதல் பாராயணமாகும். புராணத்தைப் படித்து அவன் பெருமைகளை உணர்ந்து அதில் ஈடுபாடு கொள்ளுதல் என்பது விளக்கவுரையாகும். கலக்கமுற்ற தேவர்கள் முருகன் திருவருளால் கலக்கம் நீங்கி வாழ்வைப் பெற்றனர் என்ற வரலாற்றை உணர்த்துகின்றது கந்தபுராணம். ஆகவே இப்பொழுது கந்தபுராணமே பாராயணத்துக்கு ஏற்றதாக அமைகின்றது. பல வகையாலும் கலக்க மடைந்த நமக்கு அமைதி வாழ்வைப் பெற கந்தபுராணபாராயணம் சாலச் சிறந்தது. ஆகவேதான் முன்னோர்கள் கலக்கமுற்ற நேரம் வான்மீகி இராமாயண பாராயணம், பாகவத பாராயணம், தேவீமாஹாத்மிய பாராயணம், ஸஹஸ்ரநாம பாராயணம், புராண பாராயணம், கீதா பாராயணம் என்னும் பாராயண முறையைப் பின்பற்றி நடந்து அமைதி வாழ்வைப் பெற்றனர். அது போலவே நாமும் பாராயண முறையைப் பின்பற்றி வழிபட்டு வருவோமாயின் நமக்கு அமைதி வாழ்வு கிடைக்கும் என்பது உறுதி. பற்றாக்குறைகள் நீங்கி சுபீட்ச வாழ்வைப் பெறலாம். பாராயணம் செய்யும் முறை யாது? முன்னோர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி இறைவன் சந்நிதியில் பக்தியுடன் சுலோகங்களை மிக உரத்தோ மிக மெதுவாகவோ, மிக வேகமாகவோ மிக மந்தமாகவோ அல்லாமல் மத்திய நிலையில் படித்தல்** எனக் கூறுகின்றார்கள்.

பஞ்சாயதன பூஜை மரபைத் தினமும் செய்துவரும் சாஸ்திரிகள் இம் மூர்த்திகளுக்கு வெள்ளிக் கிழமைகளில் சிறப்பாக பால், விபூதி, தேன் முதலானவைகளை அபிஷேகம் செய்து அதனையே பரம ஔஷதமாக தினமும் பாவித்து வந்தார்.

சாஸ்திரிகள் பூஜை முடித்ததும் ஸ்ரீலலிதா சகஸ்ரநாம ஸ்தோத்திரம், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம ஸ்தோத்திரம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வது அவரது மனதில் படிந்ததொன்று. இத்தோடு ஸ்ரீமத் வான்மீகி இராமயணத்தை ஸ்ரீராம நவமியை இறுதி நாளாகக் கொண்டதாக தினமும் ஒரு சர்க்கம் வீதம் பாராயணம் செய்வார். தமது தந்தையின் புத்தகத்தினையே வைத்திருந்து வான்மீகி இராமாயண பாராயணம் செய்யும் தமது பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக அனுஷ்டித்து வந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு பாராயணம் செய்து வரும் காலங்களில் சீதா கல்யாணம். இராமன் பட்டாபிஷேகம் முதலான சர்க்கங்கள் வருமிடத்து அதற்கு முன்னதாகவே பலரையும் அழைத்து அதனை விமரிசையாகக்

கொண்டாடும் மரபு சிறப்பு மிக்கதாகும். இந்த இராமாயண பாராயணம் சாஸ்திரிகளின் பாரம்பரியச் சொத்து.

சாஸ்திரிகள் தமது குலதெய்வமான முருகப் பெருமானை உத்தேசித்து ஸ்கந்த மஹா புராணத்தை பாராயணம் செய்யும் மரபையும் பேணி வந்தார். யாழ்ப்பாணத்தை கந்தபுராணக் கலாச்சரம் என நோக்குவதற்குரிய மரபைப் பேணியவராகவும் சாஸ்திரிகள் விளங்கினார். பாராயண முறைகளைப் பின்பற்றும் அதேவேளை நாம பாராயணம் எனத் தினமும் ஒரு தெய்வத்தைக் குறித்து அத் தெய்வத்தின் மூல மந்திரத்தைக் குறிப்பிட்ட சங்கியை வரும்வரை (லக்ஷம்) தினமும் எழுதிவருவது சாஸ்திரிகளின் மரபு. இந்நிலையில் 'ஸ்ரீராமஜெயம்' எனும் இராம நாமத்தினை ஒரு வருடத்திற்குள் லக்ஷம் தடவைகள் எழுதிப் பூஜை அறையில் வைத்துப் பூஜித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதனைச் சாஸ்திரிகளின் சந்ததியினர் இன்றும் பூஜித்து வருகின்றனர்.

சாஸ்திரிகள் 1950 ஆம் ஆண்டு முதலான பௌர்ணமி தினங்களில் திருவிளக்கை அம்பிகையாக அலங்கரித்து பூஜை செய்து லலிதா சகஸ்ர நாம ஸ்தோத்திரம் சொல்லிப் பாராயணம் செய்த மரபு சாஸ்திரிகளின் இறுதிக் காலம்வரை தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது.

நவராத்திரி காலங்களில் நான்கு வேதங்களையும் செருகுப் பலகை மீது வைத்து அலங்கரித்து தேவியாகப் பாவனை செய்து கொலுவில் வைத்துப் பூஜித்து வரும் சாஸ்திரிகள் நவராத்திரி காலங்களில் தேவீபாகவத பாராயணம், தேவீமாஹாத்ம்ய பாராயணம், சௌந்தர்யலஹரீ பாராயணம் முதலானவைகளைச் செய்து வந்தார். ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி தினத்தில் இரவு முழுவதும் விஷ்ணு பரமான ஸ்தோத்திரங்களை பாராயணம் செய்து நித்திரை விழிக்கும் மரபு சாஸ்திரிகளிடம் தொடர்ந்து நிலவி வந்தது. இவ்வாறகப் பாராயணத்தின் மரபு பேணும் தன்மைகளை தமது நித்ய கார்மானுஷ்டானத்துடன் இணைத்து ஒரு ஒழுங்கினை தாமேகுத்துக் கொண்டு அதன்படி கிரமந் தவறாது பாராயணம் செய்து புராண மரபை பேணிய தன்மை சாஸ்திரிகளுக்குரிய. சிறப்பான பண்பாடாக அமைந்து காணப்படுகிறது.

## 3. சமய வாழ்வில் மக்களை வழிநடாத்திச் செல்லல்

சாஸ்திரிகள் தினமும் மாலை வேளையில் தாம் வாழும் இல்லத்துக்கு அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்து வருவது வழக்கம். இதன் சிறப்பினை '**இறைவன் திருநாமத்தை ஓதுதல்**' எனும் கட்டுரை மூலம் விளக்கியுள்ளார். ஒரு இறைவன் திருநாமத்தை பாராயணம் செய்வதோடு கூட்டு வழிபாடாக பஜனை செய்தல் முக்கியமான அம்சமாகும்.இதில் அடியார்களை இணைத்துக் கொள்ளல் குறிப்பிடத்தக்கதாகும்.

சுழிபுரத்தில் சாஸ்திரிகள் வாழ்ந்த காலத்தில் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் வெள்ளிக்கிழமை, கார்த்திகை ஷஷ்டி முதலான விசேட தினங்களில் கூட்டு வழிபாடாக ஸ்தோத்திரங்கள், கந்தனுபூதி, திருமுருகாற்றுப்படை என்பவற்றோடு எல்லோரும் இணைந்த நாமஜெபம் என்பவற்றை ஊர்கூடி அனைவரையும் ஒருங்கிணைக்கும் சிறப்பு, ஆலயத்தில் கூட்டு வழிபாடு, ஆலய வழிபாட்டில் மக்களை மனம்படியச் செய்தல் என்பன சாஸ்திரிகளால் ஏற்பட்ட ஒருங்கிணைப்பாகும். இதேபோல் நாவலர் வீதியில் வசிக்கும்போது வண்ணைச் சிவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருவது மரபு. அங்கு தட்சணாமூர்த்தியின் முன்பு சாஸ்திரிகள் நிதித்யாசனம் செய்து வீடு திரும்புவது வழக்கம்.

வண்ணை சாந்தையர் மடம் பிள்ளையார் கோயிலில் கந்தபுராண படனம் ஆரம்பிப்பதற்கு காரணகர்த்தாவகத் திகழ்ந்தவர் சாஸ்திரிகளே ஆவார். இவ்வாலயத்திலும் சாஸ்திரிகள் தினமும் நாட்டில் சமாதானம், சுபீட்சம் என்பவற்றை முன்வைத்து காம்யமாக 48 தினங்கள் 108 விளக்குகள் இட்டு நாம பாராயணம் செய்தல், கூட்டு வழிபாடு செய்தல் என்பதோடு சைவ சமய அபிவிருத்திச் சங்கம் ஒன்றினை உருவாக்கி அதன் போஷகராக தமது ஆயுட் காலம் வரையாக விளங்கிய இவர் சிறப்பாக இளம் தலைமுறையினரை பஜனை, கூட்டு வழிபாடு முதலிவற்றினால் நன்னெறிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

உபந்யாசங்கள் செய்யும் திறன்மிக்க சாஸ்திரிகள் உபகதைகள் மூலமாக புராணங்களைக் கூறி சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரையும் விளங்கும்படியாக விளக்கி சமய வாழ்வின் இலட்சிங்கள், சிறப்புக்கள் இறை வழிபாட்டின் அவசியம், அதன் முக்கியத்துவம், கிரியைகளின் உட்பொருள், அதன் அவசியம் என்பவற்றினைக் கூறி சமய வாழ்வில் மக்களை சமய வாழ்வின்படி வழிநடத்திச் சென்ற சிறப்பு சாஸ்திரிகளுக்கே உரிய தனிமையான பாணியாகவும், பண்பாடாகவும் விளங்கிற்று எனலாம்.

இவ்வாறு கிரியைகள், பாராயணம், சமய வாழ்வியல் என்பவற்றைத் தாம் இணைத்ததோடு சமுதாயத்தையும் இணைத்து அவற்றினை புது மெருகூட்டியதோடு சமஸ்கிருத மொழி மூலமான சமய அம்சங்களை சமுதாய மயமாக்கி சமயப் பணி செய்து வந்தமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாக சாஸ்திரிகளிடத்தில் காணமுடிகின்றது.

# 7

# சாஸ்திரிகளின் கட்டுரைகள்.

பரந்த அறிவுடைய அறிஞன் தான் உணர்ந்த உண்மைப் பொருட்களை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தும் தன்மை கொண்டவையாக கட்டுரைகள் விளங்குகின்றன. இவ்வாறாக அமைந்த கட்டுரைகள் சமுதாயத்தின் தேவையைக்கருதி அதற்கேற்ற தன்மையின் வெளிப்பாடாகவே அவ்வறிஞனின் மொழியூடகம் அமைகின்றது. இவை பெரும்பாலான சமயத் தேவைகளை பூர்த்தி செய்யும் சாதனமாகவும் காலத்தின் தேவை கருதியனவாகவும் அமைகின்றன.

சாஸ்திரிகளின் கட்டுரைகள் இவ்வாறான வெளிப்பாடாகவே அமைகின்றன. சம்ஸ்கிருதமொழி மூலங்களைக் கொண்டு சாஸ்திரிகளால் எழுதப் பெற்றவை. இவை மரபு ரீதியல் சாஸ்திரிகள் பெற்றிருந்த வைதிக சம்ஸ்கிருத புலமைகளையும் ஆகமம் சார்ந்த நுணுக்கங்களையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தும் வகையில் அமைந்து காணப்படுகின்றன. வைதிக மந்திரங்கள், உபநிடதச் சிந்தனைகள், இதிகாச புராணக் கதைகள், ஆகமம் தரும் விளக்கங்கள், ஸ்மிருதிகள் கூறும் கருத்துக்கள், மரபுத் தொடர்கள் என்பவற்றினை விளக்கும் தன்மையில் இவை அமைந்திருப்பதை காண முடிகின்றது.

இவ்வாறான தன்மையில் விளங்குகின்ற சாஸ்திரிகளின் சம்ஸ்கிருத மொழிச் சார்புடைய கட்டுரை ஆக்கங்களை மூன்று பிரிவாக நோக்கலாம்.

1. வைதிக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை.
2. உபநிடத மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை.
3. ஆகம விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

**1.வைதீக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை.**

வைதிக மந்திரங்கள் துதிகள் எனப் போற்றப்படுவன. இவை இறைவன் பெருமைகளை விளக்கி நிற்பன. நம்பிக்கையின் பாற்பட்ட தொன்மையான சைவ சமயத்தின் புராதன புனித இலக்கியமாக விளங்குவன வேதங்களேயாகும். வேதம் சார்ந்தனவற்றை வைதிகம் என்பர்.

வைதிகத்திற்கு அடிப்படையாக விளங்குவன சாஸ்திரங்கள். சாஸ்திரங்கள் எண்ணிக்கையில் பதினெட்டு என அறிஞர்கள் விளக்குகின்றனர். வைதிகம் என்பதில் முக்கியமாக விளங்குகின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வம் எனும் நான்கு வேதங்களினுடைய மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு சாஸ்திரிகள் ஆக்கிய கட்டுரைகளே இப்பிரிவில் நோக்கப்படுகின்றன.

வைதிக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கும் சாஸ்திரிகள் கணபதியைக் கட்டுரையில் விளக்குகையில் இருக்கு, யசுர், சாம வேதங்களில் இடம்பெறுகின்ற மந்திரங்களின் மூலம் புராணங்கள், ஸ்தோத்திரங்கள் என்பவற்றினை விளக்கும் தன்மையில் அமைத்திருப்பதனைக் காண முடிகின்றது.

சிவன் பற்றி வைதிக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குகையில் ஸ்ரீருத்ரத்தில் இடம்பெறும் உருவ வர்ணனைகளை எடுத்துக் கூறி ஆகமங்களில் இடம்பெறும் உருவ வர்ணனைகளை வேதமந்திரங்களே செய்து விட்டன என விளக்கும் தன்மையில் தனித்துவமான சிறப்புடன் அமைத்திருப்பது நோக்கற்பாலதாக உள்ளது. இதனை **ஆலய வழிபாடு** என்னும் கட்டுரையில் **விக்கிரகங்களை ஆரம்பிப்பது நீண்டகாலத் தொடர்பாகவே இருந்து வருகிறது. வேதத்தில் மறை பொருளாகவும், ஆகமங்களில் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றது. வேதங்களில் பல தேவர்களுடைய சொருபங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. யசுர் வேதத்தில் பரமேஸ்வரனுக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. அவைகளுள் முதலாவதாக அமைந்தது. 'நமோ ஹிரண்யபாஹவே' என்பது 'பொற்கையனுக்கு' வணக்கம் என்பது கருத்தாகும். மற்றொரு இடத்தில் ' நம: கபர்தினேச' கூறப்பட்டிரக்கிறது. 'சடை முடியோடு கூடிய சிவனக்கு வணக்கம்' என்பது கருத்தாகும். 'நமோ நீலக் கிரீவசாயச' 'கறுத்த கழுத்தை' உடையவனுக்கு வணக்கம்' இவை போன்ற பல வேத வாக்குகளைக் கொண்டு விக்கிரக ஆராதனை வேதத்தில்**

**விளக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.** என விளக்குகின்றார்.

மேலும், வேதத்தில் ஆதியிலும் முடிவிலும் எந்தப் பிரணவம் கூறப்படுகின்றதோ, வேதாந்தத்தில் எந்தப் பிரணவம் சிறப்பாக எடுத்து வர்ணிக்கப்படுகின்றதோ, அந்தப் பிரணவம் பரம்பொருளின் உடலாக அமையும் அந்தப் பிரணவத்தின் (வாக்கியமாக) பொருளாக விளங்குபவன் மகேசுவரன் ஆவார். எனக் கூறுவதோடு தைத்திரீயம் நாராயணவல்லி (1.10)யில் வரும் உபநிடத மந்திரத்தைக் கொண்டு

"எங்கும் வியாபகமாகப் பரந்து விளங்கும் பரம்பொருள் கட் பார்வைக்கு உரியதாகின்றதில்லை. அவனுடைய உருவத்தை யாரும் கண்ணால் பார்த்ததில்லை. பக்தியும், உறுதியும், முயற்சியும் கொண்டு தான் அவனை அறிய முடியும், இவ்வாறு அவனை அறிந்தவன் பிறவாத நிலையை அடைகின்றான்.

எனும் கருத்தினையும் அடிப்படையாகக் கொண்டு நான்மறை முடிவு (உபநிடதம்) எனும் கட்டுரையில் மாணிக்கவாசகரின் திருவாசகப் பாசுரங்களோடு ஒப்பு நோக்கும் சிறப்புக்கள் சிறந்தனவாக அமைகின்றன.

சிவனின் "மேலான தன்மையை விளக்கிக்கூறும் சாஸ்திரிகள்" **வேத சிவாகமங்கள் சிவ பரம்பொருளைப் பலவாறு போற்றிப் புகழ்கின்ன. அவற்றுள் ஒரு மந்திரம் பின்வருமாறு போற்றி உள்ளது. இருக்ஸாம யஜுர்வேதங்கள் சிவ பரம்பொருளின் பெருமையைத் தெளிவாக விளக்குகினறன. ஆகவே இறைவனுக்கு வேதங்கள் ஆதாரமாக விளங்குகின்றன. இறைவன் அதேயமாக விளங்குகின்றான். இறைவனின் பெருமையை முற்றிலும் கூற வல்லவர் யார்? வேதத்தினாலும் முற்றிலும் விளக்க முடியாத பெருமை வாய்ந்தவர் இறைவன். ஆகவே தான் வேதாதீதன் என்று இறைவன் போற்றப்படுகின்றான். வேதத்தினாலும் முற்றிலும் விளக்க முடியாதது சிவ பரம்பொருள் என்பது இதன் கருத்து ஆகும். இருந்தும் அவனுடைய பெருமையை ஒரு சிறிதளவாவது உணர்ந்து கொள்வதற்கு வேதங்கள் உதவியாக அமைந்துள்ளன என்ற தன்மையால் வேதங்கள் இறைவனுக்கு ஆதாரமாயின. அந்த வேதங்கள் இறைவனுடைய பெருமையை விளக்குவதனால்தான் அவைகளுக்கு இவ்வளவு பெருமை உலகத்தில் பரவியுள்ளது. ஆகவே வேதங்களுக்கு இறைவன் ஆதாரமாகின்றான். வேதங்கள் ஆதேயமாக அமைந்துள்ளன. இறைவன் ஆதாரமாகவும் ஆதேயமாகவும் விளங்குகின்றான். வேதங்கள்**

**ஆதாரமாகவும் ஆதேயமாகவும் விளங்குகின்றன என்று முழுக் கருத்தும் கிடைக்கின்றன.**என பிரார்த்தனையுரையாக புங்குடுதீவு சிவன்கோயில் கும்பாபிஷேக மலரின் சாஸ்திரிகள் விளக்கிக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

வைதிக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு அம்பிகையை விளக்குகையில் சாஸ்திரங்கள் பரந்த இலக்கியத் தன்மைகளையும் புராணங்கள், ஸ்தோத்திரங்களில் சிறப்பிக்கப்படும் தன்மைகள் பற்றியும் விளக்கிக் கூறும் சிறப்பு தனித்துவமானது. இருக்கு வேதத்தில் 10.125 ஆம் சூக்தத்தில் புகழப்படும் **வாக்** எனும் தேவியினை சக்தியின் வழிபாட்டுடன் இணைத்து விளக்கும்போது **(அஹம்) என் உள்ளத்தில் கலந்து நிற்கும் பராசக்தி (சிகுதுஷீ) சிவப் பிரமத்தை அறிந்திருப்பவள். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேந்திரன், ஸதாசிவன், நாதம், விந்து, சக்தி, சிவம் என்ற ஒன்பது தத்துவங்களுள் சக்தி தத்துவம் சிவதத்துவத்தின் அருகில் இருப்பதால் என்றும் சிவப் பிரம்மத்தை அறிந்திருப்பவள் என்பதே அதன் விளக்கமாகும். (யாக்ஞியானாம் பிரதமா) வேள்விக்குரிய பொருட்களுள் முதற் பொருளாக விளங்குபவள். வேள்வி செய்ய விரும்பும் ஒருவர் அதற்குரிய பொருட்களைச் சேகரிக்க வேண்டும். இல்லாளுடன் இல்லறதர்மம் நடத்துபவர் வேள்வி செய்யவேண்டுமென்று வேதம் விதித்துள்ளது, ஆகவே வேள்விக்குரிய பொருட்களுள் இல்லாள் முதன்மை ஸ்தானம் பெற்றவளாகின்றாள். சிவபெருமானுக்குரிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் என்ற எட்டு மூர்த்தங்களுள் யஜமானமூர்த்தம் ஒன்றாகும். அந்த யஜமான மூர்த்தமாகிய சிவத்திற்கு சக்தி முதற்பொருளாக விளங்குகின்றாள். (பூரிஸ்தாத்ராம்) பிரபஞ்ச வடிவமாக எங்கும் விளங்குபவளும் (பூரிஆவேசயந்தீம்) சகல ஜீவராசிகளையும் வாழச் செய்பவளும், (மாம்) சிவபாவனையில் விளங்கும் சிவனோடு கலந்து நிற்பவளுமாகிய அந்தப் பராசக்தியை (தேவா:புருத்திரா வியதது:) தேவர்கள் முன்னதாகவே அறிந்துள்ளனர்.**

**(ய:விபச்யதி) எந்த சிவஸ்வரூபம் யாவையும் காண்கிறதோ (ய:ப்ராணிதி) எந்த சிவஸ்வரூபம் மூச்சு விடுகிறதோ, நான்கு வேதங்களும் புராணங்களும், இதிகாசங்களும், உபநிடதங்களும் சிவபெருமானின் மூச்சுக் காற்றுக்கள் என்று பிருகதாரண்யக உபநிடதம் விரித்துக் கூறுவதை வேதம் சுருக்கிக் கூறியிருக்கிறது. (ய: உக்தம் சுருணோதி) எந்த ஸ்வரூபம் எனது தோத்திரத்தை ஆதரவுடன் கேட்கிறதோ (ஸ: மயா அன்னம் அத்தி, அந்த சிவஸ்ரூபம் சக்தியோடு கலந்து என் உள்ளத்தில் நின்று சகல**

அனுபவங்களையும் அனுபவிக்கிறது. (மாம்) சிவத்துடன் கலந்து என் உள்ளத்தில் உறைந்து நிற்கும் சக்தியை (அமந்தவ:தே) அறிந்து கொள்ளாத ஜீவான்மாக்கள் (உபக்ஷியந்தி) துயரக்கடலில் மூழ்கின்றன. (சுருத) புகழ்பெற்ற ஜீவான்மாவே (சுருதி) நான் சொல்வதைக் கேள் (சிரத்திவம்) அந்த சிவபிரம்மஸ்வரூபத்தை சிரத்தையின் மூலமாகத்தான் அறியமுடியும். பிரணவத்திற்கு சிரத்தை, மேதை என இரு சக்திகள் உண்டு. சிரத்தாரூபமான சக்தியினூடாக பிரணவ ரூபமான சிவஸ்வரூபத்தை அறியமுடியும் என்பதே இதன் விளக்கமாகும். (தே வதாமி) உனக்கு அதனை எடுத்துக் கூறுகிறேன். இவ்விருபாட்டுக்களும் சக்தியின் பெருமையை விளக்கி சக்தி வழிபாட்டின் சிறப்பையும் விளக்கியுள்ளன.''

என அன்னை லலிதாம்பினை அருட்பேராயிரம் நூலின் சிறப்புப்பாயிரத்தில் கூறுகிறார். இவ்விதம் யஜுர் வேதத்திலிருந்து ஸ்ரீ சூக்தம் ஆகியனவற்றிலிருந்தும் கேன உபநிடதத்திலிருந்தும் சக்தியின் தத்துவங்களை விளக்கி நிற்கின்றார்.

வைதிகமந்திரங்களில் இடம்பெறும் சொற்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் தன்மை சாஸ்திரிகளின் ஆசிரியர்களின் முத்திரைகளைப் பதித்துநிற்கக் காணமுடிகின்றது. அவற்றுள் பர்ஜன்யன் பற்றிய இருக்கு வேத (VI.21) பாடல் ஒன்றில் 'க்ருதேன' எனும் சொல்லுக்கு விளக்கம் அளிக்குந் தன்மையை உதாரணமாக நோக்கலாம்.

''க்ருதேந த்யாவா ப்ருதிவீ வ்யுந்தி'' என்பது இருக்கு வேதத்தின்கணுள்ள இன்னொரு மந்திரம். இதன் பொருள்: ஓ! பர்ஜன்ய தேவனே வானத்தையும் நிலத்தையும் நீரால் நனைப்பீராக என்பது. கிருதம் என்பதற்கு இலக்கிய வழங்கில் நெய் என்றே கருத்து. இந்த மந்திரத்திலோ தண்ணீர் என்ற பொருளிலே பிரயோகிக்கப்படுகின்றது. பொதுவாக நெய் நெருப்பை எரியச் செய்கின்றது. அதுபோல தவச் செல்வர்களின் உள்ளங்கையில் அருவமான அக்நி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. முனிவர்கள் சா'பமிடும் சமயம் அங்கையில் நீரேந்தி சாபவசனம் கூறி நீரைத் தெளிப்பர். இந்த அருவமான அக்நியைத் தண்ணீர் நெய்யாகிச் சுவாலிக்கச் செய்கின்றது. குற்றம் செய்தவர்கள் அந்த அக்நியின் வெப்பத்துக்கு ஆளாகின்றனர்.

ஒரு சமயம் சூரியகுலமன்னர் ஒருவர் வசிட்டமுனிவரை தலைமைக்குருவாக வைத்துக் கொண்டு வேள்வியொன்று கேட்டார்.

இடையூறின்றி வேள்வி முடிந்தது. வசிட்டமுனிவர் மன்னரிடம் உச்சி நீராடி வருகிறேன் என்று கூறி ஆற்றுக்குச்சென்றார். மன்னரிடம் நீண்ட நாள் பகைமை பூண்ட அசுரன் ஒருவன் மன்னருக்குத் தீமை செய்யத் தருணம் பார்த்திருந்தான். இதுவே தக்க தருணம் என்று கருதி அவ்வசுரன் முனிவர் வேடம் தாங்கி மன்னவனையடைந்து "மன்னவ, இன்று மாமிச உண்வை யான் விரும்புகின்றேன். ஆயத்தம் செய்க. இதனைக் கூறவே திரும்பவும் வந்தேன்" என்றான் அரசன் "போற்றத்தக்க குருவே, இதுவரை தாங்கள் இது போன்ற செயலில் ஈடுபடவில்லையே. தகாதகாரியத்தைச் செய்விக்கத் தூண்டுவது இருவருக்கும் பாபமல்லவா?" என்றார். "குருவின் வார்த்தையைக் கேட்டு நடப்பதே மாணவரின் கடமை. அதன் பலாபலன்களை ஆராய்வது அவசியவில்லை" என்றார் குரு. மன்னவரும் மௌனியானார். அரக்கன் மீண்டான். மாமிச உணவைச் சமைப்பதற்கு யாரைத் தேடுவேன் என்று மன்னவன் மனம் கலங்கி நிற்க. அரக்கன் சமயற்காரன் வேடம் பூண்டு மன்னரிடம் சென்று நான் மாமிச உணவு தயாரிப்பதில் வல்லவன். உங்களுக்கு உகந்தபடி உணவு தயார் செய்வேன் என்றான். அரசனும் சம்மதம் கொடுத்தான். முனிவர் ஆற்றிலிருந்து திரும்பி வந்தார். அரசனும் வழமைபோல் உபசரித்து முனிவருக்கு அமுது படைத்தான். முனிவர் உணவில் புதிய மாற்றத்தைக் கண்டு சீற்றங்கொண்டு கமண்டலத்திலிருந்த தண்ணீரைக் கையிலிட்டு "மன்னவா, என்ன காரியம் செய்தாய்! உனக்கு ஏற்பட்ட துணிவு தான் என்ன? நீ பிரம்மராட்சதனாகுவாய்." என்ற சாப வசனம் கூறித் தண்ணீரைத் தெளித்தார். மன்னனும் "குருவே, முன்பின் முரணாகக் கூறுகின்றீர்கள். தாங்களே பணித்துவிட்டுத் தாங்களே சாபமிடுவதாயின் சத்தியம் எவ்வாறு நிலைபெறும்?" என்று கூறிக்கோபம் மேலிட்டுக் குருவுக்கு மறுசாபமிடக் கையில் தண்ணீரை ஏந்தி சாபவசனம் கூறத் தொடங்கினான். அண்மையில் நின்ற மனைவி கணவனை நோக்கி தலைவ, இது என்ன அக்கிரமம்? மலை அசைவதுண்டா? தண்ணீர் சுடுமா? தந்தை மகனைத் தண்டிப்பதற்கு உரிமையுண்டு. மகன் தந்தையைத் தண்டிப்பதுண்டா? குரு சீடரைத் தண்டிப்பதற்கு உரிமையுண்டு. ஆனால், சீடன் குருவைத் தண்டிப்பதுண்டா? இயற்கைக்கு மாறாக உங்கள் காரியம் இருக்கின்றதே. சினத்தை விடுங்கள். யாவும் நன்மைக்கே" என்று கூறினாள். மன்னனும் சினம் தணிந்து கையில் எடுத்த தண்ணீரை என்ன செய்வது என்று சிந்திக்க, தங்கள் பாதங்களில் அதனைத் தெளியுங்கள் என்று மனைவி கூறினாள். உடனே அப்பாதங்கள் எரிந்து கருகிவிட்டன. தண்ணீருக்கும் உள்ளங்கையில் உள்ள நெருப்புக்கும் தொடர்புண்டு. அத்தண்ணீர் நெய்யாகி நெருப்பைச் சுவாலியாக்கிச் செய்து மன்னனின் கால்களை எரிந்தது. நெய்யாக மாறும்

**தன்மை தண்ணீருக்கு இருப்பதால் "க்ருதேந" என்ற சொல் தண்ணீருக்கு வேதத்தில் வழங்கப்பட்டது. புராணம் மூலமாகவேதான் இதன் கருத்து விளங்கக்கூடியதாக இருக்கின்றது.**

இவ்வாறாக வைதிக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகளினைத் தந்ததோடு தனக்குரிய தனித்துவமான முத்திரையினையும் சாஸ்திரிகள் பதித்துள்ளார்.

## 2. உபநிடத மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை

உபநிடத மந்திரங்களை தத்துவார்த்தமான பொருட்களை விசாரணைகள் மூலம் விளங்குவன. இவை சம்பாஷணை வடிவில் அமைந்து விளங்குவன.

இவ்வாறான உபநிடங்களின் உண்மைப்பொருட்கள் தன்னுடைய விசாரணைகள் மூலமாக தெளிவுபடுத்தும் தன்மையுடையதாக சாஸ்திரிகளின் கட்டுரைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் குமரக்கடவுளை குகன் என்றும் சிவனிலிருந்து பிரிக்க முடியாதவன் என்பதையும் விளக்ககையில்:

**சுப்பிரமணியர் என்ற நாமம் மங்களம் நிறைந்த வேதசுவரூபி என்ற கருத்தை உணர்த்துவதாகும். கார்த்திகேயன் என்ற நாமம் கிருத்திகைப்பெண்களால் வளர்க்கப்பட்டவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். ஸ்கந்தன் என்ற நாமம் சிவமாகிய பெரும் நெருப்பிலிருந்து சிறு பொறியாக வெளிவந்தவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். இவ்வாறு பெயர்கள் யாவும் காரணம் கொண்டு அமையப்பெற்றனவாகும் இவைகளுள் தலைசிறந்தனவாயும் உபநிடதங்களில் போற்றிப் புகழப்படுவதும் இடப்பெயராகவும் அமைந்தது குகன் என்னும் நாமமாகும்.**

**கைவல்ய உபநிடதத்தில்**

**"பரமாத்மரூபம் குகாசயம் நிஷ்களம் அத்துவிதீயம்**
**பிரம யோர் வேத நிஹிதம் குகாயாம்"**

**என்ற மந்திரம் காணப்படுகின்றது. இதன் கருத்து வேத பரமான்ம சொரூபியும் கலையற்றவரும், தனக்கு நிகரற்றவரும் குகையில் உறைபவருரமாகிய பரம்பொருளை எவன் அறிகின்றானோ என்பதாகும்.**

**சகல ஜீவராசிகளின் ஹ்ருதயாகாசத்தைக்குகை என்றும் அதில் உறைபவன் குகன் என்றும் அவனே பரம்பொருள் என்றும் கூறுவது உபநிடத மந்திரத்தின் விளக்கமாகும். குகன் என்ற நாமம் இட ஆகுபெயராக அமைந்தது. அந்தக் குகன் என்னும் நாமம் சிவத்தையே குறிப்பதாகும். முருகனும் சிவனும் அபின்னமானதால் (பிரிக்க முடியாததால்) முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது.**

**"குகேதி தகராகாசஹ் வேதாந்தேஷு ச பட்யதே**
**தன்னிஷ்டோயம் குக: ப்ரோக்த: ஸர்வஹிருத் கமலாஸத:**

**தகராகாசதத்திற்குச் குகை என்ற பெயர் வேதாந்த நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குகையில் உறைவதால் குகன் என்று அழைக்கப்படுகின்றான். அவன் எல்லோருடைய இருதயக் கமலத்தையும் இருப்பிடமாகக் கொண்டவன். இவ்வாறு குகன் என்ற நாமாவுக்குப் பெருமையை உபநிடதங்கள் விளக்கியுள்ளன"**

முருகக்கடவுள் சிவாபின்ன என்பதனை
பூணமத: பூர்ணமிதம்....

எனும் உபநிடத மங்கள சுலோகம் மூலம் விளக்கும் அதேவேளை ஒளிவடிவமாக முருகன் தோன்றிய தன்மையினை பூரணத்துவமாக கொண்டு சிவனின் பூரண நிலையினையும் யசுர் வேத முக்திகோபநிஷத வாக்கியமான

ஊர்த்துவ பூர்ணம் அத : பூர்ணம்
மத்ய பூர்ணம் சிவாத்மகம்.

எனும் வாக்கியம் மூலமாக விளக்குவதோடு தமது புராணபடன அனுபவத்தின் வாயிலாக ஸுப்ரம்மண்யன் எனும் பொருளை ஒப்பிட்டு விளக்குகையில்:

**ப்ரஹ்மன் என்ற சொல்லுக்கு வேதம் என்று கருத்து. வேதத்தின் பொருளாய் விளங்குபவர் ப்ரஹ்மண்யர் ஆவார். ப்ரஹ்மண்யாய நம: என்று சிவனுக்கு ஓர் அர்ச்சனை வழங்கப்படுகிறது. இறைவன் வேதப்பொருளாவான். ஸு,அழகாக ப்ரஹ்மண்யன் வேதப் பொருளை உணர்த்துபவன் என்று முருகனுக்கு ஸுப்ரஹ்மண்யன் (சுப்பிரமணியன்) என்று சிறப்பாகக்கூறப்பட்டுள்ளது. ஸ்காந்தபுராணம் சம்பவகாண்டம் 3ம் அத்தியாயத்தில் பின்வரும் பாட்டுக் காணப்படுகிறது.**

**பிராஹ்மணாநாம் அஹம் தேவ:**
**சுதராம் மத்ஸுத: ப்ரியே/**
**ஸுப்ரஹ்மண்ய: ஸமாக்யாத:**
**ஸுராஸுரநஸ்க்ருத://**

**இதன் கருத்து 'அன்புக்குரியவளே, வேதம் கூறி வழிபடும் அந்தணர்க்கு யான் தலைவன் (ஆகவே யான் பிரம்மண்யன் ஆவேன்) என்மைந்தன் (என்னை அறிந்து கொள்ள ஞானத்தை அளிப்பவனாதலால்) ஸுப்ரஹ்மண்யன் என்று சிறப்புப் பெயர் பெற்றுள்ளான். தேவராலும் அசுரராலும் வணங்கப்படுபவன் என்று உமையம்மையாருக்கு இறைவன் கூறியருளு கின்றான்.**

என பாரமேஸ்வரத்துவம் எனும் கட்டுரையில் கூறுவதும் நோக்கற்பாலதாக விளங்குகின்றது.

தைத்திரீயம் 8ம் ஆனுவாகம்

**பிக்ஷாஸ்மாத்வாத: பவதே... அகாமஹ தஸ்ய. பரம்பொருளின் அஞ்ஞைக்குக் கீழ்படிந்து காற்று வீசுகின்றது. கதிரவன் உதிக்கின்றான். இந்திரன் அக்நி முதலியார் தம் கடமைகளைச் செய்து வருகின்றனர். இயற்கைப் பொருள்கள்யாவும் அவன் ஆஞ்ஞைக்கு உட்பட்டு வளர்ச்சி பெறுகின்றன. இளைஞன் காளைப்பருவம் பெறுகின்றான். பல்கலை களைக் கற்றுத் திறமைசாலியாகின்றான். திறமை பெற்றவனுக்கு இந்த நிலம் எல்லாச் செல்வத்தையும் அளிக்கின்றது. வெளிப்பற்றை நீக்கிப் பற்றற்றான் தாளை நினைத்துப் பரமானந்தத்தை அனுபவிக்கின்றான். இவ்வாறு பரம்பொருளின் பெருமையை இந்த மந்திரம் விளக்குகின்றது. இதனையே மணிவாசகப்பெருமான் சில வாசகங்களால் திருவாசகத்தில் எடுத்து விளக்கியிருக்கின்றார்.**

**அருக்கனில் சோதி அமைத்தோன்**
**திருத்தகுமதியில் தண்மை வைத்தோன்**
**திண்திறல் தீயில் வெம்மை செய்தோன்**
**பொய்தீர் வானில் கலப்பு வைத்தோன்**
**மேதகுகாலின் ஊக்கம் கண்டோன்**
**நிழல்திகழ்நீரில் இன்சுவை நிகழ்த்தோன்**
**வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்**

**என உபநிடதமும் திருவாசமும் ஒரே நோக்குடன் இறைவன் பெருமையைக் காண்கின்றன.**

என உபநிடதமந்திரங்களை மாணிக்கவாசகரது திருவாசகத்தேன் துளிகளோடு ஒப்பிடும் தன்மை சிறப்பானது. இதனை "நான்மறை முடிவு" (உபநிடதம்) எனும் கட்டுரை மூலமாக உணரமுடிகின்றது. அக்கட்டுரையில் ஈசாவாஸ்வம், பிருகதாரண்யகம், தைத்திரீயம், மஹா நாராயணம் ஆகிய உபநிடதங்களின் கருத்து திருவாசகத்தில் பிரதிபலிக்குமாற்றினையே நோக்கியுள்ள சாஸ்திரிகளின் ஒப்பீட்டுநோக்கு சிறப்பாக அமைகின்றது.

இவ்வாறாக சாஸ்திரிகள் உபநிடதச் சிந்தனைகளை விளக்கி அவற்றினப்படையில் ஆக்கிய கட்டுரையை தனித்துவமானதாக விளங்குகின்றன.

## 3. ஆகம விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

வேதங்கள் துதிநூல்கள், ஆகமங்கள் விதிநூல்கள், ஆலய வழிபாட்டிற்கு பிரமாணமாக விளங்குபவை ஆகமங்களேயாகும். இவற்றிற்கு வழிநூல்களாக அமைவன பத்ததிகளாகும். ஆகமத்தின் ஞானம் பற்றிக் கூறுவன சித்தாந்தங்கள் எனப்படும்.

சாஸ்திரிகள் ஆலயம் கிரியைகள் முதலானவை பற்றியும், சித்தாந்த தத்துவம் பற்றியும் கட்டுரைகள் ஆக்கியுள்ளார்.

ஆலயம் எனும் சொல்லின் விளக்கத்தினை ஆலய வழிபாடு எனும் கட்டுரையில் **ஆ. ஆன்மாக்கள்; லயம் - வந்து ஒடுங்குதல் என்ற கருத்தைக் கொண்டுதான் ஆலயம் என்ற பெயர் வழங்கலாயிற்று. எங்கும் வியாபகமான பரமேஸ்வரனை மனதில் ஒருமுகப்படுத்தித் தியானிக்க எல்லோராலும் இயலாது. ஆகவே எல்லா ஜீவான்மாக்களும் கடைத்தேறும் பொருட்டுப் பரமேஸ்வரன் ஆலய மூர்த்திகளில் அதிட்டித்து நின்று அருள் புரிகின்றார். ஆ- (தம்பம் விம்பம் கும்பம், எங்கும் லீயதே) மறைந்துநின்று அருள் புரிகின்றார் என்ற முறை யாகவும் கருத்து வழங்கப்படுகின்றது. ஆகவே, ஆலயம் முழுவதும் சிவஸ்வரூபமாகக் கருதப்படல் வேண்டுமென்பதே முனிவர்களின் கருத்தாகும். ஆலய த்தின் ஒவ்வொரு பகுதியிலும் சிவனின் பிரமதகணங்கள் அருவமாக நின்று சிவத்தை சேவித்து வருகின்றன. ஆகவே நாம் அப்பகுதிகளிற் செல்லும்போது வீண்வார்த்தை பேசாதும் ஆடம்பரங்கள் இல்லாதும் அடக்கத்துடனும் பக்தியுடனும் நடக்கவேண்டும். ஆலயத்தின் எப்பகுதியில்நின்று தவறு செய்தாலும் சிவகுற்றத்திற்கு நாம் ஆளாவோம். சிவபெருமானுக்கு "ஆசுதோஷி" என்று**

வடமொழியில் ஒரு பெயர் உண்டு. இதன் கருத்து விரைவில் சந்தோஷ மடைபவர் என்பதாகும். ஒருதரம் அவருடைய பெயரை உச்சரித்தலுமே சந்தோஷ மடைந்து அடியார்களுக்கு அருள்புரிவார். ஒரு சிறு தொண்டு செய்தாலுமே மிகுந்த சந்தோஷமடைந்து விடுவதே அவரது இயல்பான தன்மை. அர்த்தா பத்தி நியாயத்தால் ஒரு சிறு தவறு செய்தாலும் விரைவில் கோபங்கொண்டு தண்டனை கொடுத்துத் திருத்த முயல்வார் என்பது பெறப்படுகின்றது. ஆகவே எப்பொழுதும் நாம் ஆலயம் செல்லும்பொழுதும் , எங்கும் வணக்கம் செலுத்தும் பொழுதும் , சிறுதொண்டுகள் செய்யும் பொழுதும், அடக்க த்துடனும் பக்தியுடனும் அமைதியுடனும் நடந்து வரல் வேண்டும்.

ஆலயத்தில் விஸ்வருபமாக - தூலவடிவமாக அமைந்திருக்கும் ராஜகோபுரம், துவஜஸ்தம்பம், ஸ்தூபி, பலிபீடம், மூர்த்தி இவ்வைந்தையும் ஐந்து லிங்கங்களாக கருதி வழிபடல் வேண்டும். முதல் மூன்றும் ஸ்தூல லிங்கங்களாகும். தூலமான புலன்களால் கண்டு தரிசித்து வழிபடக் கூடியதாய் அமைந்திருப்பதால் ஸ்தூலலிங்கங்களென்று வழங்கலாயிற்று. பலிபீடம் பத்ரலிங்கமாகும். "பத்ரம்" என்ற சொல்லுக்கு மங்களம் , நன்மை என்பது கருத்தாகும். சீவனுக்கு மங்களத்தை உண்டாக்க வல்லமை பொருந்தியதால் பத்ரலிங்கம் என்று வழங்கலாயிற்று. பலிபீடத்தின் அருகே நின்று பன்னிரண்டு ம்றை அல்லது ஐந்து முறை அல்லது மூன்று முறை வணக்கம் செலுத்த வேண்டும். அவ்விடத்தில் நான் எனது என்ற ஆணவம் பலியிடப்படுகின்றது. அப்பொழுது அறிவு சுத்தமாகின்றது. சுத்தமான அறிவு சிவஸ்வருபத்தைத் தியானிக்கச் சாதகமாகின்றது. ஆகவே, நன்மை பயக்கும் தன்மையைக் கொடுப்பதால் இதற்குப் பத்ரலிங்கம் எனப்பெயர் வழங்கலாயிற்று. மூர்த்தி சூக்குமலிங்கம், ஸ்தூபி, முதலியவை போன்று ஸ்தூலப் புலன்களால் தரிசிக்கக்கூடியதன்று. சூக்குமமான அறிவினால் மூர்த்தியை உள்ளத்திலே தியானித்து வாக்கினால் அவருடைய துதியை ஓதி வழிபடவேண்டும். பரமபதி ஆலயத்தினுள் அமர்ந்திருக்கும் மூர்த்தியில் நின்று அருள்புரிகின்றார். இவ்வழிபாட்டுமுறை சூக்குமலிங்க வழிபாடு எனக் கூறப்படும். என ஆலயம் பற்றிய லிங்கங்கள் பற்றியும் சாஸ்திரிகள் விளக்கியுள்ள்ளார். அதேபோல் சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டே சரீரமெடுக்கின்றார். என்பதனை

"பரமேஸ்வரனுக்கு பஞ்சபூதங்களாலான சரீர அமைப்புக் கிடையாது. பக்தர்களுக்கு அருள் செய்வதற்காகவே சரீரத்தைத் தாங்கியுள்ளார். "அநுக்கிரகாய பக்தாநாம் ஸ்வேச்சயா கிருஹ்ணதே தநும்" என்று ஆகமநூல் இவ்வுண்மையை விளக்குகின்றது.

என வர்ணிப்பது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று 'கும்பாபிஷேக மகிமை'' எனும் கட்டுரைமூலம் கும்பாபிஷேகக் கிரியைகளை 8 பிரிவுகளாகப் பிரித்து நோக்குவதும் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று நடைமுறைகள் சம்பிரதாயங்கள் என்பவற்றினை விளக்கும் 'இந்து கலாச்சாரம்' எனும் கட்டுரை சிறப்பான தன்மையில் 10 பிரிவுகளாக விளக்குவது சிறப்பானதாக அமைகின்றது. இதில் தீப பூஜை பற்றியது தனித்துவமானதாகும். அதனைவிட யந்திரங்கள் சாக்தக்கிரியைகள் வழிபாடுகளில் முக்கியத்துவம் பெறும் மந்திரங்களினை பீஜாஷரங்கள் என்னும் கட்டுரை விளக்கிநிற்கின்றது.

இவற்றைவிட உபநிடதங்கள் ஆகமபிரமாணங்கள் ஆகியவற்றை விளக்கும் தேர் பற்றிய இரதோற்சவம் எனும் கட்டுரை விபூதியின் பெருமைகளைக் கூறும் சம்பாஷணைகள் குறிப்பிடத்தக்கன. அதேபோன்றே வைதிக மந்திர ஆகம விளக்கங்களைச் சுட்டிநிற்கும் நவராத்திரித் தத்துவம் சம்பாஷணையும் குறிப்பிடத்தக்கது. தத்துவம் பற்றி விளக்கும் கட்டுரையாக இந்துதர்மம் விளக்குகின்றது.

இவ்வாறாக . சாஸ்திரிகளின் ஆக்கங்கள் யாவும் சம்ஸ்கிருதமொழிச் சார்புடைய தன்மையில் விளக்கி நிற்பதனைக் காணமுடிகின்றது. இவை சாஸ்திரிகளுக்குரிய ஒப்பீட்டடிப்படையில் திகழும் பரந்த அறிவினைப் புலப்படுத்தும் சிறந்த படைப்புக்களாக விளங்குகின்றன.

## 8

## சாஸ்திரிகளின் மாணவர் மரபு

தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து குடியேறி ஆசிரியப் பணியை தமது சேவையாகச் செய்து தமக்குரிய மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை சாஸ்திரிகளுக்கும் உண்டு.

சாஸ்திரிகள் யாழ்ப்பாணம் வந்தவேளை அவரிடத்தில் மாணவர்கள் கொண்ட எதிர்பார்ப்பு பற்றி சாஸ்திரிகளின் முதல்மாணாக்கர் பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள் அவர்கள் கூறுகையில்:

**"ஈழநாட்டில் சம்ஸ்கிருத்க் கல்வி தொன்றுதொட்டுப் பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. சமய அடிப்படையில் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து வந்த தமிழ் மக்களிற் பெரும்பாலானோர்க்கு சம்ஸ்கிருத அறிவில் நாட்டம் இயல்பாகவே இருந்து வந்தது. மேலும், ஈழநாட்டின் உயர்தரக் கல்விமுறை பல வருடங்களுக்கு முன் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட பொழுது பீ.ஏ. முதலிய பட்டங்களை நாடிய மாணவர்கள் ஆரம்ப நிலையில் சம்ஸ்கிருதம், பாளி, இலத்தீன் , கிரேக்கம் ஆகியவற்றுள் ஒன்றினைக் கட்டாய பாடமாகக் கற்க நேரிட்டது. இவ்வொழுங்கின்படி இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைத் தேர்ந்து கற்று வந்தோரும் நாளடைவில் அவற்றைக் கைவிட்டு சம்கிருஸ்தத்தையே பயிலத் தலைப்பட்டனர். மேலும் , இராமநாத வள்ளல் போன்ற பெரியார்கள் தாம் நிறுவிய உயர்தரக் கல்லூரிகளிற் சம்ஸ்கிருதக் கல்வி வளர வழிவகுத்ததமைந்தனர். தனிச் சம்ஸ்கிருதப் பாடசாலைகளும் ஆங்காங்கு தோன்றலாயின. இச்சூழ்நிலையில் எம்குருநாதர் வருகை புரிந்து சம்ஸ்கிருதக் கல்வியின் வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவினார். அந்தணச் சிறுவர் சம்ஸ்கிருதம் படிக்கும் வாய்ப்பும் வேதங்களை முறைப்படி ஓதுதலிற் பயிற்சி பெறும் சந்தர்ப்பமும் ஏற்படலாயின".**

எனக் கூறுவதனை அவதானிக் முடிகின்றது. இவ்வாறாக ஆரம்ப சம்ஸ்கிருத மொழி உயர்தர சம்ஸ்கிருதமொழி பீ.ஏ. முதலான பட்டங்களுக்கு சம்ஸ்கிருத மொழி, பாடசாலை சம்ஸ்கிருதமொழி, குருகுலங்களில் (சம்ஸ்கிருத பாடசாலைகளில்) சம்ஸ்கிருத மொழி, வேதம் என சாஸ்திரிகளிடம் கற்றோர் பல்வேறுபட்ட சிறப்புடன் இன்றும் விளங்குவதனைக் காணமுடிகின்றது. உயர்ந்த பேராசிரியராகவும், அதிபர்களாகவும், பண்டிதர்களாகவும், சைவப்புலவர்களாகவும், ஆசிரியர்களாகவும், சிவாச்சாரியார்களாகவும், அரச மற்றும் தனியார் தொழில் புரிபவர்களாகவும் பல மாணவர்கள் திகழ்வதனைக் காணும் அதேவேளை மாணவர்களும் சாஸ்திரிகளின் பெயரினை நிலைபெறச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சாஸ்திரிகள் தாம் சுழிபுரத்தில் வந்து கற்பிக்கத் தொடங்கிய காலம் முதலாக இன்று அறியக் கூடிய வகையில் சிறப்புப் பெற விளங்கும் சாஸ்திரிகளின் மாணவர்களை நோக்கலாம்.

சுழிபுரத்தில் சாஸ்திரிகள் கல்வி கற்பித்த காலத்தில் சம்ஸ்கிருதம் கற்றவர்களுள் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்,

கோப்பாய், பண்டிதர் ச. பஞ்சாக்ஷரசர்மா, சுழிபுரம் பாலகுருசாமி சர்மா, வட்டுக்கோட்டை அ. நாகராஜசர்மா, அ.கண்ணலிங்கசர்மா, அ.இராமச்சந்திரசர்மா, அ.கணேசசர்மா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாக அறியமுடிகின்றது.

இவர்களுள் பேராசிரியர் குருக்கள் அவர்களும் ச.ப. சர்மா அவர்களும் சம்ஸ்கிருதமொழியின் விருத்தியில் தமது அறிவினைச் செலுத்தி விருத்தி செய்வதோடு சாஸ்திரிகளின் மாணவ சமூகத்திற்கு இரத்தினங்களாகவும் திகழ்கின்றனர்.

பண்டிதமணியின் மும்மொழிக் காவிய பாடசாலையில் படித்த மாணவர்களுள் சுழிபுரம் பண்டிதர் சு.சண்முகரட்ணசர்மா, ஆசிரியமணி பஞ்சாட்சரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பரமேஸ்வரக் கல்லூயில் சாஸ்திரிகளிடம் சம்ஸ்கிருதம் கற்ற மாணவர்களின் தொகை எண்ணிலடங்காது. எட்டாம் வகுப்புவரை கட்டாயபாடமாக இருந்துவந்த சம்ஸ்கிருத மொழியினை பரமேஸ்வராக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் அனைவரும் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சாஸ்திரிகள் கற்பித்த காலத்தில் சுன்னாகம் குஞ்சிதபாதக் குருக்கள், மயிலணி சோமாஸ்கந்தக் குருக்கள், மயிலணி சர்வேஸ்வரக்குருக்கள் கீரிமலை - நகுலேஸ்வரக்குருக்கள், சா.விஸ்வநாதக்குருக்கள், க.வைத்தீஸ்வரக்குருக்கள் தா. மகாதேவக் குருக்கள் முதலான பல மாணவர்கள் கல்வி கற்றனர்.

பிராம்மண சமாஜத்தில் சம்ஸ்கிருத வகுப்புக்கள் பலதரப்பட்ட பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களுக்கும் சம்ஸ்கிருதத்தை ஊட்டுவதாக இருந்தது. இந்நிலையில் உருவாகியவர்களே ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பண்டிதர்களும், சைவபரிபாலன சபை சைவப்புலவர்களும் ஆவார்கள். இவர்கள் வரிசையில் பண்டிதர் துரைசிங்கம் பண்டிதர் நடராஜா, பண்டிதர் தம்பையா, பண்டிதர் தம்பிப்பிள்ளை, பேராசிரியர் பண்டிதர் ஆ.சதாசிவம், பண்டிதர் க.பொ. இரத்தினம், சைவப்புலவர் வ.கந்தசாமி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாவலர் சபையின் கீழ் வேதாகமப் பயிற்சி பெற்றவர்களுள் க. லக்ஷ்மணசர்மா சு. சண்முகநாதசர்மா, இ. ஸ்ரீரங்கநாதசர்மா. இ.கிருஷ்ணகுமார சர்மா. சோ. நிர்மலேஸ்வர சர்மா, தி.பாலசுப்பிரமணிய சர்மா, இ.குகதாஸ சர்மா, சீ. சுப்பிரமண்யசர்மா ஆகியோர் மேற்பிரிவில்

சித்தியெய்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட சாகித்ய சிரோமணி கோப்பாய் ப. முத்துகுமாரசாமிக்குருக்கள் சாஸ்திரிகளின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பி.ஏ.முதலான பட்டங்களுக்காக சம்ஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்றவர்கள் வரிசையில் மானிப்பாய் இராஜநாயகம், மாவிட்டபுரம் து. சுந்தரமூர்த்திக்குருக்கள், சரவணபவன் (சிற்பி) , கொக்குவில் இ. கந்தையா, திருமதி இரத்தினா நவரத்தினம், வட்டுக்கோட்டை இ. பாலசுப்பிரமணிய ஐயர், வெங்கடேஸ்வர சர்மா, பொன் கிருஷ்ணபிள்ளை, ச.ஈஸ்வரசர்மா, ஆ.சபாரத்தினம் முதலான மாணவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிவாச்சாரியார்களாக விளங்குபவர்கள் வரிசையில் வல்வெட்டித்துறை சிவன்கோயில் ச.வரதராஜக்குருக்கள், நல்லூர் கா. இரத்தின கைலாசநாதக்குருக்கள், முன்னேஸ்வரம் இ. சதானந்த கார்த்திகேயக குருக்கள், முன்னேஸ்வரம் இ.குமாரசுவாமிக்குருக்கள், நீர்வேலி சு.இராஜேந்திரக்குருக்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதைவிட சாஸ்திரிகளிடம் வீட்டில் படித்த மாணவர்கள் தொகை எண்ணிலடங்காது. அவர்களுள் தி. கணேச சர்மா, தி.சங்கர நாராணய சர்மா, சாம்பசிவ சர்மா, நடனசபாபதிசர்மா முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறாக எண்ணிலடங்காத சாஸ்திரிகளின் மாணவர்களுள் சாஸ்திரிகள் மீது அன்பு செலுத்துபவராக மணிவிழாச் சபையில் ச. பஞ்சாக்ஷரசர்மா, இரத்தினசபாபதி சர்மா, சு.சண்முகரத்தினசர்மா, சு.இராஜேந்திரகுருக்கள் ஆகியோர் இடம்பெற்றதனை அவதானிக்க முடிகின்றது.

சாஸ்திரிகளுக்கு பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் தாம் எழுதி வெளியிட்ட சம்ஸ்கிருத இலகுபோதம் I நூலினைக் குருவின் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். அத்தோடு குருஸ்தோத்திரம், ஷஷ்டியப்த பூர்த்திக்கு வழங்கிய பாராட்டுப்பத்திரம் ஆகியனவும் குருவிற்கான காணிக்கையாகவே விளங்குகின்றன.

இவ்வாறன சாஸ்திரிகளின் பரந்த கல்விச் செல்வத்தினைப் பருகிக் கொண்ட மாணவர்கள் பல்வேறு தன்மைகளிலும் சிறப்பு பெற்று விளங்குவதனைக் காணமுடிகின்றது.

இன்னோரன்ன சிறப்புக்களோடு விளங்கிய சாஸ்திரிகள் தமது சம்ஸ்கிருத மொழியின் புலமையினூடாகவும், வைதிக தொண்டின் மூலமாகவும் அந்தண சமூகத்திற்கு செய்த சேவைகள் என்றும் நினைவுகூறத்தக்கன. அத்தகையதான சிறந்த சேவையில் வைதிகப் பணி மிகச்சிறந்ததாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்பே வைதிக வித்தகர் எனும் சிறப்புப்பெயருடையவராக சாஸ்ரிகளின் பணிகள் நினைவில் கொள்ளத்தக்க நினைவலைகளாக மிளிர்கின்றது.

△△△△△

பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.